சுதேசமித்திரன்

வாரப்பதிப்பு

Vol. 13 No. 11 12-4-'42 Price 2 Annas



மூன்று தலை முறைகள்.

தாய் தன் மகளுக்கு
வுட்வார்ட் வைத்தியனின்
கிரைப் வாட்டர் என்னும்
மருந்துத் திராவகம்
எப்படி குழந்தைக்கு சுகம்
தருகிறதென்று சொல்லுகிறாள்.

WOODWARD'S GRIPE WATER

W. WOODWARD LTD., LONDON, ENGLAND

சுதேசமித்திரன் வாரப் பதிப்பு

சென்றவார நிகழ்ச்சிகள்

இந்த யுத்தத்திற்கு என்ன பெயர்?

இந்த யுத்தத்திற்கு என்ன பெயர் வைப்பது என்பது பற்றி யோசனைகள் கூறுமாறு அமெரிக்க மக்களுக்கு மிஸ்டர் ரூஸ்வெல்ட் கோரிக்கை விடுத்திருக்கிறார். அவர் கூறுவதாவது:—

இரண்டாவது உலக யுத்தம் என்று இந்த யுத்தத்திற்குப் பெயரளிப்பது உசிதமாகத் தோன்றவில்லை. சிறிய நாடுகளின் ஜன நாயகத்தைக் காப்பதற்கான போர் என்று கூறுவது பொருத்தமாகத் தோன்றுகிறது.

* * * *

கொழும்புவில் எதிரி விமானங்கள் குண்டுவீச்சின

கொழும்புவில் சென்ற 5-ந் தேதி காலை விமானப் படையெடுப்பு எச்சரிக்கை விடுக்கப்பட்டது. இதற்கு முன் இரு விசைகளும் இவ்வளவு அதிக நேரம் அபாயச் சங்கு ஒலித்தது கிடையாது. பீரங்கி சுடும் சப்தம் காதில் விழுந்தது. உடனே திறந்தபள்ளங்களில் (டிரெஞ்சுகள்) இருந்த ஜனங்கள் குறைந்தது 25 விமானங்களைக் கண்டனர். விமானங்களைச் சுற்றி பீரங்கி குண்டுகள் வெடித்தன. இரண்டொரு இடங்களில் எதிரி குண்டுகள் விழுந்ததாகத் தெரிகிறது. நமது விமானப்படை அணிவகுத்துப் பறந்து சென்றது.

* * * *

ஜப்பானியக் குரூய்ஸர் தீப்பற்றியது

வெடி குண்டு வீசக்கூடிய பெரிய அமெரிக்க விமானங்கள் சென்ற 4-ந்தேதி இரவு வங்காளக்குடாக்கடலில் அந்தமான் தீவுகளுக்கருகே ஜப்பானியக் கடற்படையை மிகத் தீவிரமாகத் தாக்கின.

"ஒரு ஜப்பானியக் குரூஸர் மீது நேராக ஒரு குண்டு விழுந்தது. ஒரு துருப்புக் கப்பல்மீதும் இரு சப்ளைக் கப்பல்கள்மீதும் குண்டுகள் விழுந்தன. குரூஸர் தீப்பற்றியது. மற்ற கப்பல்கள் பெருஞ் சேதமுற்றதாகத் தெரிகிறது.

படையெடுப்பதற்கான முஸ்தீப்புடன் இருந்த அக்கப்பல்கள் அந்தமான் தீவுகளுக்குக் கிழக்குப் புறத்தில் உள்ள பிளேர் துறைமுகத்தில் தடுக்கப்பட்டு மேற்கண்டவாறு தாக்கப்பட்டன.

இந்தியாவிலுள்ள யுனைடெட் ஸ்டேட்ஸ் விமானப்படையின் தளகர்த்தரான மேஜர் ஜெனரல் லூயி பிரர்டன் எதிரிக் கப்பல்களைத் தாக்கிய விமானப்படைக்குத் தலைமை வகித்தார்.

எதிரி விமானங்கள் அமெரிக்க விமானப்படையைத் துரத்த வந்ததுடன் அப்படைமீது கப்பல்களிலிருந்து பீரங்கிப் பிரயோகம் செய்யப்பட்டதாகவும் அவ்வறிக்கை கூறுகிறது. ஆனால் அமெரிக்க விமானப் படைக்குச் சேதமில்லை.

பர்மா யுத்தம்

ப்ரோம் முனையில் எதிரிப் படைகளின் தாக்குதல் பலமாக இருந்ததால் நேசதேசப் படைகள் முன்னேறியிருந்த ஸ்தலங்களிலிருந்து முக்கிய அரண் வரிசைக்கு வாபஸாகிவிட்டன.

இம்மாதம் முதல் தேதியன்று மாலை ப்ரோமிலுள்ள நேசதேசப் படைகளை ஏராளமான எதிரிப் படைகள் தாக்கின. முக்கிய ரஸ்தாவுக்குக் கிழக்கே உள்ள காட்டுப் பிரதேசம் வழியாக அவர்கள் அரண் வரிசைகளை துளைத்துக்கொண்டு ப்ரோமுக்குத் தெற்கே உள்ள உயர்ந்த பிரதேசத்தை அடைந்தனர். ராத்ரி முழுதும் சண்டை நடந்தது. நேசதேசப் படைகள் முந்திய தினம் விடியற்காலை நகருக்கு வடக்கே உள்ள ஸ்தலத்தை அடைந்தன. பாக்கிப் படைகள் புதிய பிரதேசத்திலிருக்கின்றன.

மார்ச் 31-ந் தேதி வட பர்மாவிலுள்ள ஒரு நகரத்தை இரண்டு வரிசையில் வந்த விமானங்கள் தாக்கி குண்டுகள் வீசின. முதல் வரிசை ரயில்வே ஸ்டேஷனுக்கருகில் குண்டுகளை வீசியது. இதனால் கூலிகளுக்கும் ஜனங்களில் சிலருக்கும் காயமேற்பட்டது. இரண்டாவது வரிசை விமானக் கூடத்தைத் தாக்கியது. ஆனால் குண்டுகளெல்லாம் வேறிடத்திலேயே விழுந்தன. எவ்விதச் சேதமுமில்லை.

மத்ய பர்மாவில் விமானங்கள் வந்திறங்கும் இடமொன்றின் மீதும் மேற்படி தினத்தன்றே குண்டுகள்வீசப்பட்டன. ஆனால் சேதமில்லை.

* * * *

டாங்கு வீழ்ச்சிக்குக் காரணம்

சுற்றி வளைத்துக்கொள்ளப்பட்ட படைகளுக்குப் போய்ச் சேர வேண்டிய ஸப்ளைகள் குறைந்ததே டாங்கூ வீழ்ச்சிக்கு முக்கிய காரணமென்று அஸோஸியேடட் பிரஸ் விசேஷ நிருபர் எழுதுகிறார். உணவு, தாகத்துக்குத் தண்ணீர், தளவாடங்கள் யாவும் குறைய ஆரம்பித்துவிட்டன. எனவே, நகரைக் காத்து வந்த துருப்புகளுக்கு உதவி அனுப்ப சீனப்படைகளால் முடியவில்லை.

டாங்கூவைச் சுற்றிய ஜப்பானிய நிலையங்கள் தென் மேற்கிலும் வடக்கிலும் மிகப் பலமாக இருந்தன. கிழக்கில்தான் அவர்களது படை பலம் ஊனமாக இருந்தது. ஆகவே அந்தப் பக்கத்தில் சீனர் தாக்கினர். இப்படைகள் டாங்கூக்கு வடகிழக்கே சுமார் ஏழு மைல் தூரத்திலிருந்த பிரதான சீனப் படைகளுடன் போய்ச் சேர்ந்தன. டாங்கூவில் ஒரு வாரத்துக்குமேல் இடைவிடாமல் குண்டு வீச்சும், பீரங்கிப் பிரயோகமும் நடந்தது. இந்நகரைப் பாதுகாப்பதற்காக செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகள் சீனப் படைகளின் சரித்திரத்தில் முக்கிய இடம் பெறும்.

* * * *

ராணுவ வேலை செய்யப் பதிவு

ஜனாதிபதி ரூஸ்வெல்டும், பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்திலிருந்து அமெரிக்காவுக்கு வந்துள்ளோரும் உள்படச் சுமார் 13.590,000 பேர் குறிப்பிட்ட ராணுவ வேலைகள் செய்வதற்காக ஏப்ரல் 27-ம் தேதியன்று யு எஸில் பதிவு செய்துகொள்வர். 45 முதல் 64 வரை வயதானவர்களே இவர்கள்.

* * * *

மால்டா மீது குண்டு வீச்சு

மால்டாமீது இம்மாதம் 1-ந் தேதி மீண்டும் ஜெர்மன் விமானங்கள் ஏராளமாக வந்து வெகு கடுமையாகத் தாக்கின. துறைமுகத்திலிருந்த ஒரு கப்பல் தாக்குண்டது. ஆறு ஜெர்மன் விமானங்கள் நாசம் செய்யப்பட்டன: 6 சேதப்படுத்தப்பட்டன. தாக்குதல் மாலையிலும் நடந்துகொண்டிருந்தது.

* * * *

ஹிட்லரைத் தோற்கடிக்க

மாஸ்கோவில் முன் சீன தூதராக இருந்த ஜெனரல் யாங்சீச் கூறியதாவது:—

சமீபத்தில் 2 புதிய போர்க்களங்கள் ஆரம்பமாகும். வட ஐரோப்பாவில் ஆங்கிலோ அமெரிக்கப் படைகள் தாக்குதலை ஆரம்பிக்கும். ஜெர்மனியர் மீண்டும் மாஸ்கோவைப் பிடிக்க நேரில் முயலுவர். காகஸஸ் வழியாக ஜெர்மனியர் முன்னேறுவதற்கு அன்றி இங்கிலாந்து மீது படையெருபதற்கான சந்தர்ப்பம் குறைவாக இருப்பதாக நம்பப்படுகிறது சோவியத் ஜெர்மன் போரின் முடிவைப் பொறுத்தே ஜப்பான் ஸைபீரியாவைத் தாக்குவதிருக்கிறது.

ஹிட்லரைத் தோற்கடிக்க இன்னும் 2 வருஷங்களேனு மாகும். பஸிபிக்கில் நேசதேசத்தினர் பதிலுக்குத் தாக்குவதைத் துவக்கக் குறைந்த பக்ஷம் 12 மாதங்களேனும் ஆகும். கடலில் ஜப்பானுடன் நடக்கும் போரை முடிக்க இன்னும் 12 மாதமாகும். ஜெனரல் யாங் பஸிபிக் யுத்தம் ஐரோப்பிய யுத்தம் முடிந்த பிறகே ஆரம்பமாகுமென நம்புகிறார்.

* * * *

ஆஸ்திரேலியாவின் முஸ்தீப்பு

அமெரிக்க ராணுவத் தலைமைக் கார்யாலயத்திலுள்ள "ஸிட்னி ஸன்" பத்திரிகையின் விசேஷ நிருபர் எழுதுவதாவது:—

ஆஸ்திரேலியா 2 பெரிய ராணுவப் பிரதேசமாகப் பிரிக்கப்பட்டது. ஏக காலத்தில் பலவிடங்களில் ஜப்பானியர் படையெடுக்கக் கூடும் என்ற அனுமானத்தின் மீது ராணுவ ஏற்பாடுகள் செய்யப்படும். இந்த அனுமானத்திற்கிணங்க நேசதேசத் துருப்புகள் ஏற்கெனவே பல இடங்களில் நிறுத்தப்பட்டிருக்கின்றன. 2 ராணுவப் பிரதேசங்களது எல்லைகள் நிர்ணயிக்கப்படவில்லை. மாகாண எல்லைகள் எடுபடுமெனத் தெரிகிறது. ஜெனரல் லாவரிக்கும், ஜெனரல் மாக்கேயும், ஜெனரல் பிளாமியின் கீழ் வேலை செய்வர், ஜெனரல் பிளாமி, ஜெனரல் மக் ஆர்தருடன் 3 விதப் படைகளும் ஒத்துழைப்பது பற்றி கலந்து பேசுவார்கள். மேஜர் ஜெனரல் பிரெட்டையும் அவர்கள் கலந்து பேசுவார். அவர்கள் பூரணமாக ராணுவ விமான ஒத்துழைப்பு விவரங்களை நிர்ணயிக்க ஆரம்பித்தார்கள்.

ஜெனரல் பிரெட் யுனைடெட் ஸ்டேட்ஸில் 2 விமானப் படைகளிருப்பதாகவும் ஒரு பகுதி ராணுவத்திற்கும் இன்னொரு கடற்படைக்கும் சேர்ந்ததாக இருப்பதாகவும் இம்மாதிரியே ஆஸ்திரேலிய நேச தேச விமானங்களை ராணுவத்தில் சேர்க்க வேண்டுமென்றும் கூறுவதாகத் தெரிகிறது.

ஜெனரல் பிளாமியின் சிபார்சின் மேல் சர்க்கார் ஆஸ்திரேலியாவிலுள்ள எல்லாப் படைகளையும் யுத்த காலத்திற்கு வேண்டிய முழு அளவுக்குக் கொண்டுவரும்படி உத்தரவிட்டிருப்பதாகவும், இதனால் ராணுவத்திற்கு ஆட்களைச் சேர்ப்பது துரிதப்படுமென்றும் சர்க்கார் போர்க்களப் பயிற்சியை அதிகரிக்கத் தீர்மானித்திருப்பதாகவும் யுத்த மந்திரி மிஸ்டர் போர்ட் தெரிவித்தார்.

கிரைஸ்ட் சர்ச்சில் நியூஜிலாந்திலுள்ள பிரிட்டிஷ் ஹை கமிஷனர் ஸர் ஹென்றி பாட்டர்பீ பேசுகையில் கூறியதாவது:- நியூஜிலாந்து மீது பெரிய படையெடுப்பு ஏற்படும்போலிருந்தால் இந்தப் பிரதேசத்திலுள்ள தங்களது உறவினரைப் பாதுகாக்க பிரிட்டிஷ் சர்க்காரும் பிரிட்டிஷ் மக்களும் சகல தியாகங்களையும் சகல முயற்சிகளையும் செய்வர். இவர்களை பிறர் ஜயிக்கவும் அழிக்கவும் வொட்டாமல் பாதுகாக்க சகல முயற்சியையும் செய்வார்கள். தீரசாலிகள் சமாளிக்க முடியாத அபாயமும் சோதனையும் கிடையாதென்று பிரிட்டிஷார் அனுபவ மூலம் கண்டுகொண்டிருக்கின்றனர். பிரிட்டிஷாரது முன்சென்று தாக்கும் உணர்ச்சியில் அவ நம்பிக்கை கொண்ட எவரும் ஸெயிண்ட் நஸேர் தாக்குதல்பற்றிய விவரங்களைப் படிக்க வேண்டும்.

* * * *



சந்தோஷம்!

மௌலானா ஆஸாத், பண்டித ஜவஹர்லால் நேரு, ஸர் ஸ்டாபோர்ட் க்ரிட்ஸ் மூவரும் சம்பாஷித்த பின் வெளியே வந்தபோது எடுத்த படம்.

நடப்பார். யுத்த காலத்தில் அனுவசியமாக வோ அளவுக்கு மிஞ்சியோ குறுக்கிட மாட்டார். சுவாதீனமுள்ள ஆஸ்டிரேலியாவில் நேற்று பிரதம மந்திரி கர்டின் தானாக உறுதி கூறவில்லையா?

பாதுகாப்பு விலக்கு திட்டத்திற்கே சோதனை கல்லாக மாறி வருகிறது. எதிர்காலத் திட்டத்தில் அடங்கிய சந்தேகாஸ்பதமான அம்சங்கள் உள் கருத்துடன் கூடியவையோ என்று கேட்க இடம் தருகிறது. அதற்கு

திட்டம் தேறுமா?

ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன் எழுதியது

★

திட்டத்தைப்பற்றி அபிப்பிராயம் உருவாகி வருகிறது. சாதகமாக இல்லை. இடர் இடைக்கால ஏற்பாட்டில், பாதுகாப்புப் பொறுப்பை ஒதுக்கி வைக்க யாரும் சம்மதிக்கவில்லை. சாதாரண காலங்களில் சூத்திரக் கயிறு பொக்கிஷ இலாகாவில் இருக்கும். யுத்த காலத்தில் விசை பாதுகாப்பில் தான் இருக்கும். அதை மாற்றத் தயங்குவது சந்தேகத்தை வளர்க்கிறது. திட்டம் சந்தேகத்தை விலக்க உத்தேசிக்கப்பட்டது. சந்தேகம் விலகவில்லை. சமாதானம் கூறுவதெல்லாம் சந்தேகத்தையே ஊர்ஜிதப்படுத்துகிறது. பாதுகாப்பில் இந்தியர்களுக்கில்லாத அக்கரை அன்னியர்களுக்கு இருப்பதற்கில்லை. இந்தியர்களுக்குள் இந்த விஷயத்தில் பின்ன அபிப்பிராயம் இருப்பதாகக் காணவில்லை. எல்லாக் கட்சிகளும், எல்லாத்தலைவர்களும் ஒருமுகமாகப் பேசுகிறார்கள். 'எல்லாரும் வேண்டினாலும் கிடைக்காது' என்கிறார் கிரிப்ஸ். ஏன்? கேட்பது நியாயமில்லையா? நம்ப மனமில்லையா? விட்டுக்கொடுக்க வழிமறிப்பது யார்?

கிரிப்ஸ் கெட்டிக்காரர்; அவருடைய அந்தரங்க சுத்தியிலும் நியாய புத்தியிலும் எல்லாருக்கும் நம்பிக்கையுண்டு. அவர் எடுத்து வரும் பிரயாசையிலும் காட்டி வரும் பொறுமையிலும் நம்பிக்கையும் வளர்ந்து வருகிறது. பெரிய பிரச்னையை ஸௌஜன்யமாகத் தீர்க்க இது தான் தருணம்; அவர்தான் லாயக்கு. எதிர்காலத்தில் பூரண அதிகாரத்தை விட்டுக்கொடுக்கத் தயார் என்கிறார்கள். இடைக்காலத்தில் வபையான அதிகாரத்தைப் பங்கிட்டுக்கொள்ள ஏன் பின் வாங்குகிறார்கள்? பாதுகாப்பு மந்திரிக்குப் பூர்ண சுவாதீனம் இருக்கப்போவதில்லை. ராஜப்பிரதிநிதிக்குக் கட்டுப்பட்டே நிர்வகிக்கப் போகிறார். சேனாதிபதியின் யோசனைகளை அநுசரித்தே

இடம் கொடுப்பது புத்திசாலித்தனமல்ல. நிர்ப்பந்த நிலைமையைக் காங்கிரஸ் அறியும் இந்த நெருக்கடியில் கடமையைச் செலுத்த வசதி கோருகிறது. கூடிக் கூடிப் பேசியும் முடிவு கூறவில்லை. முடிவு கட்டுவது எளிது முறிந்து விடும்! தவிர்க்கவே தவிக்கின்றனர். பிடிவாதம் பயன்படாது. சமரஸத்திற்கு வழி காணவேண்டும். என்ன செய்யப்போகிறார் கிரிப்ஸ்? இதைச் சமாளிக்க சுவாதீனமில்லாமலா இவ்வளவு தூரம் வந்தார்? காலம் தாழ்த்த இது சமயமல்ல. சந்தேகம் தீர சமயம் காத்திராது. நம்பினால் எல்லாருக்கும் நல்லது.

(இம் மாதம் முதல் தேதி எழுதப்பட்டது)



டாக்டர் அம்பேத்கார், ராவ் பகதூர் எம். ஸி. ராஜா, ஸர் ஸ்டேபோர்ட் க்ரிப்ஸ் ஆகியோர் கூடிப் பேசிய சமயம் எடுத்த படம்.



மஹாத்மாவுடன்

ஸர் ஸ்டேபோர்ட் க்ரிப்ஸ் மஹாத்மாஜியுடனும் ஸ்ரீ ஸி. ராஜகோபாலாச்சாரியாருடனும் தனித் தனியே சம்பாஷித்தார். அவர்கள் இருவரும் பேச்சு முடிந்து வந்தபோது எடுத்தவை.

தலைவர்கள் கருத்து

ஸர் ஸ்டாபோர்டின் ரேடியோ பிரசங்கம்

ஸர் ஸ்டாபோர்டு கிரிப்ஸ் மார்ச் 30-ந் தேதி இரவு ரேடியோவில் ஒரு பிரசங்கம் செய்தார். இந்திய மஹா ஜனங்களுக்கு அவர் ஒரு விண்ணப்பம் விடுத்தார்.

"பல வருஷங்களாக இருதரப்பாருக்குமிடையே இருந்த அவநம்பிக்கையின் பயனாக இப்போதும் எத்தனையோ கஷ்டங்களிருக்கலாம். ஆனால் கடந்ததை நினைத்து கவலையடையாமல் தற்சமயம் நான் முன் வந்து செய்யும் முயற்சிக்கு ஆதரவளித்து இந்தியாவில் சுயவாட்சி நிலைப்பதற்கான ஏற்பாடுகளை என்னுடன் கலந்து செய்யும்படி கேட்டுக் கொள்ளுகிறேன். எங்களை நம்புங்கள்—எங்கள் சிநேகத்தை ஏற்றுக் கொள்ளுங்கள்" என அவர் தமது பிரசங்கத்தில் குறிப்பிட்டார்.

* * * *

பிரயாண ஒத்திவைப்பு

ஸர் ஸ்டாபோர்ட் க்ரிப்ஸ் இந்தியாவிலிருந்து பிரயாணமாவதை ஒத்திவைத்திருக்கிறார். இம்மாதம் 2-ம் தேதி காலை நடந்த பத்திரிகைக் காரர்கள் கூட்டத்தில் அவர் தெரிவித்ததாவது:—

இந்தியாவிலிருந்து பிரயாணமாவதை நான் ஒத்தி வைக்கிறேன். திங்கட் கிழமை புறப்படுவதென்று ஏற்பாடு செய்திருந்தேன். ஆனால் இன்னும் சிறிது காலத்துக்கு இங்கேயே தங்கியிருக்க இப்பொழுது முடிவு செய்திருக்கிறேன், பொது நிலைமையில் எனக்குள்ள அபிப்பிராயம் காரணமாக அடுத்த வாரத்தில் ஏதாவது நன்மை செய்ய முடியுமென நான் எண்ணுவதே மேற்படி முடிவுக்குக் காரணம்.

பொதுப் படையாக ஒரு விஷயம் கூறலாம். அதாவது, தகராருள்ள பிரச்னை சம்பந்தமான அபிப்பிராய பேதம் ரொம்பவும் குறைந்து வருகிறது. இருதரப்பிலும் நல்லெண்ணம் மட்டுமிருந்தால் கஷ்டங்களைத் தீர்த்துவிடலாம். இந்தச் செய்ய வேண்டுமென்பதே எனது ஆவல்.

* * * *

ராணுவத் தலைவருடன் சம்பாஷணை

மௌலான் ஆஸாதும் பண்டித நேருவும் சென்ற 3-ம் தேதி மாலை 5-45 மணிக்கு ஸர் ஸ்டாபோர்டின் ஜாகைக்குச் சென்று அங்கிருந்து இந்திய ஸேனாதிபதியின் வீட்டிற்குப் போயினர்.

ஸர் க்ரிப்ஸ் தனி காரில் அவர்களுடன் சென்றார். அவர் ஆஸாதையும் ஜவஹரையும் ஜெனரல் வேவலுக்கு அறிமுகப்படுத்திவிட்டு, அவர்கள் சம்பாஷணையைத் தொடங்கியதும் தமது ஜாகைக்குத் திரும்பி விட்டதாகத் தெரிகிறது.

மௌலானா ஆஸாதும் நேருவும் சுமார் 1 மணி நேரத்துக்கு மேல் சம்பாஷித்து விட்டு ராத்திரி 7-மணிக்கு ஸர் க்ரிப்ஸின் ஜாகைக்குப் போனார்கள். அவர்கள் அங்கு சுமார் 15 நிமிஷ நேரம் தங்கியிருந்து அப்பால் தங்கள் ஜாகைக்குத் திரும்பினர்.

மௌலானாவைப் பத்திரிகைக் காரர்கள் பேட்டி கண்டபொழுது அவர் எதுவும் சொல்ல மறுத்து விட்டார். ஆனால் "நீங்கள் நம்பிக்கையுடன் இருக்கிறீர்களா?" என்ற கேள்விக்கு மட்டும் அவர், "இப்பொழுது ஹேஷ்யமாக ஒன்றும் சொல்லுவதற்கில்லை" என்று பதிலளித்தார்.

மாஜி இந்திய ஸேனாதிபதியான ஜெனரல் ஹார்ட்லியும் ராணுவ உதவி நிர்வாக அதிகாரியான ஜெனரல் மோல்ஸ்வர்த்தும் இன்னும் சில ராணுவ தலைமை ஸ்தல அதிகாரிகளும் ஆஸாத்-நேரு-வேவல் சம்பாஷணையின்போது கூடவே இருந்தனர்.

சம்பாஷணையின் பலன் திருப்திகரமாக இல்லை என்று காங்கிரஸ்வாதிகள் அபிப்பிராயப்படுவதாகத் தெரிகிறது.

தாங்கள் மறுபடியும் ஜெனரல் வேவலைச் சந்திக்கப்போவதில்லையென்றும், சம்பாஷணை முடிந்து விட்டதாகவும் பண்டித நேரு, 'யுனைடெட் பிரஸ்' நிருபரிடம் கூறினார்.

* * * *

அமெரிக்கப் பத்திரிகைகளுக்கு ராஜாஜி பதில்

அமெரிக்கப் பத்திரிகைகளுக்கு விடுத்த பதிலில் ராஜாஜி குறிப்பிடுவதாவது:— "இந்தியாவில் கிரிப்ஸ் திட்டம் உற்சாகத்துடன் வரவேற்கப்படவில்லை என்று அமெரிக்கர்கள் ஆச்சரியப்படுவதாக இங்கு செய்தி கிடைத்திருக்கிறது. பாதுகாப்பை ஒதுக்கி வைத்துக் கொண்டு அரசியல் அதிகாரத்தை இந்தியர்களிடம் ஒப்படைப்பதினால் மட்டும் இந்தியாவுக்கோ அல்லது இந்தியர்களுக்கோ க்ஷேமம் ஏற்பட்டு விடாது.

யுத்த முடிவில் இந்தியர் தமது அரசியல் திட்டத்தைத் தாமே நிர்ணயித்துக்கொள்ளும்படி அதிகாரம் கொடுத்துள்ள அறிக்கை தாமதித்து—மிகவும் அதிகமாக தாமதித்து—வெளியிடப்பட்டதாக இருந்தபோதிலும் பாதுகாப்புப் பொறுப்புடன் கூடிய ஓர் தேசிய அரசாங்கத்தை உடனே ஸ்தாபிக்கப் பிரிட்டன் அர்த்தமில்லாமல் மறுப்பது தான் இந்திய மக்களிடையே உணர்ச்சியும் உற்சாகமும் ஏற்படாததற்குக் காரணமாகும்.

கவலையும் சந்தேகமும் நிறைந்துள்ள இந்நாளில் மலேயா போன்ற சம்பவங்களைக் கண்டு வருந்தும் மக்களுக்கு வருங்கால திட்டங்களில் மதிப்பு ஒன்றும் கிடையாது. இன்று நடக்கவிருப்பதுதான் அவர்களுக்கு உண்மையாகத் தோன்றுகிறது.

இந்தியத் தலைவர்கள், மக்களிடம் சென்று உண்மையாக இது நம் யுத்தம் என்றும், இந்த அரசாங்கம் நமது அரசாங்கம் என்றும் தெளிவாகச் சொல்ல வசதி வேண்டும்.

பிரிட்டிஷ் மந்திரி சபையின் யுத்த திட்டங்களையும், முயற்சிகளையும் எதிர்க்கவோ தடுக்கவோ ஒருவரும் விரும்பவில்லை. யுத்த மந்திரி சபைக்கு யோசனை கூறுவதற்கு இந்தியருக்கு அதிகாரம் வேண்டும். இந்தியாவிற்குள் புதிதாக ஸ்தாபிக்கப்படும் அரசாங்கத்திற்கும் பாதுகாப்பிற்கும் நெருங்கிய சம்பந்தம் வேண்டும்.

வங்கப் பிரதம மந்திரி மௌலவி பஸ்லுல் ஹக்குடன் ஸர் க்ரிப்ஸ் சம்பாஷித்தார்.



ஸர் ஸ்டாபோர்ட் க்ரிப்ஸைப் பேட்டியிட்ட ஹிந்துமகாசபைத் தலைவர்கள், டாக்டர் சியாமப் பிரசாத முக்கர்ஜி, வீர ஸவர்க்கர், டாக்டர் மூஞ்சே முதலியோர் பத்திரிகைப் பிரதிநிதிகளுடன் இருக்கின்றனர்.

பண்டித நேருவுடன் பேட்டி

பண்டித ஜவஹர்லால்நேரு பிரத்யேக பேட்டி ஒன்றில் கூறுவதாவது:—

ஸர் க்ரிப்ஸ் கொண்டு வந்த பிரிட்டிஷ் மந்திரி சபையின் யோசனைகளைப்பற்றி அமெரிக்கப் பத்திரிகைகள் வெளியிட்டுள்ள அபிப்பிராயங்களை நான் சிரத்தையுடன் கவனித்தேன். நிலைமையின் அவசரத்தை முன்னிட்ட இவ்வபிப்பிராயங்கள் வெளியிடப்படுகின்றன. அவசரத்தை நாமே உணர்கிறோம். அமெரிக்காவைக் காட்டிலும் நமக்குத் தான் அவசரம் அதிகம். நமது ஜீவாதாரமான கொள்கைகளுக்கு முரண்பட்டதாக இருக்கும் எந்த ஏற்பாட்டையும் நாங்கள் அங்கீகரிக்க முடியாது.

* * * *

ஸப்ரு-ஜயகர் அறிக்கை

ஸர் தேஜ் பகதூர் ஸப்ருவும், டாக்டர் எம். ஆர். ஜயகரும் ஸர் ஸ்டாபோர்டு க்ரிப்ஸுக்கு அனுப்பியுள்ள ஒரு அறிக்கையில், கவர்னர் ஜெனரல் நிர்வாக சபையில் பாதுகாப்பு மந்திரி பதவிக்கு இந்தியரை நியமிக்க வேண்டுமென்று வற்புறுத்தியிருக்கிறார்கள்.

இந்திய யூனியனில் சேர விரும்பாத மாகாணங்களின் அபிப்பிராயத்தைத் தெரிந்து கொள்வதற்கு அப்பிரச்னைக்கு வாக்களிக்கக்கூடியுள்ள சட்ட சபை அங்கத்தினர்களில் 100-க்கு 65 பேர்கள் கொடுக்கும் அபிப்பிராயம் தான் உறுதி செய்யப்பட வேண்டுமென்றும், பொது ஜன வாக்குக் கணக்கு மூலம் இந்தப்பிரச்னையை முடிவு செய்யலாகாதென்றும், மாகாணங்களில் உடனே ஜனநாயக அரசாக்ஷி ஏற்படுத்த வேண்டுமென்றும் ஸப்ரு-ஜயகர் அறிக்கை கூறுகிறது.

* * * *

ஜனாப் ஜின்னாவின் போக்கு

அலகாபாத்தில் 4-ம் தேதி காலை நடந்த அகில இந்திய முஸ்லிம் லீக் மகாநாட்டில் தலைமை வகித்துப்பேசுகையில் ஸர் ஸ்டாபோர்ட் க்ரிப்ஸின் யோசனைகளை விளக்கிவிட்டு ஜனாப் ஜின்னா அவற்றில் முஸ்லிம்களின் ஒற்றுமையும் கட்டுபாடும் பூரணமாகி அங்கீகரிக்கப்படாததற்காகப் பெரிதும் வருத்தம் தெரிவித்தார். முஸ்லிம்களின் சுய நிர்ணய உரிமை அங்கீகரிக்கப்பட்டாலன்றி அவர்கள் திருப்தி அடையமாட்டார்களென்றும் ஜனாப் ஜின்னா கூறினார். இந்தியா ஒரு நாளும் ஒரே தேசமாகவோ, ஒரே ஜாதியாகவோ இருந்ததில்லை என்று அவர் குறிப்பிட்டார்.

இடைக்கால ஏற்பாடுகளைப் பற்றி அவர் அபிப்பிராயம் தெரிவிக்கையில் இவ்விஷயத்தில் தஸ்தாவேஜி தெளிவாக இல்லை என்றும், பூரா யோசனைகளும் வெளியிடப்பட்டால்தான் உண்மை தெரியுமென்றும், இப்பொழுது வெளியாகியுள்ள முறையில் தஸ்தாவேஜி பூரணமானதாக இல்லை என்றும், அதை ஏற்பதற்கு முன்பாக எவ்வளவோ திருத்தங்கள் செய்யப்பட வேண்டுமென்றும் எடுத்துரைத்தார். "முக்கியமாக க்ரிப்ஸ் திட்டம் முஸ்லிம்களிடையே சம்சயத்தையும் அதைரியத்தையும் உண்டுபண்ணியிருக்கிறது. ஆகவே பாகிஸ்தானுக்குப் பூரண அங்கீகாரம் கிடைப்பதற்காக நாங்கள் முயல்வோம். இதில் முஸ்லிம்களின் உரிமை தெளிவாக்கப்பட்டாலன்றி போன யுத்தத்துக்குப் பிறகு பாலஸ்தீனில் நடந்ததுபோல இந்நாட்டிலும் நடப்பதை நாங்கள் விரும்பவில்லை. நடைமுறை விவரம், க்ரிப்ஸின் பேட்டிகள், விளக்கங்கள் யாவும் இதுவரையில் எங்களுக்கு எதிராகவே இருக்கின்றன" என்றார் அவர்.

* * * *

மகாகனம் சாஸ்திரிகள் கருத்து

பம்பாயில் நடந்த அபிவிருத்திக் கட்சிக் கூட்டத்தில் மகாகனம் வி. எஸ். ஸ்ரீநிவாச சாஸ்திரியார் கிரிப்ஸ் திட்டத்தைப் பற்றி ஒரு பிரசங்கம் செய்தார். அவர் கூறியதன் சாரமாவது:—

இந்திய யூனியனில் சேர விரும்பாத மாகாணங்களுக்கும் உரிமை வழங்குவதாக பிரிட்டிஷ் மந்திரி சபையினர் தங்கள் திட்டத்தில் குறிப்பிட்டிருக்கிறார்கள். இதுமிக ஆக்ஷேபகரமான காரியம். இந்த விஷயங்களையெல்லாம் இப்போது கிளப்பாமலிருப்பது நலம்: ஹிந்துக்களும் முஸ்லீம்களும் ஒன்றுசேர்ந்து பாடுபட்டு ஜப்பானியர்தொல்லையை நிவர்த்தித்த பிறகு இதைப் பற்றி யோசிக்கலாம். வகுப்புச் சச்சரவு அதிகமாகவுள்ள இந்தக் காலத்தில் பிரிட்டிஷ் சர்க்கார் தங்களுக்குத் தாங்களாவே ஒரு குழியை வெட்டிக் கொண்டார்கள்; பிரிவினை மனோபாவத்தை வெறுக்காமல் காங்கிரஸுக்குப் போட்டியாக அதை அவர்கள் வளரவிட்டார்கள். அவர்கள் பேயை ஆட விட்டு விட்டார்கள்: இப்போது அதை அடக்குவதானால் அவர்களுக்கே கஷ்டமாகவிருக்கிறது. இரண்டு வகுப்புகள் இவ்விதம் ஒன்றோடொன்று சச்சர விடுவதைச் சர்க்கார் பார்த்துக் கொண்டிருப்பது தகாது.

ஸர் க்ரிப்ஸ் திட்டத்தில் மூன்று விஷயங்களைப் பற்றித் தான் அதிகமாகப் பேசப்படுகிறது. ஒன்று ராணுவ மந்திரி விஷயம். எல்லாக் கட்சியினரும் இதை வற்புறுத்துகிறார்கள்; இரண்டாவது சமஸ்தானங்கள் விஷயம். பிரதிநிதிகளைத் தெரிந்தெடுக்கும் விஷயத்தில் மாறுதல் வேண்டுமெனக் கூறுகிறார்கள்; மூன்றாவது யூனியனிலிருந்து விலக மாகாணங்களுக்கும் சமஸ்தானங்களுக்கும் உரிமை அளிப்பது: இந்தியாவின் பிற்கால நிலையைப் பொறுத்த மட்டில், பிரிட்டிஷ் சர்க்கார் யோசனை சரியாக இருக்கிறது. ஜனநாயக தத்துவம் மிகுந்த இந்தக் காலத்தில் சமஸ்தானங்களில் அதிபதிகள் மட்டுமே அரசியல் சம்பந்தமான காரியங்களில் தலையிட வேண்டுமெனச் சொல்வது தவறு. இந்திய சமஷ்டியில் சேராமல் விலகுவதற்கு மாகாணங்களுக்கும் சமஸ்தானங்களுக்கும் அதிகாரம் அளிப்பது தவறு. இந்த புதிய அதிகாரம் ஏன்? இந்தியா ஐக்யப்பட்டிருந்தால்தான் கவுரவமுண்டு: ஸர் கிரிப்ஸ் இதுவிஷயமாகச் சொல்லும் முறையில் ஒரு அரசியலை அமைக்கக் கூடாது. இப்போது சமஷ்டியில் சேர விரும்பாத மாகாணங்கள் பிறகு தங்கள் செய்கைக்காக வருந்தி சமஷ்டியில் வந்து சேரும் என நினைப்பது தவறு. முன்னம் தனித் தொகுதி ஏற்படுத்தியபோது இது தற்காலிக ஏற்பாடு என்றும், 10 வருஷங்களுக்குக் கூட இது நீடிக்காதென்றும் தலைவர்கள் பலரும் சொன்னார்கள். இப்போது பிரிவினைக் கொள்கை பரவி விட்டது. அது மிகக் கேவலமான நிலையையும் அடைந்துவிட்டது.

கல்வர்ட்டும் நடிக்கும் "இளம் மிஸ்டர் பிட்" என்ற படம் தயாராகிறது. க்னாடட் காலு பர்ட் நடிக்கும் "ரிமம்பர் தி டே" (தினத்தை மறக்காதே) என்பதும் உயர்தர படம், டைரோன் பவரும் ஜின் டார்னியும் "ஸன் அப் ப்யூரி" என்ற படத்தில் நடிக்கின்றனர். பாட் ஒப்ரியனும், லிண்டா டார்னலும் "லா அண்ட் ஆர்டர்" (சட்டமும் ஒழுங்கும்) என்ற படத்தில் தோன்றுகின்றனர். ராபல் ஸபாடினி என்ற பிரசித்த நவீனசிரியர் எழுதிய கடற் கொள்ளைக்காரர் கதையான "ப்ளாக் ஸ்வான்" என்ற படத்தில் டைரோன் பவர் பிரதான நடிகர். மற்றும் "பவரி நைட்டிங் கேல்" என்ற படத்தில் ஆலிஸ் பேயும் ஜிஞ்ஜர் ரோஜர்ஸ் நடிக்கும் படமும் "தீவின் சங்கீதம்" என்ற இயற்கை வர்ணப்படத்தில் பெட்டி க்ராபிளும் நடிக்கின்றனர்.

வில்லியம் பாரன், மார்க் ஹெல்லிங்கர், எர்னஸ்ட் லூபிட்ஷ் ஆகியவர்கள் இருபதாம் நூற்றாண்டு பாக்ஸ் கம்பெனியாரிடம் வந்து சேர்ந்திருப்பதால் 1942-ம் வருஷம் தயாரிக்கும் படங்கள் யாவும் பல தரப்பட்டவர்களையும் திருப்தியளிப்பதாக இருக்கும் என எதிர்பார்க்கலாம்.

தவிரவும் இந்தக் கம்பெனியாரிடம் அநேக பிரசித்த நடிகர் நடிகைகள் வந்து சேர்ந்திருக்கின்றனர். அவர்களில் முக்கியமானவர்கள்; டைரோன் பவர், பெட்டி க்ராபிள், க்ளாடட் கால்பர்ட், ஆலிஸ் பே, கார்மன் மிராண்டா, ஜோன் பென்னட், வால்டர் பிட்ஜன், வால்டர் ஹஸ்டன், ஹென்ரி பாண்டா, டாகு ஆண்ட்ரூஸ், விக்டர் மெச்சூர், டான் அமிச்சி, மாரீன் ஓஹாரா, ஜிஞ்ஜர் ரோஜர்ஸ், கரோல் லாண்டிஸ், ஆண் பாக்ஸ்டர், ஜான் பெய்ன், ஸிஸர் ராமிரோ, ஜீன் டார்னி, லிண்டா டார்னல், ஜார்ஜ் ஸாண்டர்ஸ்.

* * * *

யுனைடெட் ஆர்டிஸ்ட்ஸ்

சுமார் 25 வருஷங்களாக நடந்து வரும் யுனைடட் ஆர்டிஸ்ட் கார்ப்பொரேஷனின் அதிகாரிகள் இவ்வருஷம் முதல் பட உற்பத்தியிலும் ஈடுபட நிச்சயித்திருக்கிறார்கள். வால்டர் வாங்கர் புரொடக்ஷன்ஸ் கம்பெனியில் வால்டர் வாங்கருக்கிருந்த உரிமை பூராவையும் மேற்படியார் வாங்கியுள்ளனர். வால்டர் வாங்கர் கம்பெனியை விட்டு விலகுவார்; இனி இப்புதிய கம்பெனி "யுனைடட் ஆர்டிஸ்ட் புரொடக்ஷன்ஸ்" என்று வழங்கப்படும். இவர்கள் தயாரிக்கும் படங்கள் மேற்படி கார்ப்பொரேஷன் மூலம் விநியோகமாகும். படப் பிடிப்பு கம்பெனி டைரக்டர்களின் முடிவையே தழுவியிருக்கும்.

* * * *

நேஷனல் ஸ்டூடியோ

டைரக்டர் மேபூப் சாதாரண உயரம் கொண்ட ஒருவரைக் கண்டு பிடிக்க முயன்றது பலனளித்தது; அவர் ஷேக் முக்தாரைக் கண்டுபிடித்தது அவருக்கு மட்டுமல்ல, இந்திய படத் தொழில் அபிவிருத்திக்கும் உதவியது. ஷேக் முக்தார் பார்ப்பதற்கு மிகவும் உயரமான புருஷர்! தேகக் கட்டு மாத்திரமல்ல: உண்மையிலேயே இது அவருக்குப் பொருந்தும்; சுமார் ஆறு அடி மூன்று அங்குலம் உயரமானவர் ஷேக்முகதார்; 235 பவுன்கள் எடையுள்ளவர்; அவர் போட்டுக்கொள்ளும் ஒவ்வொரு செருப்பும் 10 பவுண்ட் எடை கொண்டதாம். ஆயினும் அவரைப்போல் உணர்ச்சி ததும்பும் விதமாக நடிப்பவரைக் காண முடியாது; அவர் நடிப்பைப் பார்க்கும்போது நமக்கும் அவரிடம் அன்பு ஏற்படுகிறது.

நேஷனல் ஸ்டூடியோவின் "ரோடி"யில் அவர் நடிக்க ஏற்பாடாகியது. எதைப் பார்த்தாலும் நல்லெண்ணமே கொண்டு, பணத்தைப் பெரிதாகப் பாராட்டாமல், மனுஷ்ய உரிமைகளுக்காகப் போராடும் ஒருவரது வேஷத்தில் அவர் நடிக்கும்படி மேபூப் விரும்பினர். இவரது தேகக் கட்டு சற்று தளர்ந்து தணிந்தால் தான் இந்த வேஷம் இவருக்குப் பொருந்தும் என்று மேபூப் கருதியதால் ஷேக் முக்தார் அவ்வாறே செய்ய தயக்கமில்லாமல் ஒப்புக் கொண்டார்: அவருக்கு இனிமையான நடத்தை ஸ்வபாவமாகவே ஏற்பட்டதாம்; தினசரி 40 கோழி முட்டைகளையும் 12ப்ளேட் ஐஸ் க்ரீமையும் பக்ஷணம் பண்ணும் ஷேக் முக்தார் தினசரி ஒரு வேளை சாப்பாட்டுடன் இருக்க தீர்மானித்து விட்டார். இதற்கு முக்தார் ஒப்பாமலிருந்திருப்பாரேயாகில் நம் இந்திய சினிமா தொழிலுக்கு இவரது உதவி கிடைக்காமல் இருந்திருக்கும்! இவ்வளவு பெரிய ஆள் கிடைப்பது துர்லபமாகியும் இருந்திருக்கும். ஷேக் முக்தார் திடமனது கொண்டவர்: இப்போது அவர் தமது எடையை 190 பவுன்களாக குறைத்துக் கொண்டிருக்கிறார். பார்ப்பதற்கு அவர் முன் போல் இல்லை, தோற்றமும் ஆக்ருதியும் மாறியிருக்கின்றன. ஆயினும் இந்திய சினிமாத் தொழிலில் ஆஜானுபாஹு அவர் தான்!

(16-ம் பக்கத் தொடர்ச்சி)

ற்சி தினமும் பலன் அளித்துக் கொண்டே வருகிறது. இப்போது சர்வகலாசாலை மாணவர் தொகை சுமார் 4000. மொத்தம் 5 கோடி ரூபாய்[illegible] சேகரித்து 20 கலாசாலைகளையும் 5[illegible] ஹாஸ்டல்களையும் திறந்து வைப்பதுதான் மாளவியாஜியின் அபிஷ்டம்! கூடிய சீக்கிரத்தில் எதிர்பார்த்தவளவுக்கு காரியசித்தி ஏற்பட்[illegible] பண்டிட்ஜி ஆயுள்காலத்திலே[illegible] ஆத்ம திருப்தி யடையும்[illegible] சாவேச்வரன் அனுக்ர[illegible] ராக!

நாந்தி ஜோஸியர்

ஒரு வருஷப் பலன் மாதவாரி ரூ. 3.
ஆரூடம் 5 கேள்விகளுக்குப் பதில் ரூ.
வி. பி. செலவு அணா 6.
ஜனனகால விவரம் or எழுதும் நேரம், சுமார் வயது தேவை.
ஹனுமான் ஆச்ரமம், திருத்தணி S.I.

IMMEDIATE VASHIKARAN

On contract basis we undertake to influence or subjugate like spellbound any one or more persons (male or female) instantly and surely cause them entirely at your own grasp quite easily. Particulars against Stamps SANTI ASRAM, Dacca (Bengal)

ரூ. 60,000 பெருமானமுள்ள ஆபரணங்கள் வழங்கப்பட்டன

உலகின் எட்டாவது அதிசயம். அமெரிக்கன் நியூ கோல்டு எங்கள் சிருஷ்டி. அது இந்தியா பூராவும் பிரபல்யம் அடைந்துவிட்டது. அதற்கு அறிமுகமே தேவையில்லை. பத்திரிகைகளும், பொது மக்களும் அதை எங்கும் புகழ்கிறார்கள். அதன் கெமிகல் நிறம் எப்பொழுதும் தங்க நிறமாகவே இருக்கிறது. இந்தத் தங்கத்தைக்கொண்டு நீங்கள் சிறந்த ஆபரணங்களை செய்து கொள்ளலாம்.

இந்த அமெரிக்கன் நியூ கோல்டை பிரபலப்படுத்தும் நோக்கத்துடன் ஒரு சாம்பிள் செட் விநியோகம் செய்ய நாங்கள் நிச்சயித்துள்ளோம்.

இந்த செட்டில் உண்மையான அமெரிக்கன் நியூகோல்டு 6 தோலாவும், ஒரு ஜதை புது மோஸ்தர் வளையல்களும், ஒரு ஜதை மூக்குத்திகளும் 2 பம்பாய் மோஸ்தர் மோதிரங்களும், ஒரு ஜதை தோடுகளும் இருக்கும்.

AMERICAN NEW GOLD WORKS, P.O.Box 54,(S.M.M.)Amritsar.
(B. P. S.)

கேசவா மிஷனரி ஸ்டோர்

24, எர்ரபாலு செட்டித் தெரு, மதராஸ்.

ரைஸ் மில், மாவு மில், சீக்காய் & காபி மிஷின், பம்பு வியாபாரமும், எல்லாவித காஸ்டிங் வேலைகளும், ஆயில் எஞ்சின் ரிப்பேர்களும் செய்யப்படும்.

சுவாமிநாதன் ப்வுண்டரி எஞ்சினீரிங் ஒர்க்ஸ்,
7, வால்டாக்ஸ் ரோட், P. T., மதராஸ்.

ஆனந்த பற்பொடி

இந்த லேபிலைப் பார்த்து வாங்குங்கள்.
இதுதான் மார்க்கட்டில் சிறந்தது
எங்கும் கிடைக்கும்.

Certified by Rt. Hon. V. S. Srinivasa Sastri P.C.
Hon. Sir R. K. Shanmukham Chetty, K.C.I.E.
Hon. Sir Md. Habibulla Sahib Bahadur K.C.S.I.
Hon. Sir K. V. Reddi, Kt. Sir B. N. Sarma, K.C.S.I.
Hon. Sir P. S. Sivaswami Aiyar, K.C.S.I., C.I.E.
Hon. Sir C. P. Ramaswamy Aiyar, K.C.I.E.
Hon. Sir M. Krishnan Nair, Kt. Sir A. P. Patro Kt.
Hon. A. T. Pannirselvam, Dr. P. Subbaroyan
Hon. Justice K. Sundaram Chetti, Hon. P. T. Rajan

ANANDA TOOTH POWDER
TRADE MARK
REGISTERED

Hon. Justice Sir C. V. Kumaraswami Sastri, Kt
Hon. Justice Sir V. Ramesam, Kt.
Hon. Justice Sir C. V. Anantakrishna Aiyar Kt
" C. Madhavan Nair, Sir M. D. Devadoss. Kt
" M. Venkatasubba Rao. Raja of Sivaganga,
Rajas of Kollengode Bobbili Ramnad Mandasa.
Gold medals from Mysore, Pudukkottai Etc. States
MANUFACTURED BY—VAIDYARATNA
PANDIT U. RAMANATHA SASTRI, MADRAS, 7.

வைத்திய ஸித்தாச்ரமம்,
39, பஜார் ரோட்,
மைலாப்பூர் — மதராஸ்.

பெண்களுக்கு புத்திமதி

★

ஸ்ரீமதி
விஜயலக்ஷ்மி பண்டிட்
எழுதியது

★



இரண்டு சகோதரிகள்
ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட்டும் ஸ்ரீமதி கிருஷ்ணா ஹதி சிங்கும்.

மிகவும் அவசியமானது

நாம் இப்போது பல கஷ்டங்களுக்கிடையே காலத்தைக் கழித்து வருகிறோம்: அவை பலதரப்பட்டவை. ஆகவே நாம் நம் முன் கிளம்பியுள்ள பிரச்னைகளை சரிவரப் பரிசீலித்து நமது வாழ்க்கையை உருப்படுத்திக் கொள்வது மிகவும் அவசியமாகிறது.

அஸ்திவாரம் முக்கியம்

இன்று நீங்கள் யாவரும் வித்தியார்த்திகள்: படிப்புதான் தற்சமயம் உங்களுக்குப் பிரதானம்: இது மிகவும் நியாயமானதுதான். இந்த காலத்தில் நீங்கள் பள்ளிக்கூடத்திலும் வீட்டிலும் ஸ்வீகரிக்கும் ஞானமும், கற்கும் கட்டுப்பாடும், அறிந்து கொள்ளும் ஒத்துழைப்பும்தான் உங்கள் ஜீவியத்திற்கு அஸ்திவாரம். இப்போது அஸ்திவாரம் ஸ்திரமாக இராததுதான் நாம் சீக்கிரம் மேலே கிளம்பாததற்குக் காரணமாகிறது.

பெண்களின் பொறுப்பு

உலகம் பூராவும் ஒரே களேபரம்! ஒரே சண்டை!! வெகு வேகமாக நிலைமை மாறி வருகிறது: அவற்றை அறியவும் நம்மால் முடிவதில்லை. சதா சிந்தனையிலாழ்ந்திருப்பவர்களுக்கு புதிய கருத்துகளும், புதிய முறைகளும் உதயமாகி வருகின்றன, அதி விரைவில் மாறுதலும் முற்போக்கும் ஏற்பட்டுவரும் இவ்வுலகத்தில் இந்திய ஸ்திரீகளின் நிலைமைஎன்ன? தேச முன்னேற்றத்தில் அவர்கள் எத்தகைய பங்கு எடுத்துக்கொள்ளப் போகின்றனர்? இந்நாட்டு பெண்மணிகளின் பொறுப்பு அபாரமானது. பண்டைய காலத்தில் அவர்கள் அதிகச் சிறப்புடன் நடந்துகொண்டனர். அதைக் காட்டிலும் பெருமை தரக்கூடிய எதிர்காலம் அவர்கள் முன் நிற்கிறது. நடந்தகாலத்திலிருந்தும் நிகழ்காலம் மூலம் நடக்கவிருக்கும் காலத்தை நாம் நோக்குதல்வேண்டும்—நம் வாழ்க்கைப் பிரயாணத்தை நாம் நடத்தும் விதம் இதுதான்? நிகழ் கால்ம் மிகவும் முக்கியமானது. இந்த காலத்தில் வாழ்க்கை அஸ்திவாரத்தைப் பலப்படுத்திக்கொள்ளாமல் இருக்கும்வரை, பழைய நாளைய பெருமையை ஞாபகப்படுத்திக்கொள்வதோ அல்லது வருங்காலத்தில் அடையவல்ல சிறப்பைப்பற்றி கனவு காண்பதோ பிரயோஜனப்படாது.

ஒரு கவி கூறியது

ஒரு கவி பின்கண்டபடி சொன்னார்: "இன்றைய தினத்தைப் புறக்கணியாதே! நேற்று நடந்தது ஒரு கனவு: நாளை நடக்கவிருப்பது ஒரு மாயத் தோற்றம்: இன்று நாம் திருப்திகரமாக வாழ்க்கையை நடத்துவோமாயின், நேற்று நடந்தது இன்பகரமான கன

ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட் சமீபத்தில் தென்னாடு விஜயம் செய்தபோது காகிநாடாவில் பித்தாபுரம் மஹாராஜா அவருக்கு நடத்திய தேநீர் விருந்தின்போது எடுத்த படம்.

சென்னை ஸ்திரீகள் சங்கங்கள சார்பில் ஸ்ரீமதி விஜயலக்ஷ்மி பண்டிட்டுக்கு மயிலையில் "ஜக்கம் பேட்டா மாளிகை"யில உபசாரம் அளிக்கப்பட்டது.

வாகவும், நாளை நடக்கப் போவது நன்னம்பிக்கை அளிப்பதாகவும் இருக்கும். ஆகையால் இன்றைய தினத்தில் சிரத்தை கொள்."

என் புத்திமதி

பழைய பெருமையைப்பற்றி வீணில் சிந்திக்காதிர்கள் என்பதே என் புத்திமதி: பழைய காலத்தைப் பற்றிய பேச்சு தான் நமக்கு எப்போதும்: அது நம் ஸ்வபாவம்: நிகழ்காலத்தில் நாம் சிரத்தை காட்டுவோம்: இவ்விதம் நாம் நடந்து கொண்டால் தான், நம் தேசத்திற்காக நாம் எதிர்பார்க்கும் நல்ல காலம் பிறக்கும்.

மறுபடியும் எட்ட முடியும்

ஸ்திரீகளின் முன்னேற்றத்திற்கு பல இடையூறுகள் இருக்கின்றன: வழக்கமும் அறியாமையும் பாதகம் புரிகின்றன: நம் நாட்டு ஸ்திரீகள், பழக்கவழக்கங்கள் விதிக்கும் கடமைகளைப் புறக்கணியாமல் புருஷர்களுக்கு சமமாக நின்று, ராஜீய விவகாரங்களையும் கவனித்து வந்த காலம் சமீபகாலத்தில் தான். அவள் சுதந்திரத்துடனும் புருஷனுக்கு சமமாகவும் இருந்தாள். சமூகத்திற்கும் ஸர்க்காருக்கும் அவள் செய்த சேவை சிசு ஸம்ரஷணத்துடன் மட்டும் நின்று விடவில்லை: ஸ்திரீகள் தங்களது உயர் நிலையிலிருந்து விழ்ந்ததற்கு அநேக காரணங்கள் இருக்கின்றன: அவற்றை இங்கு எடுத்து காட்டுவது சாத்தியமல்ல. நான் பண்டைய நாளைய பெருமையைப்பற்றிப் பிரஸ்தாபித்ததற்குக் காரணம், நாம் மட்டும் முனைந்து பிரயத்தனப் படுவோமாகில், அதே நிலைமையை நாம் மறுபடியும் எட்ட முடியும் என்பதே.

கீழ்நாட்டாரின் முயற்சி

நான் இங்கிலாந்துக்கு சமீபத்தில் சென்றிருந்த போது, அங்குள்ள பல பிரபல இங்கிலீஷ் ஸ்திரீகள், தங்களுக்கு சுதந்திரம், கல்வி, வோட்டுரிமை முதலியன வாய்த்திருந்த போதிலும் பெரிய ஸர்க்கார் பதவிகள் தங்களுக்கு அளிக்கப்படாததையும், ஆனால் பராதீனப்பட்ட நாட்டில் மட்டும் புருஷர்களுக்குத் துல்யமாக பதவி வகிக்க ஒரு பெண்மணி பொறுக்கியெடுக்கப் பட்டதையும் சுட்டிக்காட்டி ஆச்சர்யப்பட்டனர். இம்மாதிரி பிரஸ்தாபிக்கப்பட்ட சமயமெல்லாம் நான் ஒரே மாதிரி பதில் தான் தந்தேன். இந்தியாவில் நீடித்த காலமாகவே ஸ்திரீ புருஷ சமத்துவத்தில் நம்பிக்கை உண்டு: இரு இனத்தாரும் அணிவகுத்து நிற்பது புதியதல்ல என்பதே அது. மேனாட்டில் ஸ்திரீகள் புருஷர்களுடன் போட்டியிட முயலுகின்றனர் என்பதையும், முன்னேற விரும்பும் நாட்டில் இருக்கும் ஸ்திரீ புருஷர்கள் ஒருவர் மற்றொருவரைக் கீழே தள்ளிவிட முடியாது என்பதை கீழ் தேசத்திய மக்கள் உணர்ந்திருக்கின்றனர் என்பதையும் நான் அவர்களிடம் எடுத்துச் சொன்னேன். நாம் சமத்துவத்திற்காக சண்டை போடவில்லை: நாம் அருகதை அடையவே முயற்சிக்கிறோம்: ஆகவே கீழ்த்திசையின் முயற்சி பலன் பெறுகிறது.

நான் கண்டறிந்தது

உங்களது படிப்பைப் பற்றி சில வார்த்தைகள். சமீபத்தில் நான் அநேகம் சிறுமிகளுடனும் யுவதிகளுடனும் கலந்து பேசியிருக்கிறேன்: அவர்கள் தங்கள் மனதில் இருந்ததை என்னிடம் ஒளியாமல் கூறியும் இருக்கின்றனர்: தங்களுக்கிருக்கும் சில தகராறுகளைத் தீர்த்துக் கொள்வதில் அவர்கள் என்னுடைய ஆலோசனையையும் கேட்டதுண்டு. இதில் என் கவனத்தை முக்கியமாகக் கவர்ந்தது ஒரே ஒரு விஷயம் தான். இப்போது நம் சிறுமிகளுக்குப் போதிக்கப்பட்டு வரும் பாடம் முக்கிய சந்தர்ப்பங்களில் பயன் படுவதில்லை: தேசத்தொண்டு புரிவதற்கும் வழி காட்டுவதில்லை: எதை சாதிக்க அது விரும்புகிறதோ அதையே அது கெடுத்து விடுகிறது: இது தான் நான் உணர்ந்தது. நான் கண்டனமாகக் கூறவில்லை. என் மனதில் பட்டதைத்தான் தெரிவிக்கிறேன்: தவறிருந்தால் திருத்திக் கொள்வேன். கல்வி கற்பதன் கருத்து கேவலம் கல்யாணத்திற்காக அல்ல: ஆனால் சாதாரண மத்ய வகுப்புக் குடும்பங்களில் இருக்கும் நோக்கம் வருந்தத்தக்கது: இதனால் முடிவில் விவாகத்திற்கும் விபரீதமே விளைகிறது. எனக்குத் தோன்றுவது என்னவென்றால் கல்வியை உத்தேசித்து தான் நாம் கல்வி கற்க வேண்டுமே தவிர, அதனால் இறுதியில் லாபத்தை எதிர்பார்க்கக்கூடாது என்பதே.

கல்வி கற்பதன் கருத்து

வேலை சம்பாதிக்கும் நோக்கத்துடன் ஒரு யுவனும், தகுதியான பர்த்தாவை ஸ்வீகரிக்கலாம் என்ற எண்ணத்துடன் ஒரு யுவதியும், தங்களது பெயருக்கடுத்தாற் போல் சில எழுத்துகளைச் சேர்க்கும் கருத்து கொண்டு, 'கலாசாலைகளில் சேர்ந்து கல்வி கற்பது பெருத்த ஏமாற்றத்திலேயே முடிகிறது. தங்கள் வாழ்க்கை மேன்மையுறப் படித்து? தாங்கள் கற்றதை இதரர்களுக்கும் சொல்லிக்கொடுக்கும் சிறுவர் சிறுமிகளுக்கு ஏற்படும் ஆனந்தத்திற்கும் அமைதிக்கும் அளவே கிடையாது: இவர்கள்தான் எதையும் நிர்வகித்து நடத்தக்கூடியவர்கள்: காரியமாயினும் சரி, கல்யாணமாயினும் சரி, அவர்களுக்குக் கவலை கிடையாது. படிப்பை யுத்தேசித்து தான் படிக்க வேண்டும் என்பதை நான் வற்புறுத்திக் கூறுவேன். அப்போது தான் தங்களுள்ளத்துள் தன்னம்பிக்கையும் சுயமரியாதையும் அதிகரித்து வாழ்க்கையில் வெற்றி காண வசதி ஏற்படும். வாழ்க்கையில் வெற்றி பெறுவது என்றால் என்ன? நாம் நம் முன் இருக்கும் சக்தியை நன்கு பயன் படுத்திக் கொண்டு, அதை அபிவிருத்தி செய்வது தான் அது. வாழ்க்கைப் பாதை ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு வழி விடுகிறது என்பதை நீங்கள் உணருவீர்கள்: ஒரு படி தவறி விட்டாலும் அது சீர்குலைந்து அலங்கோலமாகிறது.

இந்த நிலைமை நீடிப்பதா ?

நம் இந்தியாவில் நம் இல்லங்களிலும் கூட மாறுதல் ஏற்பட்டு வருகிறது: இதுவும் மக்களைப் பெரிதும் பாதிக்கிறது. இந்த நிலைமை நீடிப்பதை நிவர்த்தித்து, நம் புராதன கலைகளின் மாண்புக் கேற்பவும் இல்வாழ்க்கையை நாம் நடத்த வேண்டும். பிறரைப் பார்த்து நடப்பது நமக்கு தகாது: நாம் அவற்றிற்கு மேலான நிலைமையை அடைந்தவர்கள். நமக்குக்கிடைத்திருக்கும் பழைய சொத்து மிகவும் உயர்ந்தது: மேனாட்டினரிடம் காணப்படும் பயன், தரவல்ல குண விசேஷங்களைக் கிரஹித்தாலும், நாம் நமது பெரியோர் வகுத்த மார்க்கத்தைத் தான் 'அடிப்படையாகக் கொள்ள' வேண்டும், இவ்விதம் நடந்து கொண்டால் தான் சுதந்திரம் நமக்கு சித்திக்கும்.

தேகதிடமும் சுகமும்

கடைசியாக உங்களுடைய தேக சுகத்தைக் குறித்து ஒரு வார்த்தை! நீங்கள் ரோக மின்றி நன்கு பாதுகாத்துக் கொள்ளவேண்டும்: ஏனெனில் பிற்காலத்தில் தாய்மார்களாவது நீங்கள்தான்! இது தவிர மனமும் உடலும் ஒருமித்து வேலை செய்கின்றன: ஒன்று கெட்டுவிட்டால் மற்றொன்று திருப்திகரமாக அதன் அலுவலைக் கவனிக்காது. திடகாத்திரமும் அரோகமும் கொண்ட யுவதிகளாக விளங்கி, வாழ்க்கைப் பிரச்னைகளை ஆராய்ந்து, அவற்றை சமாளிக்க வேண்டும். சுகமாயிருப்பது வியாதியில்லாமல் இருப்பதுமட்டுமல்ல என்பதை மறக்காதீர்கள். வாழ்க்கையை இனிது நடத்துவதற்கு தேவையான திடமும், ஊக்கமும், சக்தியும் வாய்ந்தவர்களாக இருப்பதுதான் அதன் தாத்பர்யம். நம் பெண்கள் தங்கள் வாழ்க்கை மட்டுமின்றி தேசிய வாழ்க்கையும் நன்கு நிறைவேற உதவுவார்கள் என்பது எனக்கு சந்தோஷத்தைத் தருகிறது.

Vijayalakshmi Pandit

குப்பையில் குண்டுமணி

★

சிறு கதை - ரா. ஆறுமுகம்

"நீ ஒவ்வொரு வருஷமும் என்னை ஏமாற்றியே வருகிறாய். இந்த வருஷம் கட்டாயம கோடை விடுமுறைக்கு ஆபீஸ் மூடியதும் புறப்பட்டு வர வேண்டும்..." என்று கண்டிப்பாய் என் நண்பன் கடிதம் எழுதியிருந்தான்.

எனக்கும், நான் பிறந்து வளர்ந்த என் சொந்தக் கிராமத்தை மறுபடி போய்ப் பார்க்க வேண்டுமென்று வெகு நாளாகவே ஆவலிருந்தது. கிராமத்தை விட்டு வந்து சுமார் 8 வருஷங்களுக்கு மேலாகிவிட்டன. ஒவ்வொரு வருஷமும் போகலாம் என்று திட்டம் போட்டுக் கொண்டுதானிருப்பேன். ஆனால் நிறைவேறுவதில்லை. இந்த வருஷம் எவ்வளவோ வேலைகளிருந்தபோதிலும் அதையெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு என் கிராமத்திற்குப் புறப்பட்டேன்.

நகரத்து சந்தடியினின்றும் விலகி சுமார் 50 மைல் தூரத்திலிருந்த அக்கிராமத்தில் ஆயிரம் வீடுகளுக்குக் குறைவிருக்காது. பாதிக்குமேல் கூறை வேய்ந்த குடிசைகள்தான். சில வீடுகள் ஓடுகளால் மூடப்பட்டிருந்தன. ஒரு சில தான் மாடி வீடுகள். என் நண்பன் அந்த ஊரிலிருந்த சில பணக்காரர்களில் ஒருவன். அக்கிராமத்திற்குப் போகிறவர்கள் மோட்டாரிலிருந்து இறங்கி 4 மைல் நடக்க வேண்டும். ஆனால் நான் காரிலிருந்து இறங்கியதும் என் நண்பன் தன் வீட்டு இரட்டை மாட்டு வண்டியுடன் வந்து எனக்காக மரத்து நிழலில் காத்துக்கொண்டிருக்கக் கண்டேன். ஒருவரையொருவர் பார்த்து வெகு நாளாகி விட்ட படியால் எங்களிருவருக்கும் அன்று கரை கடந்த ஆனந்தமாயிருந்தது. நான் மோட்டார் பிரயாணத்தால் களைப்படைந்திருக்கக் கண்ட அவன் வண்டியில் கொண்டு வந்திருந்த இரண்டு பெரிய இளநீரை வெட்டி எனக்குக் கொடுக்கும் படித் தன் வேலைக்காரனிடம் சொன்னான். தாகசாந்தி செய்துவிட்டு வண்டியில் ஏறிப் புறப்பட்டோம். விலையேறப்பெற்ற அம்மாடுகளிரண்டும் கழுத்தில் சலங்கை 'சலக், சலக்'கென குலுங்கிச் சப்தமிட ஒரு நொடியில், ஓட்ட நடை நடந்து வீட்டையடைந்து விட்டன. அன்று நாங்கள் போய்ச் சேர்ந்தபோது பிற்பகல் 5 மணியாகி விட்டபடியால் வெளியில் எங்கும் செல்லவில்லை. வீட்டிலுள்ளவர்களை க்ஷேம லாபம் விசாரித்துப் பேசிக்கொண்டிருக்கவே நேரம் சரியாகிவிட்டது.

என் நண்பன் தன் படிப்பு முடிந்ததும் கல்யாணம் செய்துகொண்டுவிட்டான். பட்டணத்திலிருந்து தனியாக வந்த அவன் இப்போது இரண்டு குழந்தைகளுக்குத் தகப்பனாகியிருந்தான். அவனுடைய விதவைத் தாய் தன் ஒரே மகன் தன் நிலங்களையெல்லாம் மேற் பார்த்துக் கொண்டு வந்தால் அந்தச் சொத்தைக் கொண்டே கண்ணியமாய்க் காலம் கழிக்கலாம் என்று சொல்லி வெளியூர்களுக்கு எங்கும் வேலைக்கு அனுப்பாமல் நிறுத்திவிட்டாள். அவனும் ஒருவரிடம் சென்று அடிமை போலிருப்பதைக் காட்டிலும் அது எவ்வளவோ சிறந்ததெனக் கருதி இருந்துவிட்டான், அவன் இப்போது முற்றிலும் மாறுபட்டவனைக் காணப்பட்டான்.

அடுத்த நாள் அதிகாலை, நதிக் கரைப்பக்க மிருந்த தன்னுடைய சொந்த வயல்களை யெல்லாம் எனக்குக் காண்பிக்க அவன் அழைத்துச் சென்றான். அங்கே அவனுக்கு ஏராளமாய் நிலங்களிருந்தன. வயலில் தண்ணீர் ஒழுங்காகப் பாய்ந்துகொண்டிருக்கிறதா என்று சுற்றிப் பார்த்துவிட்டு வருவதற்குள் என் கால் ஓய்ந்து போய் விட்டது. அவனோ வெகு உத்சாகமாகக் காணப்பட்டான். வெகு தூரத்திலிருந்த ஒரு வாழைத் தோட்டத்திலிருந்து ஏற்றம் இறைப்பவர்களின் பாட்டு ஒன்று இலேசாகக் காற்றில் மிதந்து வந்தது.

> "வேலியோரம் வாரபுள்ளே-நம்ம
> வேலாயிக் குட்டிதாண்டா
> காலைக்கஞ்சி யோடவந்தா—நம்ம
> காதடப்புத் தீருமடா"

அந்தப் பாட்டை அவர்கள் நீட்டி ராகம்போட்டு பாடுவதையே நான் கேட்டுக்கொண்டு வரப்பின்மேல் அசைவற்று நின்றிருப்பதைக் கண்ட நண்பன் "பாட்டில் பரவசமாகிவிட்டாயோ?" என்றான் கிண்டலாக. "ஆம், அதையெல்லாம் கேட்டு வெகு நாளாகிவிட்டது. அங்கே போய்ப் பார்க்கலாம் வருகிறாயா" என்று கூப்பிட்டேன். "நானும் அங்கேதான் இப்போது போகவேண்டும். அதுவும் நம் தோட்டம் தான்" என்று கூறி அழைத்துச் சென்றான்; வேலியில் போடப்பட்டிருந்த முள்ளாலாகிய சிறு படலைத் திறந்து கொண்டு தோட்டத்திற்குள் நுழைந்து மத்தியில் சென்று ஏற்றுமரத்தில் ஏறியும் இறங்கியும் பாடிக்கொண்டிருந்த இரு வேலையாட்களைக் கண்டேன். கிணற்று மேட்டிலிருந்து ஒருவன் தண்ணீரை வாங்கி வாய்க்காலில் கொட்டிக்கொண்டிருந்தான். என் நண்பன் அவனைப் பார்த்து, "ஏண்டா, மூக்கா தண்ணீர் எவ்வளவு தூரம் பாய்ந்திருக்கிறது?" எனக் கேட்டான். ஏற்றுமரத்தை நிறுத்திவிட்டு, நெற்றி வேர்வையை வழித்துக்கொண்டே, "சாமத்திலேயிருந்து இறைக்கிறோம் சாமி, இன்னும் பாதித் தோட்டம்கூடப் பாயலை, ஒரு வாரமா இறைப்பு இல்லாததினாலே தரையெல்லாம் வரண்டு போச்சு. ரொம்ப தண்ணி இழுக்குதுங்க" என்று பதிலளித்தான். "சரி, வெய்யலேறுவதற்கு முன்னாலே வேலையாகட்டும்" என்று சொல்லிவிட்டு தோட்டத்தின் மற்ற பாகங்களைப் பார்த்துக்கொண்டே உள்ளே சென்றான். வாழை யெல்லாம் பூத்துக் குலுங்கியது. பூக்களில் தேனருந்தும் வண்டுகளின் ரீங்காரம் 'ஞொய்'என்று வந்துகொண்டிருந்தது. தாயின் அடியில் முளைத்திருந்த சிறு சிறு வாழைக் கன்றுகள் தன் தாயின் உயரத்தை எட்டிப் பிடிக்க வளர்ந்து கொண்டிருந்தன. தாயும் தன் குழந்தைகளின்மீது வெய்யில் படாமல் தன் இலைகளாலாகிய கைகளை விரித்து நின்றன. வாழைப்பாத்திகளின் திடல் மீது மிளகாய், கத்தரி, வெண்டை முதலிய சிறு சிறு செடிகளும், பாகற்கொடியும் படர்ந்திருந்தன. எல்லாவற்றிலும் காய்கள் நிறைய காய்ந்திருந்தன. நாங்களிருவரும் தோட்டம் முழுதும் சுற்றிப் பார்த்துவிட்டு மறுபடியும் கிணற்றுப் பக்கம் வருவதற்குள் காலை 7 மணிக்கு மேலாகிவிட்டது. நகரத்தில் காலையில் எழுந்ததும் பல் துலக்கி, முதல் வேலையாகக் காப்பி குடிக்கும் துர்ப்பழக்கமுடைய எனக்கு அவ்வளவு நேரம் ஒன்றுமில்லாமலிருக்க முடியவில்லை. "நேரமாகிறதே. வீட்டிற்குப் போகலாமா?" என்று ஞாபகப்படுத்தினேன் நண்பனுக்கு.

"வீட்டிற்கா? எதற்கு? காப்பி சாப்பிடத்தானே! இன்னும் கொஞ்ச நேரத்தில் இங்கேயே வந்துவிடும். நான் வரும்போதே சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். அது வந்ததும் சாப்பிட்டுவிட்டு, மத்தியானம் நதியில் ஸ்நானம் செய்துவிட்டு வீட்டிற்குப் போய்விடலாம்" என்று தெரிவித்தான். பல் துலக்குவதற்கு என்ன செய்வதென்று நான் யோசித்துக்கொண்டிருக்கையில் அவன் சட்டென கிணற்றிலிருந்து ஓடும் வாய்க்காலின் ஓரத்தில் பட்டுப்போலிருக்கும் மிருதுவான மணலை எடுத்து தேய்க்க ஆரம்பித்துவிட்டான். நான் அவனை ஆச்சரியத்தோடு கவனித்துக்கொண்டு நிற்கையில் அவன் என்னை நிமிர்ந்து பார்த்து "என்ன, டூத் பௌடர் வேண்டுமா? அல்லது பேஸ்ட்டும், பிரஷும் வேண்டுமா? எங்களுக்கெல்லாம் இந்த மண்ல் தான் பௌடரும், பேஸ்ட்டும் வேலங் குச்சிகள்தான் பிரஷ்..." என்றான்.

அக் கிராமத்திலிருக்கும் வரை நானும் அப் பழக்கத்திலிருந்தவன்தான். ஆனால் இப்போது அதெல்லாம் ஒரு புதுமையாகத் தான் தோன்றியது. வேறு வழியில்லாமல் நானும், ஒருவாறு, பல்லைச் சுத்தம் செய்து, முகம் கழுவி முடித்துக்கொண்டிருக்கும்போது எங்கள் எதிரில், சற்று தூரத்தில், ஒரு கையில் கூஜாவும், மற்றொரு கையில் ஏதோ பலகாரம் நிறைந்த தட்டைத் துணியால் மூடிக் கட்டியிருந்த பொட்டணத்தையும் வைத்துக்கொண்டு ஒரு யௌவன மங்கை வந்துகொண்டிருந்தாள். சட்டென நிமிர்ந்து பார்த்த நான் அப்பெண் யாரெனக் கேட்கும் தோரணையில் என் நண்பன் பக்கம் திரும்பினேன். அவனும் என் குறிப்பை யறிந்து "உனக்குத் தெரியாதா? நம் வீட்டிற்குப் பக்கத்து வீட்டில் ராமக் கவுண்டர் இருந்தாரே, அவர் மகள்தான்" என்றான்.

"ராமக் கவுண்டரா? கொழும்புக்குப் போயிருந்தாரே, அவரா?"

"ஆம், அவர் தான். அவர் திரும்பி வரவே இல்லை. தேயிலை தோட்டத்தில் கங்காணி வேலையிலிருந்த அவர் இறந்துவிட்டதாகச் செய்தி வந்து ஐந்து வருஷமாகிவிட்டது. பாவம், அவர் மனைவி இந்த ஒரு பெண்ணைக்கூட வைத்துப் போஷிக்கமுடியாமலிருந்தாள். என் தாயார் தான் இறக்கப்பட்டு இவளை சிறு குழந்தை முதல் வளர்த்து வருகிறாள்!"

"இவள் பெயர் மீனாளா?"

"ஏது, பெயரைக்கூட நன்றாய் ஞாபகம் வைத்திருக்கிறாயே?" என்று சிரித்துக்கொண்டே கேட்டான் அவன்.

அதற்குள் அவளும் பக்கத்தில் வந்துவிட்டதால் எங்கள் பேச்சை அத்துடன் நிறுத்தி விட்டோம். நாங்கள் பேசிக்கொண்டிருந்தது அவளைக் குறித்துத்தான் என்பதையும் அவள் அறிந்துகொண்டுவிட்டாள். கூஜாவையும், தட்டையும் அருகிலிருந்த கல்லின் மீது வைத்துவிட்டு மரியாதையாய் ஒதுங்கி நின்றாள். அவள் வேண்டுமென்றே எங்களைக் கவனியாதவள்போல் ஏற்றமிறைப்பவர்களையே பார்த்துக்கொண்டிருந்தாள். அதனால் நான் அவளையே இமை கொட்டாமல் பார்த்துக் கொண்டிருக்க முடிந்தது.

"மீனு, கொஞ்ச நேரம் இரு. நாங்கள் சாப்பிட்டு வருகிறோம்" என்று அவளிடம் என் நண்பன் சொல்லிவிட்டு ஆகாரத்தை

> பட்டணத்து நண்பன் கிராமத்து நண்பன். அழைப்பை ஏற்றுக்கொண்டு கிராமத்திற்குப் போகிறான். கிராமப் புறத்தின் சாந்தியும் இனிமையும் அவனுக்கு மிகுந்த இன்பத்தை அளிக்கின்றன. இதைக் காட்டிலும் மேலான இன்பத்தை அவன் அங்கு அடைந்தான்! அந்த இன்பம் தான் என்ன? அதை அடைவதற்குள் அவன் அடைந்த மனோவேதனை எவ்வளவு? மிகுந்த ரஸபாவத்துடன் சித்தரிக்கப்பட்ட கதை.

எடுத்துக்கொண்டு தோட்டத்திற்குள் மறைவான இடத்திற்குப் போனான். நானும் அவனைப் பின் தொடர்ந்தே போக, இருவரும் ஓரிடத்தில் அமர்ந்து சாப்பிட ஆரம்பித்தோம்.

"மீனா இப்போது எவ்வளவு மாறுபட்டுக் காணப்படுகிறாள்!" என்று நான் ஆரம்பித்தேன். அவன் பதில் சொல்லாமல் தோசையை விழுங்கிக் கொண்டிருந்தான்.

"நான் அவளைப் பார்க்கும்போது 6 அல்லது 7 வயதுதானிருக்கும். இப்போது பெரிய ஸ்திரீ மாதிரியாகிவிட்டாளே!" என்றேன். அதற்கும் அவன் வாய் திறக்கவில்லை.

"இந்தப் பெண்கள் ஒரு குறிப்பிட்ட வயதையடைந்துவிட்டால் எவ்வளவு வசீகரமாகிவிடுகிறார்கள். ஏழையோ, பணக்காரரோ, யாராயிருந்தாலும் அவர்களையுமறியாமல் வளர்ச்சி எவ்வளவு வேகமாகச் செல்லுகிறது. அவர்களுடைய ஒவ்வொரு அங்கங்களிலும் என்ன காந்தி வீசுகிறது!..." நண்பனால் அதற்குமேல் பொறுக்க முடியவில்லைபோலிருக்கிறது.

"பசிக்கிறது என்று சொன்னாயே, இப்போது சாப்பிடாமல் என்னென்னமோ உளறிக் கொண்டிருக்கிறாயே" என்றான்.

"உளறிக்கொண்டிருக்கிறேனா? பிரத்யக்ஷ உண்மையைத்தான் சொல்லுகிறேன். இதோ பார். மீனா நம் வீட்டிற்கெதிரில், தெருவில் புழுதியில் விளையாடிக்கொண்டிருந்தது நேற்று பார்த்தமாதிரி இருக்கிறது. இன்று அவள் ஒரு யுவதியாகிவிட்டாள். பெண்களுக்கு இயற்கையாகவுள்ள தளுக்கு, குலுக்கு, நாணமெல்லாம், அவளிடம் தாண்டவமாடுகின்றன"

"அதனாலென்ன? அது சகஜம் தானே! நீ சாப்பிடு, பின்பு பேசிக்கொள்ளலாம்"

என் பசி மறைந்து எண்ணமெல்லாம் வேறெங்கோ லயித்திருக்க, நான் யந்திரத்தைப் போல ஒரே ஒரு தோசையையும், சிறிது காப்பியையும் பருகி விட்டு, பக்கத்தில் ஓடிய சிறு வாய்க்காலில் கையை அலம்பி விட்டு எழுந்துவிட்டேன். அவளும் எழுந்திருக்கும் சமயம். தடாலென்று கிணற்றிற்குள் யாரோ குதித்ததுபோல் சப்தம் கேட்டது. நானும் அவனும் ஓடிப் போய்ப் பார்த்தோம். கிணற்று மேட்டிலிருந்து தண்ணீரை வாங்கிக் கொட்டிக் கொண்டிருந்தவன் கிணற்றிற்குள் நீந்திக்கொண்டிருந்தான். ஏற்று மரத்தின் மேலிருந்தவர்களும் வேகமாகக்கீழே இறங்கிக் கொண்டிருந்தார்கள். ஏற்று மரத்தில் சால் இல்லாமல் நீண்ட குச்சி மாத்திரம் ஆடிக் கொண்டிருந்தது, மரத்திலிருந்து இறங்கியவர்களும் கிணற்றிற்குள் குதித்துவிட்டார்கள். அப்போதுதான் விஷயம் விளங்கியது: சாலை இழுத்துத் தண்ணீரை வாய்க்காலுக்குள் கொட்டும்போது எப்படியோ கயிறு அறுந்து கிணற்றிற்குள் பெரிய சப்தத்துடன் விழுந்து விட்டது. அதோடு அந்த மனிதனும் கால் தவறி விழுந்துவிட்டான். அவனை இருவரும் படியின் வழியாக மேலே தூக்கிக் கொண்டு வந்தார்கள். சாலோடு சேர்ந்து விழுந்தபடியால் தலையில் சிறிது காயம்பட்டு ரத்தம் பெருகிக்கொண்டிருந்தது. அவனை நிழலில் கிடத்தி மயக்கம் தெளியப்பண்ணிக்கொண்டிருந்தார்கள். என் நண்பனும் அதில் ஈடுபட்டிருந்தான். நான் எதையோ மறந்துவிட்டவன் போல சுற்றிலும் நோக்கினேன். அவளை-மீனாவை-அங்கு காணவில்லை!

நான் அந்த இடத்தை விட்டு மெதுவாக நழுவி விட்டேன், என்னை அவர்களும் கவனிக்கவில்லை. தோட்டத்திற்குள் நுழைந்து சுற்றிலும் பார்த்து வந்தேன். சந்தடியே இல்லை. ஒரு சமயம் வீட்டிற்குப் போய் விட்டாளோ என்று நினைத்தேன். நண்பனிடம் சொல்லாமல், கொண்டு வந்த கூஜா முதலியவற்றை எடுத்துச்செல்லாமல் போயிருக்கமாட்டாள். கட்டாயம் இங்கே தானிருக்க வேண்டும் என்று தீர்மானித்து மேலும் சுற்றி வந்தேன். வாழைகள் நெருக்கமாயிருந்த இடத்தில் அவள் குனிந்து ஏதோ பறித்துக்கொண்டிருப்பது தெரிந்தது. சந்தடி செய்யாமல் அவள் பின்பக்கம்போய் நின்று கவனித்தேன். கத்திரிச்செடியிலிருந்து பிஞ்சுகளைப் பறித்து மடியில் போட்டுக் கொண்டிருந்தாள். "வீட்டிற்கா பறித்துக் கொண்டிருக்கிறாய்?..." என்று நான் சொல்லி முடிக்கு முன் அவள் செடியிலிருந்து ஏதோ கடித்து விட்டது போல் துள்ளித் திடுக்கிட்டு என்னைத் திரும்பிப் பார்த்தாள். அவள் முகம் பயத்தால் பீதியடைந்து விட்டது; மறு கணம் கோபம் ஜ்வலித்தது. அடுத்த க்ஷணம் வெட்கம். சட்டெனத் தலை குனிந்துவிட்டாள். ஒரு நொடிப் பொழுதில் எத்தனை மாறுதல்கள்!

"மீனா, என்னைத் தெரியவில்லையா?" என்று கொஞ்சுதலாகக் கேட்டேன். அவள் பதில் பேசவில்லை. கையிலிருந்த கத்திரிப் பிஞ்சை நகத்தால் கிள்ளிக் கொண்டிருந்தாள், முகத்திலரும்பிய புன்னகையையும் அடக்க முயற்சித்தாள்.

"ஏன் பேச மாட்டேனென்கிறாய்? என்னை அடையாளம் தெரியவில்லையா?" என்றேன் மறுபடியும். தலையை அசைத்து 'இல்லை' யென்பதைத் தெரிவித்தாள். என் மனதில் அச் சமயத்தில் எழுந்த உவகையை என்னவென்பது. அவள் என்னிடம் ஏதேதோ பேசிவிட்டதாக நினைந்து உளம் மகிழ்ந்தேன். அந்த ஒரு அசைப்பே என்னை அவள் கௌரவித்துப் பதில் அளித்த மாதிரி இருந்தது. வேறென்ன வேண்டும்! ஆனால் நான் கேட்ட கேள்வி எவ்வளவு அர்த்த மற்றது என்று எனக்கு அப்போது தான் ஞாபகத்திற்கு வந்தது. அவளுக்கு 7 வயது நடக்கும் போதே நான் அக்கிராமத்தை விட்டுக் கிளம்பி விட்டேன். அப்போது எனக்கு 17 வயதிருக்கும். ஆகையால் எனக்கு அவளைப் பற்றி நல்ல ஞாபகமிருந்தது. ஆனால் அவளுக்கு எப்படி என்னைப் பற்றி நினைவிருக்க முடியும்? அவள் தலையசைத்தது சரி தான். நான் அதற்காக அதோடு பேச்சை நிறுத்தி விடவில்லை, "நானும் இந்தக் கிராமத்திலிருந்தவன் தான். உத்தியோகம் நிமித்தம் வெளியூருக்குப்போய் எட்டு வருஷமாகி விட்டது. உன் தகப்பனார், தாயாரை யெல்லாம் எனக்கு நன்றாய்த் தெரியும். நான் உன்னைச் சிறு குழந்தையில் பார்த்தது. பாவம், உனக்கு எப்படி ஞாபக மிருக்கும்?..." என்றேன். அவள் முகத்தை மறு பக்கம் திருப்பிக் கொண்டு தன் சிரிப்பை எனக்கு மறைக்க முயன்றாள். "இன்னும் உனக்குக் கல்யாணமாகவில்லையா?" என்றேன். அதற்கும் தலையசைத்தாள். வாய் திறந்து ஒரு வார்த்தை பேச மாட்டேனென்கிறாளே. தலையசைப்பினால் பதில் சொல்ல முடியாத ஒரு கேள்வி கேட்க வேண்டுமென்று நினைத்து "உனக்கு என் நண்பன் வீட்டில் எல்லாம் சௌகரியமாய் நடக்கிறதா?" என்றேன். 'ஆம்' என்று அதற்கும் தலையசைத்து விட்டாள், சே! என்ன முட்டாள் தனமான கேள்வி! சற்று நேரம் நன்றாய் யோசித்து விட்டு "நீ எப்போது வீட்டிற்குத் திரும்பவேண்டும்?" என்றேன்.

"இதோ, போகவேண்டியது தான்" என்று என் பக்கம் பார்க்காமலே பதிலளித்தாள். மறுபடியும் என் உள்ளம் பூரித்தது, "உங்களுக்காக இன்று சமையல் சீக்கிரம் ஆகவேண்டுமென்று சொன்னார்கள், அதற்குத் தான் காய் பறித்துக் கொண்டிருந்தேன். நீங்கள் வந்து......"

"நான் வந்து கெடுத்து விட்டேனா?"

"இல்லை, இல்லை..." அவள் பேசி முடிக்கவில்லை.

"இங்கே என்னடா செய்து கொண்டிருக்கிறாய்?..." அதிர்வேட்டு மாதிரி வந்தது அந்தக் கேள்வி. திரும்பினேன் என் நண்பன் பின்னால் நின்று கொண்டிருந்தான்!

"ஓ! மீனாளும் இங்கே தானிருக்கிறாளா, சரிதான்!"

"இல்லை. நான் காய் பறித்து..." என்று அவனுக்கு அவள் சமாதானம் சொல்ல ஆரம்பித்தாள்.

"சரி, சரி, போ வீட்டுக்கு. சீக்கிரம் சமையல் ஆகணும் என்று சொல்லு அம்மாளிடம் கிணற்று மேட்டில் கூஜாவெல்லாம் இருக்கிறது. எடுத்துக் கொண்டு போ" என அதட்டினான். அவள் இரண்டெட்டில் மறைந்து விட்டாள்.

"என்னடா இது? ஏன் இப்படி என்னிடம் கூடச் சொல்லாமல் தனித்து வந்து விட்டாய்?" என்று கிண்டலாகக் கேட்டான்.

"எதற்கு மறைக்க வேண்டும்? அவளிடம்பேச வேண்டுமென்று தான் வந்தேன்" என்று உண்மையை ஒப்புக்கொண்டேன்.

"ஒரு வயது வந்த பெண்ணிடம் தனிமையில் பேசினால் என்ன நேருமெனத் தெரியுமா உனக்கு?"

"ஏன் அதனாலென்ன?"

மேற்கு கோதாவரி ஜில்லா கலக்டர் ஸ்ரீ ஸி. ஜே. பால் மாகாண சிவில் பயோனீர் படை ஸ்பெஷல் ஆர்கனைஸிங் ஆபிஸராக நியமிக்கப் பட்டிருக்கிறார். பி. பி. பி.

41 வருடம் அனுபவம் உள்ளது; ஞாபகம் இருக்கட்டும்.

சூதக வயிற்றுவலி இருக்கும்வரை கெற்பம் தரிக்காது.

ஷெ வயிற்று வலியை எடுத்து 6 வித மலட்டையும் நீக்கி **புத்திரசந்தானம்** உண்டாகவேண்டுமானால் **R.M.K.**

கெற்ப சஞ்சீவி எண்ணெயை சாப்பிடுங்கள்.

ஸ்திரீகளுக்கு மாதாந்திரத்தில் வரும் பொறுக்கமுடியாத வயிற்று வலியை அந்தக்ஷணமே நிறுத்தும். எந்த மருந்திலும் தீராத எவ்வளவு நாட்பட்ட சூதக வயிற்று வலியும் இதில் அவசியம் தீரும். சூதகம் கண்டும் காணாமலும், துப்பரவாகாமலும் டயப்படி ஆகாமலுமுள்ள சூதகபந்தமானாலுஞ்சரி, இதில் சுகமாகிவிடும். காலா காலத்தில் கிரமப்படி பஹிஷ்டை ஆகும். இன்னும் கெற்பநோய் சம்மந்தமான சகல வியாதிகளும் தீர்ந்து கெற்பம் தரித்துவிடும்! குணம் இல்லையேல் பணம் வாபீஸ்.

1 புட்டி ரு. 2. ஒரு நபருக்கு 3 புட்டி வேண்டும்.
சேலவு வேறு. ஒரே தடவையில் **3 புட்டி ரு. 5**

வைத்திய ஆசிரியர் **ஆர். எம். கே. வேலுசாமி,**
சித்த வைத்திய சாலை, பழனி. **PALNI.** (S. I. R.)

பிராஞ்சுகள் :— 16, திருவல்லிக்கேணி ஹைரோடு, மதராஸ்,
,, :— 68, செட்டியார் தெரு, கொழும்பு.

'நகரத்தில் அதை விகல்பமாய்க் கருத மாட்டார்கள். இந்தக் கிராமத்தில் அது எவ்வளவு தூரத்திற்குப் போகுமென்று உனக்குத் தெரியாதா?"

"அவள் நமக்கு அறிமுகமானவள் தானே"

"என்ன தான் அறிமுகமானவளாயிருந்தாலும் கல்யாணமாகாத ஒரு யுவதியிடம், ஏகாந்தமான இடத்தில், இப்படி நின்று பேசிக் கொண்டிருப்பதை யாரும் பார்த்தால்...நல்ல வேளை. தண்ணீர் இறைத்த அந்த வேலைக்காரர்கள் பார்த்திருந்தாலும் அந்தப் பெண்ணின் பிற்கால வாழ்க்கை நாசமாகியிருக்குமே!"

"நீ என்னவெல்லாமோ பேசுகிறாயே?"

"நண்பனென்ற முறையில் உனக்குப் புத்தியைத் தான் புகட்டுகிறேன்"

"நானும் உன்னிடம் அதே முறையில்தான் ஒன்று சொல்லப் போகிறேன்."

"என்ன?"

நான் அவளை நேசிக்கிறேன்..."

அவன் கடகடவெனச் சிரித்து "இவ்வளவு தானா உன் பிரமச்சரிய விரதம். கடைசியில் ஒரு கிராமப் பெண்ணா உன் வைராக்கியத்தைக் குலைத்து விட்டாள்?"

"என்னை நீ சரியாக அறிந்து கொள்ள வில்லை, பிரமச்சரிய விரதம் என்று வெளிக்குச் சொன்னதெல்லாம், என் பெற்றோர்கள். எனக்குப் பிடிக்காத பெண்களைப்பற்றிச் சிபார்சு செய்தபடியால்தான், இன்று என் மனதிற்குகந்தவளைக் கண்டேன். அவள் கிராமத்துப் பெண்ணாயிருந்தால் என்ன? வேலி ஓரத்தில் பூத்துக் குலுங்கும் மணமற்ற செவ்வரளி கடவுளின் கழுத்தில் ஏறியதும் மதிக்க வொண்ணாததாகிவிடுகிறதில்லையா? அது போல நாகரிகமென்னும் ஸ்பர்சம் பட்ட மாத்திரத்தில் அவள் தெய்வலோகக் கன்னிகையாகி விடுவாள்..."

"போதும், போதும் உன் வர்ணனையை நிறுத்து. பைத்தியம் தான் பிடித்து விட்டதுபோலிருக்கிறது."

"அது எப்படி இருந்தாலும் சரி. உன்னால் இந்த உபகாரத்தைச் செய்ய முடியுமா, முடியாதா?"

"என்ன உபகாரம்?"

"அவள் விவாகம் தான்!"

"என்னடா! விளையாட்டாகப் பேசி வருகிறாய் என்றல்லவோ நினைத்தேன். அவள் ஜாதியென்ன, நம் குலமென்ன? உன் பெற்றோர்கள் தான் சம்மதிப்பார்களா? முதலில் இந்த விஷயத்தை அவர்கள் காதில் கேட்டாலே உன்னை வீட்டைவிட்டுத் துரத்தி விடுவார்களே!" என்று பயமுறுத்தினான் நண்பன்.

"படித்த நீயுமா இப்படிப்பேச வேண்டும்? குலமும் கோத்திரமும், குணத்திற்கும் அழகுக்கும் முன்பு என்ன செய்ய முடியும்?"

"அப்படியானால் நிச்சயம் செய்து விட்டாயா?"

"சந்தேகமே இல்லை. இதன் முடிவு தெரிந்து கொண்டுதான் ஊருக்குப் புறப்படப் போகிறேன்."

"இது என்ன, கிணறு வெட்டப் பூதம் கிளம்பிய கதையாக வல்லவோ இருக்கிறது. உன்னை இங்கே வரழைத்ததே தப்பிதம் போலிருக்கிறது. உன் பெற்றோர்கள் என்னையல்லவா நிந்திப்பார்கள்?"

"சரி. உன்னால் ஒன்றும் நடக்காது. நானே முயற்சிக்கிறேன். வா, போகலாம்." என்று அழைத்துக்கொண்டு கிணற்றுப் பக்கம் வந்தேன். வேலைக்காரர்கள் அங்கே ஒருவருமில்லை.

நாங்களிருவரும் ஆற்றில் ஸ்நானம் செய்து விட்டு வீட்டுக்கு வருவதற்குள் மத்தியானமாகி விட்டது. வழியெல்லாம் நண்பன் என் எண்ணத்தை மாற்றிக்கொள்ளும்படி உபதேசித்தான. அவன் உபதேசம் அதிகமாக ஆக என் உறுதியும் பலப்பட்டது, வீட்டில் சமையல் தயாராயிருந்தது. நாங்களிருவரும் போஜனத்தை முடித்துக் கொண்டு மாடியிலிருந்த ஒரு அறைக்குப் போய் விட்டோம். என் நண்பன் தனக்கு ஏதோ வெளியே வேலையிருப்பதாயும், என்னை மாத்திரம் சற்று நேரம் படுத்துச் சிரமபரிகாரம் செய்து கொள்ளும்படியும் சொல்லி விட்டுக் கீழே போய் விட்டான்,

அவன் சென்ற பிறகு தனித்திருந்த நான் மீனாவைப் பற்றி யாரிடம் எப்படிப் பேசி காரியத்தை முடிக்கிறது என்பதுபற்றி என் மனதிற்குள்ளேயே பற்பல யோசனைகள் செய்துகொண்டிருந்தேன். ஒன்றுமே சரியாகத் தோன்றவில்லை. அறைக்கு வெளியேயிருந்த நீண்ட வராந்தாவில் மேலும் கீழும் பைத்தியம் பிடித்தவனைப் போல நடந்து கொண்டிருந்தேன், வீட்டின் பின் பக்கத்தில் சிறு தோட்டமும் கிணறும் இருந்தன. கிணற்றில் யாரோ தண்ணீர் இறைக்கும் சப்தம் கேட்டு திரும்பிப் பார்த்தேன், அவள் தான் மீனா! ஒருபெரிய தொட்டியில் தண்ணீரை நிரப்பிக் கொண்டிருந்தாள். அது முடிந்ததும் சில புடவைகள், குழந்தையின் துணிகள் முதலியவற்றிற்கு சோப்பு போட்டு ஊற வைத்து ஒவ்வொன்றாய் எடுத்துத் துவைக்க ஆரம்பித்து விட்டாள். அவள் செய்வதையெல்லாம் கவனித்துக்கொண்டு அவளின் எழிலைப் பருகியபடியே சுமார் 2 மணி நேரம் நின்றிருந்தேன். அவள் என்னைக் கவனிக்கவே இல்லை,

அன்று இரவைத் தூக்கமில்லாமலே கழித்தேன். மறுநாள் எழுந்து வீட்டிலேயே காப்பி சாப்பிட்டு விட்டு வாழைத் தோட்டத்திற்கு இருவரும்

புறப்பட ஆயத்தமானேன், என் நண்பன் மீனாளின் வருகையை தடுப்பதற்கே இந்த ஏற்பாடு செய்திருக்கிறான் என்று நினைத்தேன். எனக்கு அவனோடு போக இஷ்டமில்லை. "நீ மாத்திரம் போய் விட்டுவா. எனக்கு உடம்பு ஒரு மாதிரியாயிருக்கிறது" என்றேன். என் மன நிலையை ஒருவாறு ஊகித்தறிந்த அவன் பேசாமல் போய் விட்டான். அவன் சென்ற பின்னர் நானும் உற்சாகமில்லாமல் கட்டிலில் படுத்துக்கொண்டிருக்கையில் எதிரே அலமாரியிலிருந்த ஒரு புத்தகம் கண்ணில் பட்டது. அதை எடுத்துத் தாள்களைப் புரட்டிக்கொண்டே ஏதோ யோசித்தவண்ணமிருந்தேன். மீனாளை மறக்க முடியவில்லை! மாடிப்படியேறி யாரோ வருவது போல் தெரிந்தது. புத்தகத்தில் அதிக கவனம் செலுத்திக்கொண்டிருப்பது போல பாசாங்கு செய்து திரும்பிக்கூடப் பார்க்கவில்லை. வந்த ஆசாமி வாசற்படியிலேயே நின்று விட்டதாகத் தெரிந்தது. ஜாடையாகக் கவனித்தேன், அவள் தான்—மீனா! தோய்த்த துணிகளையெல்லாம் வராந்தாவில் கட்டியிருக்கும் கம்பியில் உலர வைக்க வந்தாள். அதற்கு நான் இருந்த அறையின் வழியாகத்தான் செல்ல வேண்டும். நானிருப்பதைக் கண்டு தயங்கி நின்றுவிட்டாள். படுக்கையிலிருந்து எழுந்து "ஏன், மீனா, நீ தாராளமாய் 'வரலாமே" என்றேன். அவள் நேரே பின் பக்கத்து வராந்தாவில் சென்று பத்து நிமிஷத்திற்குள் துணிகளை கொடியில் போட்டுவிட்டுத் திரும்பினாள். அந்தப் பத்து நிமிஷத்திலும் பத்தாயிரம் எண்ணங்கள் அலை அலையாக என் மனதில் எழுந்து அழிந்தன. அவள் என் அறைக்குள் நுழைந்து வெளியே செல்ல யத்தனிக்கையில் "மீனா, ஒரு நிமிஷம் நிற்கமுடியுமா?" என்றேன். அவள் நின்றாள்.

"நேற்று என் நண்பன் இங்கே வந்ததும் உன்னைக் கண்டித்தானா?"

"இல்லையே" என்று சட்டெனப் பதிலளித்தாள்.

"பின் ஏன் என்னைப் பார்க்கப் பயப்படுகிறாய்? அல்லது அவன் உன் தாயாரிடம் அதைப் பற்றிச் சொன்னானா?"

"அவர் ஒருவரிடமும் ஒன்றுமே சொல்லவில்லை"

"சரி. நான் ஒன்று கேட்கிறேன். கோபித்துக்கொள்ளாமல் பதில் சொல்லுவாயா?"

"கேளுங்கள். முடிந்தால் சொல்லுகிறேன்"

"உனக்குத்தான் கல்யாணமாகவில்லையென்று சொல்லுகிறாயே......"

"தயவு செய்து என்னிடம் கேட்காதீர்கள். என் தாயார் இருக்கிறார்கள். இல்லாவிட்டால் உங்கள் நண்பரே பார்த்து என் தாயாரிடம் சொன்னாலும் அவர்கள் தட்டமாட்டார்கள்"

"அது கிடக்கட்டும். முதலில் உன் அபிப்பிராயம் தெரிய வேண்டாமா?"

"என்னைத் தன் சொந்தக் குழந்தைபோல இந்த வீட்டில் வளர்த்து வருகிறார்கள். இவர்கள் எப்படிச் சொல்லுகிறார்களோ அதன்படிதான் நான் நடக்கமுடியும்"

இப்படிப் பேசிக்கொண்டிருக்கும்போதே "மீனா! மீனா!!" என்று என் நண்பனின் தாயார் கூப்பிடும் சப்தம் கேட்டு "நான் போய் வருகிறேன்" என்று சொல்லிவிட்டுக் கீழே விரைந்து சென்று விட்டாள்.

அவள் எப்படியோ என் மனதை நன்றாய் அறிந்துகொண்டிருக்கிறாள் என்பதை நினைத்தபோது எனக்கு மனதில் ஏதோ ஒரு உணர்ச்சி எழுந்தது.

மத்தியானம் நண்பன் வந்தான் களைப்புடன். இருவரும் சாப்பிட்டு விட்டு சாவகாசமாய் வெற்றிலை போட்டுக் கொண்டிருக்கும் போது "உன் முகம் இன்று என்ன இவ்வளவு வாட்டமாயிருக்கிறதே?" என்று என்னைக் கேட்டான். 'ஒன்றுமில்லை' என்றேன்.

"எனக்குத் தெரியும் எல்லாம். என்னிடம் ஏன் மறைக்கிறாய்? மீனாளைப் பற்றித் தானே ஏங்கியிருக்கிறாய்?"

"அது தெரிந்திருந்தும் என்னை ஏன் கேட்கிறாய்?"

"பொறுத்தது பொறுத்தாய். இன்னும் இரண்டு நாள் தான். எல்லாம் தெரிந்து விடும்!"

"ஏன்? இரண்டு நாளில் அவள் உன்னிடம் ஏதும் தெரிவிப்பதாகச் சொன்னாளா?"

"அவள் சொல்கிறதென்ன? உன் பெற்றோர்கள் சம்மதித்து விட்டால் அவளுடைய தாயாரை நான் சரிப்படுத்தி விடுகிறேன்"

"அப்படியானால் இரண்டு நாள் என்று ஏன் சொன்னாய்?"

"அவர்களே நேரில் வந்து விடுவார்கள்!"

"நீ கடிதம் எழுதி விட்டாயா?"

"நானாக ஒன்றும் எழுதவில்லை. நேற்று இரவு நீ தூங்கிய பின்பு என் தாயாரிடம் தோட்டத்தில் நீ செய்த காரியத்தைச் சொன்னேன். அவர்கள் உடனே உன் பெற்றோர்களை வர வழைக்கும்படி யோசனை கூறினார்கள்......"

"உன் தாயாரிடமும் சொல்லி விட்டாயா? அவர்கள் என்னைப் பற்றி எவ்வளவு கேவலமாக நினைப்பார்கள்? என் பெற்றோர்கள் இதில் தலையிட்டால் ஒன்றுமே நடக்கப்போவதில்லை. உன்னுடைய உதவியை நாடியதே பெருத்த தப்பிதமென்று இப்போதுதான் தெரிகிறது."

"இல்லை. உன்னிஷ்டம் போலவே எல்லாம் நடக்கும், அதைரியப்படாதே." என்று சமாதானமாக ஏதேதோ பேசினான்.

இரண்டு நாட்கள் கழிந்தன. மூன்றாம் நாள் காலை என் தாயாரும் தகப்பனாரும் திடீரென, எதிர்பார்த்தபடி, வந்திறங்கினார்கள். நாங்களிருவரும் அவர்களை வரவேற்றோம். எனக்கு அவர்களைப்பார்க்கவே மனமில்லை. வெட்கமும், பயமும் சேர்ந்து கொண்டன. அவர்களும், என் நண்பனும், அவன் தாயாரும் கூடி இரண்டு நாள் விவாதித்தார்கள். அதெல்லாம் எனக்கு ஒன்றும் விவரமாய்த் தெரியாது. தெரிந்துகொள்ளப் பிரியப்படவுமில்லை. பரீக்ஷை எழுதிவிட்டு முடிவு எப்படியாகுமோ என்று காத்திருந்தபோதும், வேலைக்காக ஒரு வெள்ளைக்காரத் துரையைக் கண்டு பேசி, பின்பு அவன் வீட்டிற்கு உத்திரவு அனுப்புவதாகச் சொன்னபோதும் கூட என் மனம் அவ்வளவு கவலையை யடையவில்லை. நான்குபேர்கள் கூடிய, 'மகா நாட்டின்' முடிவு என்ன ஆகுமோ என்று தான் ஒவ்வொரு நிமிஷமும் எதிர்பார்த்திருந்தேன். நான் மாடி அறையிலிருந்தேன். கீழே என் தகப்பனார் கோபத்தினால் என்னைத் தூஷித்த வார்த்தைகளும் அதற்கு என் தாயார் சொல்லும் சமாதானமும் அரைகுறையாகக்கேட்டன. என் நண்பன் என்னை ஏற்கனவே எச்சரிக்கை செய்திருந்ததால் நான் கோபப்பட்டுக் கீழே இறங்கிவிடவில்லை. இரவு பத்து மணியிருக்கும்: நான் மாடியின் பரந்த வெளியில் நிலவின் ஒளியில், மேல் துணியை விரித்துப்படுத்திருந்தேன். "தவம் கிடக்கிறாயா?" என்று சிரித்துக்கொண்டே என் பக்கத்தில் வந்து அமர்ந்தான். "முடிவு என்ன?" என்று ஆத்திரத்தோடும், ஆவலோடும் கேட்டேன். அவன் பெருமூச்சு விட்டான். என் நாடி ஒடுங்கி விடும்போலிருந்தது.

"அடேயப்பா, உன் தகப்பனாரைப்போல் பிடிவாதக்காரரை நான் இதுவரை பார்த்ததே இல்லை. ருத்ரன், விஸ்வாமித்திரன். இவர்கள் கோபமெல்லாம் உன் தகப்பனார் முன்பு நிற்கவே முடியாது......"

"அதெல்லாம் எனக்குத் தெரியும். வீணில் என்னை வதைக்காதே. சுருக்கமாய்ச் சொல்லு. முடிவு என்ன ஆயிற்று?"

"உன் விருப்பத்திற்கு அவர்கள் சம்மதித்துவிட்டார்கள்."

"நிஜந்தானா? விளையாட்டல்லவே?"

"சத்தியமாகச் சொல்லுகிறேன்.

"என் நெஞ்சில் பால் வார்த்தாய். இத்தனை நேரமும் எரித்துக் கொண்டிருந்த நிலவிலிருந்து இப்போது தான் குளிர் காற்று வீசுகிறது. உன் தோட்டத்தில் மலர்ந்திருக்கும் மல்லிகை இப்போதுதான் மணத்தை அள்ளி இறைக்கிறதாகத் தெரிகிறது......"

"நிறுத்து. கல்யாணம் எப்போது நிச்சயமாகியிருக்கிறது என்று கூடத் தெரியாமல் பேசுகிறாயே!"

"அதைப் பற்றி இனி என்ன கவலை. மீனாள் என் சொத்தாகி விட்டாள்; என் பொக்கிஷம். குப்பையில் கிடக்கும் குண்டுமணியைப் போல் இத்தனை நாள் ஒளி மங்கியிருந்தாள். என் ஸ்பர்சம் பட்டமாத்திரத்தில் அவள் எப்படி ஜ்வலிக்கப்போகிறாள் பார்! நான் அவளை தோட்டத்தில் கண்டு பேசியபோது என்னை ஏளனம் செய்தாயே. ஒரு நாளைக்கு அவளை நீயே கண்டு பிரமிக்கப் போகிறாய்..."

"போதுமப்பா உன் குண்டுமணி—அந்த மீனாளைக் கண்டு யாரும் மோகித்து மயங்கி விடாதபடி நீயே வைத்துப் பூஜை செய்து கொள்" என்று சொன்ன சப்தம் கேட்டுத் திரும்பிப் பார்த்தேன். என் நண்பனின் தாயார்! என் உணர்ச்சிப் பெருக்கை அடக்க முடியாமல் வாரிக் கொட்டிக் கொண்டிருந்ததில் அவர்கள் வந்ததைக் கூட நான் கவனிக்கவில்லை. வெட்கத்தால் தலை குனிந்தேன்.

இனம்! இனம்!! இனம்!!!
ஐந்தணா தபால்பில்லை அனுப்புகிறவர்களுக்கு 'விறலிவிடுதூது வசனம்' என்ற புத்தகம் இனம். எந்த தேசத்து ஸ்டாம்பும் அனுப்பலாம்.
ஒற்றுமை ஆபீஸ், : : தியாகராய நகர், மதராஸ்.

ரூ. 50,000 மதிக்கப்பெற்ற நகைகள்
பொது மக்களுக்கு அளிக்கப்படுகின்றன



"லண்டன் நியூ கோல்டால்" இப்பொழுது புதிதாகக் கண்டுபிடிக்கப்பட்டவை. இதை உலகத்தின் எட்டாவது அதிசயம் என்றே சொல்லலாம்- இது இப்பொழுது இந்தியா முழுவதும் பிரபலமாகிவிட்டதால், இதை இன்னும் பிரபலப்படுத்தவேண்டிய அவசியமுமில்லை. பொதுமக்களும, பத்திரிகைகளும் இதையே அதிகமாகப் புகழ்கிறார்கள். இந்த கெமிகல் தங்கத்தின நிறம் மாறாமலிருப்பதால் இதிலிருந்து நல்ல நகைகள் செய்யலாம்.

இதை பிரபலப்படுத்துவதற்காக இப்பொழுது 6 தோல, "லண்டன் நியூ கோல்ட்" 2ஜதை வளையல்கள் 2 ஜதை தோடுகள் 2 மோதிரங்கள் மிகவும் அழகாகச் செய்யப்பட்டதுமான நகைகள் சாம்பிளாக அனுப்பப்படும் இந்த குறைந்த கட்டணம் சில நாட்களுக்குத்தான். உடனே எழுதவும்.

இலவசம்:—விவரங்கள் அடங்கிய படங்களுடன் கூடிய காட்லாக் இனம்.

London Commercial Co.,
(EAB) Post Box 165. (S.M.M) LAHORE (India)

நமது தொடர் கதை

ஸ்ரீகாந்தன்

சரத்சந்திரர் எழுதியது.

(ஸ்ரீ. கு. ப. ராஜகோபாலன் மொழிபெயர்த்தது)

முன் கதைச் சுருக்கம்

சிறுபிராயத்தில் இந்திரநாதனுடன் சேர்ந்து ஸ்ரீ காந்தன் தனது இளமைப் பருவத்தை மிகவும் துணிகரமாகவும் நிர்ப்பயமாகவும் கழித்ததுடன் சமூகத்தை விரோதிக்கும் விதமாகவும் நடந்து கொள்கிறான். இதற்கப்புறம் ஸ்ரீகாந்தன் ஓர் நாள் தனது பழைய நண்பனான ஜமீன்தாரின் வீட்டில் பியாரியைச் சந்திக்கிறான். பியாரிக்கு ஸ்ரீ காந்தனிடம் விசேஷ ப்ரீதி: பிறகு அவன் வேறு இடம் கிளம்பி வழியில் ஒரு சந்யாஸியை அடைந்து சில காலம் தங்கி விட்டு அவரிடமிருந்து பிரிகிறான். ஸ்ரீ காந்தனுக்கு தேக அசௌக்யம் ஏற்படுகிறது. இந்தச் செய்தியை யறிந்து பியாரி அவனது உதவிக்கு வருகிறாள். பியாரி வீட்டிற்குப் போன அவன் அங்கு குதூஹலத்தைப் பார்க்கிறான். பிறகு அவன் பியாரிடம் தன் விவாகம், ரங்கூன் பிரயாணம் இவற்றைப் பற்றி சம்பாஷித்து விடை பெற்று கப்பலேறிக் கிளம்புகிறான். கப்பலில் அவனுக்குப் பலருடன் பழக்க மேற்படுகிறது. ரங்கூன் போய்ச் சேர்ந்ததும் அவனுக்கு ஏற்படும் அனுபவம் விநோதமாக இருக்கிறது. அங்கு அவன் உத்யோகத்திற்காக அலைந்த பின் அதை சம்பாதிக்கிறான். இதனுடன் தான் கப்பலில் சந்தித்த அபயாவின் புருஷனைக் கண்டு பிடித்து, அவன் அபயாவை ஏற்கும்படி வழி தேடுகிறான். பிறகு அபயாவை ஸ்ரீகாந்தன் சந்தித்தபோது அவள் அவனிடம் பல சீரிய கருத்துகளை வெளியிடுகிறாள். ராஜலக்ஷ்மியிடமிருந்து ஒரு கடிதம் வர ஸ்ரீகாந்தன் ரங்கூனைவிட்டு புறப்பட்டு அவளிடமே வந்து சேருகிறான். சில தினங்களுக்கப்பால் இருவரும் யாத்திரை கிளம்புகின்றனர். ஸ்ரீகாந்தன் மனோநிலை வேறுபடுகிறது. ஸ்ரீகாந்தன் தனியே புறப்பட்டுப் போய், ஊரில் தேக அசௌக்கியமடைகிறான். அந்நிலையில் அவன் ராஜலக்ஷ்மிக்குக் கடிதம் எழுத, அவள் அவனுக்கு சகாயம் புரிய உடனே அங்கு வந்து சேருகிறாள். ராஜலக்ஷ்மி அவனிடம் காட்டும் ப்ரீதி மிகவும் அபாரமானது. ஒருநாள் தன்னையே தான் அவனுக்கு அளித்து விட்டிருப்பதாகவும் அவள் சொல்கிறாள். இருவரும் இதற்கப்புறம் கங்காமாடி கிராமத்திற்குப் போக, வழியில் ஒரு சாதுவை சந்தித்து அவரையும் தங்களுடன் அழைத்துப்போகின்றனர். பிறகு அவர் பிரிந்து போகிறார் பின்பு இவர்கள் தங்கள் கிராமத்திற்கு வருகின்றனர். அங்கு ஒரு ஏழைக் குடும்பத்தில் விவாகம் நடக்கும் முறையும் குசாரி மஹாசயர் மனைவி கூறிய விருத்தாந்தமும் விநோதமாயிருக்கின்றன.

குசாரியின் மனைவி விவரித்த அந்தத் துக்கக் கதையின் சாராம்சம் இதுதான். வீட்டில் அவர்களுக்குச் சாப்பாட்டைப் பற்றி கவலையில்லை. யதேஷ்டமாக இருந்தது. ஆனால் வாழ்க்கையில் முகத்தைத தொங்க விட்டுக் கொண்டு வெட்கத்துடன் காலங்கடத்த வேண்டி ஏற்பட்டு விட்ட ஒரு விஷயம் தான் அவளுக்குக் கஷ்டமாக இருந்தது. அதற்குக் காரணம் சுனந்தை தான்! அவளுடைய மைத்துனன் ரகுநாத நியாயரத்னர் கூட துவேஷம் காட்டுவதில் சளைக்கவில்லை. ஆனால் சுனந்தையால், தான் பரஸ்பரம் கூடி வாழ்வதே அசாத்யமாகிவிட்டது. அவ்விருவரும் இப்பொழுது எங்களுடைய பிரஜைகளாக இருப்பதால் நாங்கள் எப்படியாவது அவர்களை வசப்படுத்தி வழிக்குக் கொண்டு வர வேண்டும்.

நடந்த விஷயமும் சுருக்கமாக இதுதான். அவளுடைய மாமனாரும் மாமியாரும் தவறிப்போன உடன் அவள் வீட்டுக்கு எஜமானியானாள் அப்பொழுது 'யது' எட்டு வயது பையன். அந்தப் பையனை மனிதனாக்கிமுன்னுக்குக் கொண்டு வரவேண்டிய பொறுப்பு அவள் தலையில் சுமந்தது. அன்று முதல் அவள் அதை ஏற்றும் வந்திருக்கிறாள். பிதுரார்ஜிதமாக ஒரு மண் வீடும் கொஞ்சம் நிலமும் தான் இருந்தன. அதை வைத்துக்கொண்டு தான் அவள் புருஷன் எப்படியோ குடும்பத்தை நடத்தினார் இன்று இருக்கும் தனம்—தான்யம், செல்வாக்கு, மதிப்பு, எல்லாம் அவருடைய சுயார்ஜிதம், தம்பியால் தமயனுக்கு ஒரு உபகாரமும் கிடையாது. அதை அவர் ஒரு நாளும் கேட்டதுமில்லை.

"அவர் ரொம்பத் தகராறு செய்துகொண்டிருந்தாரா?" என்று நான் கேட்டேன்.

"யாதுக்காகத்தகராறுஅப்பா? இதெல்லாம் அவனுடையது தான். சுனந்தை நடுவில் வந்து விழுந்திருக்காவிட்டால் இந்தக் குடும்பம் தங்கமாக நடந்து கொண்டிருக்கும்." என்றாள்.

அவள் சொன்னது முற்றிலும் எனக்குச் சரியாக அர்த்தமாகவில்லை. நான் ஆச்சரியத்துடன் "ஆனால் உங்களுடைய மகன்—" என்று இழுத்தேன்.

அவள் முதலில் நான் சொன்னதை அர்த்தம் செய்து கொள்ளவில்லை. பிறகு தெரிந்து கொண்டு "அந்த விஜயனைப்பற்றிச் சொல்லுகிறாயா? அவன் எங்களுடைய பையனில்லை அப்பா. அவன் ஒரு சிஷ்யன். மைத்துனனுடைய பாடசாலையில் தான் படிக்கிறான். ஆனால் எங்கள் வீட்டில் தான் இருக்கிறான்" என்று விஜயனைப்பற்றி நாங்கள் கொண்டிருந்த தப்பு அபிப்பிராயத்தைப் போக்கி விட்டு "எவ்வளவு சிரமப்பட்டு நான் என் மைத்துனனை மனிதனாக்கினேன் என்பது கடவுளுக்குத்தான் தெரியும். கிராமத்தார்களுக்குக் கூடக் கொஞ்சம் கொஞ்சம தெரியும். ஆனால் இன்று அவன் அதையெல்லாம் மறந்து விட்டால் கூட நாங்கள் மட்டும் மறக்க முடியாது" என்று சொல்லி அவள் கண்களைத் துடைத்துக்கொண்டு "ஆனால் அதெல்லாம் போகட்டுமப்பா. அது பெரிய கதை. மைத்துனனை முன்னுக்குக் கொண்டு வருவதற்காக நான் அவனை மிகிராபுரத்து சிபுத்தர்காலங்காருடைய பாடசாலைக்கு அனுப்பினேன். குழந்தையை விட்டுவிட்டிருப்பதற்கு முடியவில்லை என்றுநானே மிகிரபுரத்திற்குப் போய் இருந்தேன்—அதைக் கூட அவன் இப்பொழுது நினைக்கவில்லை. போகட்டும்-இப்படியாகச் சில வருஷங்கள் சென்றன. மைத்துனனுடைய படிப்பு முடிந்தது. என் புருஷன் அவனுக்குக் கலியாணம் செய்து வைக்க வேண்டும் என்று பெண் தேடப் புறப்பட்டார். அப்பொழுது திடீரென்று சொல்லாமல் கொள்ளாமல் அவன் ஒரு நாள் சிபுத்தர் காலங்காருடைய பெண் சுனந்தையை கலியாணம் செய்துகொண்டு வந்து சேர்ந்தான். நான் ஒன்றும் சொல்லவில்லை அப்பா, அப்பேர்ப்பட்ட தம்பியை அவர் ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டார்" என்றாள்.

நான் ஆத்திரத்துடன் "அப்படி ஏற்றுக்கொள்ளாததற்கு விசேஷமான காரணம ஏதாவது உண்டோ?" என்று கேட்டேன்.

"இல்லாமலென்ன? அவர்களுக்குச் சொந்த வீடு கூடக்கிடையாது. குலம்-கோத்திரம் ஆசார

விவகாரங்களில் ரொம்ப மட்டம். என் வீட்டுக்காரருக்குக் கோபம் வந்துவிட்டது. அந்தத் துக்கத்திலும் வெட்கத்திலும் அவர் ஒரு மாதம் பேசக்கூடயில்லை. ஆனுல் நான் கோபமடையவில்லை. சுனந்தையைப் பார்த்தது முதல் அவளுடன் நெருங்கிப் பழக ஆரம்பித்தேன். அதன் பிறகு அவளுடைய தாய் இறந்துவிட்டதாகவும், தகப்பனுர் தன்னை சிஷ்யனிடம் ஒப்படைத்துவிட்டு, சந்நியாசம் வாங்கிக்கொண்டு போய் விட்டதாகவும், அவள் மூலமாகக் கேள்விப்பட்டதும், அந்தப்பெண்ணை அடைந்ததினுல் எனக்கேற்பட்ட சந்தோஷத்தை உனக்கு எடுத்துச் சொல்லமுடியாது. ஆனுல் அவள் ஒரு நாள் இப்படிப் பழிவாங்குவாள் என்று நான் அப்பொழுது கண்டேனு?'' என்று சொல்லிவிட்டு அவள் திடீரென்று விக்கி விக்கி அழுவாரம்பித்தாள். அவளுடைய வேதனை மிகத்திவிரமாக இருந்தது என்று கண்டேன். ஆனுல் நான் மௌனமாக இருந்தேன்.

இது வரையில் ஆவலாய்ப் பேசாமல் உட்கார்ந்திருந்த ராஜலக்ஷ்மி பதட்டத்துடன் ''இப்பொழுது அவர்கள் எங்கே இருக்கிருர்கள்'' என்று கேட்டாள்.

பதிலுக்கு அவள் தலையை அசைத்து கை காட்டியதிலிருந்து அவர்கள் அப்பொழுதும் அந்தக் 'கிராமத்திலேயே தான் இருக்கிருர்கள் என்று அறிந்தோம். அதற்குப் பிறகு வெகு நேரம் ஒருவரும் பேசவில்லை. அவள் தன்னை சமாளித்துக் கொள்ளுவதற்குச் சிறிது நேரமாகிவிட்டது. ஆனுல் அந்த விஷயத்தில் உண்மை என்ன என்பதை இன்னும் சரியாக நாங்கள் தெரிந்து கொள்ளவில்லை. இந்த மாதிரி என் சாப்பாடும் ஒரு விதமாக முடிந்தது. ஏனென்ருல் சமயலறைத் திக்கிலிருந்து அதற்கு ஒரு விதமான தாமதமும் ஏற்படவில்லை. திடீரென்று அவள் கண்களைத் துடைத்துக் கொண்டு சரியாக உட்கார்ந்தாள். என் இலையைப் பார்த்து அனுதாபக் குரலுடன் ''என் துக்கத்தினுடைய கதையை சொன்னுல் முடிவுகிடையாது. அதைக் கேட்க உனக்கும் தைரியமிருக்காது. எங்களுடைய தங்கமான குடும்பத்தைப் பார்த்தவர்களுக்குத் தான், சின்ன நாட்டுப் பெண் எப்படி அதை சர்வநாசம் செய்துவிட்டாள் என்பது தெரியும். அந்த லங்கைக்காண்டத்தை உங்களுக்குச் சுருக்கமாகச் சொல்லுகிறேன்'' என்று மறுபடியும் ஆரம்பித்தாள்,

''எங்களுடைய பொறுப்பில் இருந்த நிலங்களின் ஒரு பாகத்தில் வலையச்சி ஒருவள் இருந்தாள். ஒரு வருஷத்திற்கு முன்பு திடீரென்று ஒரு நாள் காலையில் அவள் ஒன்றும் தெரியாத தங்கள் வீட்டுப் பெண்ணை கூட்டிக்கொண்டு எங்கள் வீட்டிற்கு வந்தாள். கோபத்துடன் அவள் என்ன சொன்னுள் என்று எனக்கு நினைவில்லை. ஆனுல் சொன்னது பூராவும் சுத்தப் பொய். ஒன்று கூட உண்மை கிடையாது. சின்ன நாட்டுப் பெண் குளித்து விட்டுச் சமையலறைக்குப் போனுள், அவள் வலையச்சி சொன்னதைக் கேட்டு திடுக்கிட்டுப்போனுள். அவள் போனபிறகு கூட நாட்டுப் பெண்ணினுடைய நிலைமை மாறவில்லை. நான் அவளிடம் போய் 'ஏம்மா சுனந்தா நிற்கிருய். சமயலுக்கு நாழிகை ஆகிறதே' என்று சொல்லி பதிலை எதிர்பார்த்து

SANITARY FITTINGS



பர்ன் வெண்ணிற சலவைக்கல் சானிடரி பிட்டிங்குகள். இதைப்போன்ற மற்ற போர்ஸிலின் அல்லது களிமண் தயாரிப்புகளைக் காட்டிலும் உறுதியுள்ளவைகளாதலால் நீடித்த காலம் ஆரோக்கியமாய் உழைக்கும்.

அழகான அமைப்பு, அற்புத தோற்றம். இவை சுலபமாக உடையாது, வெடிக்காது. சுலபமாக சுத்தம் செய்யலாம்.

இந்தியாவில், இந்திய ஊழியர்களைக்கொண்டு, இந்திய மூலதனத்தைக் கொண்டு தயாரிக்கப்படுவது. மிதமான விலை. வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சாமான்களின் ரகத்திற்கு இணையானது.

விவரமான புத்தகம் கேட்போருக்கு இலவசமாக அனுப்பப்படும்.

BURN & CO., LTD.
ESTABLISHED 1781
12, MISSION ROW, CALCUTTA.
WORKS AT RANIGANJ AND JUBBULPORE

SP-4(A)

SAVE FOR VICTORY
BRITISH WAR SAVINGS MOVEMENT
ASK YOUR BANK

பர்ன் & கம்பெனி லிமிடெட்,
ஸ்தாபிதம்: 1781
12, மிஷன்ரோ, கல்கத்தா.
தொழிற்சாலை: - ராணிகஞ்சு & ஜபல்பூர்.
சென்னை ராஜதானிக்கு ஏஜண்டுகள்:—
பம்பாய் கம்பெனி லிமிடெட், த. பெ. நெ. 109, மதராஸ்.

ஆரணி ஸில்க் ஹவுஸ்

(பட்டு சேலை தயாரிப்பவர்கள்)

பிராஞ்சு:—85, பெரிய தெரு, கும்பகோணம்
17, T. P. கோயில் தெரு, திருவல்லிக்கேணி.

தலைமை ஆபீஸ்:— ஆரணி. (ஸ்தாபிதம்: 1894)

புது வருஷத்திற்காக விற்பனை. ரூபாய் ஒன்றுக்கு ஒரு அணு வீதம் குறைத்து விற்கப்படும்.

எங்கள் சொந்த கைத்தரியில் தயாரித்த கொள்ளே காலம் பட்டு சேலைகள்; புது மாதிரியான பார்டர்களில் அற்புதமான டபிள் கலர்களில் தயாரித்துள்ளோம்:

ஒரு முறை விஜயம் செய்யுங்கள்.

N. B:—எங்கள் சேலைகளின் தலைப்புகள் முத்துச் சீர்கள் ஓர் ஸ்பெஷல் ரகம். டெலிபோன்: 8154.

ஹிந்தி ஆசான்

உபாத்தியாயர் உதவியில்லாமல் தமிழ் உச்சரிப்பைக்கொண்டே நாலே வாரத்தில் நல்ல ஹிந்தி பாஷையை சுலபமாகக் கற்றுக்கொள்ளலாம். விலை 12 அணு. ஒரு காபி அனுப்ப அணு 14 மணியார்டர் செய்யவும்.

எம். எஸ். ராமுலு கம்பெனி,
286, எஸ்பிளனேட், மதராஸ்.

IMMEDIATE VASHIKARAN

On contract basis we undertake to influence or subjugate like spellbound any one or more persons (male or female) instantly and surely cause them entirely at your own grasp quite easily. Particulars against Stamps SANTI ASRAM, Dacca (Bengal)



பெரிய வெடிகுண்டு விமானம்

ஏராளமான வெடிகுண்டுகளை ''ஸ்டர்லிங்'' என்ற இந்த விமானத்தில் ஏற்றிக் கொண்டு போக முடியும். படத்தில் இந்த விமானத்தில் பெட்ரோல் ஊற்றப்படுவதை காணலாம்.

அவள் முகத்தைப் பார்த்த பொழுது நான் பயந்தே போனேன். கண்களில் நெருப்பு போன்ற ஜ்வாலை இருந்தது. முகம் ஒரேயடியாக வெளுத்து போயிருந்தது வலைச்சியினுடைய வார்த்தை ஒவ்வொன்றும் அவள் உடலைக் குன்றச் செய்தது. அவள் உடனே எனக்கு பதில் சொல்லவில்லை. ஆனுல் பரபரப்புடன் என் அருகில், வந்து இந்த வலையச்சி விஷயமாக நீங்கள் வேறு ஏதாவது செய்ய மாட்டீர்களா? அவர்களிடமிருக்கும் எல்லாவற்றையும் நீங்கள் எடுத்துக்கொண்டு விட்டால் அவளுடைய சின்னஞ் சிறு பையன் தெருவில் நிற்கவேண்டி வருமே என்ருள். நான் ஆச்சரியமடைந்து போல் 'நீ சொல்லுவது வேடிக்கையாக இருக்கிறது. அவர்கள் சொத்துப் பூராவும் ஏலத்திற்கு வந்தது. இவர் ஏலத்தில் வாங்கினர். வாங்கினதைப் பிறருக்கு விட்டுவிட முடியுமா?'' என்றேன். 'ஆனுல் என் மைத்துனர் இவ்வளவு பணத்தை எங்கிருந்து அடைந்தார்' என்று அந்தப் பெண் கேட்டாள். நான் கோபத்துடன் 'அந்த விஷயத்தை உன் மைத்துனரிடம் கேள் போ' என்று சொல்லிவிட்டு ''நான் வீட்டு வேலையைச் செய்யப்போய்விட்டேன்'' என்ருள்.

''வாஸ்தவம் தான் வாங்கின நிலத்தைத் திருப்பிக்கொடுக்கும்படி சொல்ல சின்ன நாட்டுப் பெண் யார்?'' என்று கேட்டாள் ராஜலக்ஷ்மி.

''நீ தான் சொல்லு அம்மா'' என்ருள் குசாரியின் மனைவி. ஆனுல் அதைச் சொன்ன உடனேயே அவள் முகம் வெட்கத்தால் கருத்துவிட்டது. திரும்பவும் அவள் ''ஆனுல் நாங்கள் சொத்து சரியான ஏலத்திற்குப் போய் வாங்கினேமென்பதில்லை: நாங்கள் அவர்கள் வீட்டிற்கு வம்ச பரம்பரையாகப் புரோகிதர்கள். சாகும்பொழுது அந்த வலைஞன் இவைகள் எல்லாவற்றையும் பார்த்துக்கொள்ளும்படி சொல்லிவிட்டுப்போனுன். ஆனுல் கூடவே அவன் அவ்வளவு கடனும் வைத்துவிட்டுப் போயிருந்தான் என்பது அவருக்குத் தெரியாது'' என்ருள்.

அவள் சொன்ன வார்த்தையைக் கேட்டதும் நாங்கள் இருவரும் ஏனே அப்படியே ஸ்தம்பித்துப்போனேம்! ஏதோ ஒரு ஆபாசமான வஸ்து எங்கள் உள்ளத்தில் ஒரு புண்ணை உண்டாக்கிவிட்டது. குசாரியின் மனைவி இதை யறிந்துகொள்ளவில்லை. அவள் மறுபடியும் ஆரம்பித்தாள்.

''ஜபம் ஆன்னிகம் முதலியவற்றை முடித்துக்கொண்டு இரண்டு மணி நேரத்திற்குப் பிறகு திரும்பிப் போய் பார்த்தேன். சுனந்தை அதே இடத்தில் அப்படியே அசையாமல்உட்கார்ந்திருந்தாள். ஒன்றுமே செய்யவில்லை. அவர் கச்சேரி வேலை முடிந்து வரும் சமயம் மைத்துனன், பினுவைக் கூட்டிக்கொண்டு உற்சவத்திற்குப் போனவன் திரும்பி வரும சமயம், விஜயன் ஸ்நானம் செய்யப் போய் விட்டான். திரும்பி வந்து பூஜைக்கு உட்கார்ந்துவிடுவான். எனக்குக் கோபம் அசாத்தியமாக வந்து விட்டது. ''இன்று நீ சமைக்கப்போவதில்லையா? அந்த அயோக்கியப் பெண்ணின் வார்த்தையைப் பற்றி யோசித்துக்கொண்டே உட்கார்ந்திருக்கப்போகிருயா?'' என்று கேட்டேன். சுனந்தா நிமிர்ந்து ''அககா, இல்லை அக்கா: அந்தச் சொத்து நம்முடையதல்ல. அதை நீங்கள் திருப்பித்தராவிட்டால் நான் இனி மேல் சமையலரையில் நுழைய மாட்டேன். அந்த விபரம் தெரியாத குழந்தையினுடைய வாயிலிருந்து ஆகாரத்தைப் பிடுங்கி என் புருஷனும் குழந்தையும் சாப்பிடக் கூடாது. மைத்துனர் சாப்பாட்டைக் கூட நான் தயார் செய்ய மாட்டேன்' என்று சொல்லி விட்டு அவள் தன் அறைக்குப் போய் விட்டாள். சுனந்தையினுடைய சுபாவம் எனக்கு நன்ருகத் தெரியும். அவள் பொய் சொல்ல மாட்டாள். குழந்தைப் பருவம் முதல் அவள் தன் தகப்பனுரிடமிருந்து பல சாஸ்திரங்களைக் கற்றிருந்தாள் என்பதும் எனக்குத் தெரியும். ஆனுல் அவள் பெண்பிள்ளையாயிருந்தும் கல் போல இவ்வளவு கடினமாக இருப்பாள் என்பது எனக்குத் தெரியாது, நான் உடனே அவசரம் அவசரமாகச் சமைக்கப் போனேன். ஆண் பிள்ளைகளும் வீட்டுக்குத் திருமபி வந்தார்கள். என் வீட்டுக்காரர் சாப்பிட உட்கார்ந்த பொழுது சுனந்தை வாசற்படியருகில் வந்து நின்று கொண்டாள். நான் தூரத்திலிருந்தே கைகூப்பி 'சுனந்தா, கொஞ்சம் பொருத்துக் கொள். அவர் சாப்பிட்டாகட்டும்' என்றேன். அந்தத் தடவையும் அவள் கவனிக்கவில்லை. ஆபோசனம் வாங்கிக்கொண்டு அவர் சாப்பிட ஆரம்பித்ததும் 'வலைச்சியினுடைய சொத்தைப் பணம் கொடுத்தா வாங்கினீர்கள்? மாமனுர் ஒன்றும் வைத்துவிட்டுப் போகவில்லை என்று நீங்களே அடிக்கடிச் சொல்லி இருக்கிறீர்களே? இவ்வளவு பணம் ஏது? என்று கேட்டாள்.

தன்னிடம் ஒருக்காலும் பேசாதவள் அந்தக் கேள்வியைக் கேட்டதும் என் வீட்டுக்காரர் முதலில் திகைத்துப் போய்விட்டார். பிறகு ''அந்தப் பேச்சு இப்பொழுது எதற்காக அம்மா?'' என்ருர்.

''எதற்காக என்பது தங்களைத் தவிர வேறு யாருக்கும் தெரியாது. இன்று அந்தப்பெண் தன் குழந்தையைக் கூட்டிக்கொண்டு இங்கே வந்திருந்தாள். அவள் சொன்னதை எல்லாம் உங்களிடம் திருப்பிச் சொல்லுவது அநாவசியம். அதில் உங்களுக்குத் தெரியாததுமில்லை. அவள் சொத்தை நீங்கள் திருப்பிக் கொடுக்காவிட்டால் இந்த மகா பாபத்தில் சம்பந்தப்பட்ட அன்னத்தை சாப்பிட என் புருஷனையும் குழந்தையையும் நான் அனுமதிக்கவே மாட்டேன்'' என்ருள் சுனந்தை.

''என் மனத்தில் தான் அப்படித் தோன்றிற்ரு என்னமோ அல்லது கனவு தோன்றிற்ரு, சுனந்தை அப்போது பிசாசு பிடித்தவள் போல இருந்தாள். தேவதையைப் போல மரியாதை செய்து வந்த மைத்துனரிடம் அவள் அந்த மாதிரி பேசினுள். அவரும் கணநேரம் வஜ்ராயுதத்தால் அடிபட்டவர் போல அசைவற்று உட்கார்ந்திருந்தார். பிறகு வெகு கோபம் கொண்டு விஷயம் பாபமானுலும் புண்ணியமானுலும் என்னுடையது. உன் புருஷன் பிள்ளைகளுடையதல்ல. இங்கே சாப்பிட முடியாதென்ருல் நீங்கள் வேறு எங்கே வேண்டுமானுலும் போகலாம். ஆனுல் அம்மா, உன்னை நான் இது வரை எல்லா நற்குணங்களும் பொருந்தினவள் என்று எண்ணியிருந்தேன். இப்படியிருப்பாய் என்று நான் ஒருக்காலும் நினைக்கவில்லை என்று சொல்லி அவர் இடத்தை விட்டு எழுந்து போய் விட்டார். அன்று பூராவும் யாரும் சாப்பிடவேயில்லை. நான் அழுது கொண்டே மைத்துனன் காலில் விழுந்து 'அப்பா நான் உன்னைப் படிக்க வைத்து முன்னுக்குக் கொண்டு வந்தேனே. அதற்கு இதுதான பிரதிபலன்?' என்றேன்.

''மைத்துனர் கண்களில் நீர் ததும்ப 'மதனி, நீயே எனக்குத் தாயார். அண்ணுவும் என் தகப்பனுருக்குச் சமமானவர். ஆனுல் உங்களைக் காட்டிலும் மேலான தாகத் தர்மம் ஒன்றிருக்கிறது. சுனந்தை சொன்னதில் ஒருவார்த்தைகூடத் தவறில்லை என்பது

(16-ம் பக்கம் பார்க்க)

கவலைவேண்டாம்

உங்கள் வியாதி எதுவாயிருந்தாலும் சரி; உண்மையான நல்ல மருந்து வேண்டுமானுல், அடியில்கண்ட நமக்குத் தெரியப்படுத்தினுல் நிவர்த்திக்க தக்க வழிகளைத் தெரிவிப்போம்.

மலையப்பசாமி,
வைத்தியசாலை,
பழனி. S. I.

டோங்ரேயின்
பாலாமிருதம்
பிரசித்தி பெற்ற
குழந்தைகளின் டானிக்

விலை: அணு 4. — ஸ்டாம்பு அணு 5 அனுப்ப

நவீன முறையில்

இகபர பலனளிக்கும் விஷயங்களுடன்

அமிர்தவசனி

30-வது வருஷ வெளியீடு.

தினசரி உதவும்

தமிழ் வருட பஞ்சாங்கமும் அடங்கியது.

100-க்கு ரு. 20. — ரயில் செலவு வேறு.

பதிப்பகம்:—54, பந்தர் தெரு, மதருஸ். (மதுரை: 42, தெற்காவணி.) (கோவை: 234, ராஜா தெரு.)

திருவெண்காடு

★

தீர்த்த மஹிமை

★



திருவெண்காடு: ஆலயத்தின் தோற்றம்

அக்னி புஷ்கரிணி:—

இது முக்குளங்களிலும் முதன்மையானது. சுவேதவனப் பெருமானின் தென் கிழக்கில் விளங்குகிறது. இது மாபெரும் புண்ணியம் வாய்ந்த தீர்த்தமாகும். இதற்கு ஓர் இதிஹாஸமுண்டு. அதை இங்கு கூறுவோம்.

முன்னொரு ஸமயம் தேவர்களும் அசுரர்களும் சண்டையிட்டனர். அதிதியின் பிள்ளைகள் தேவர்கள். திதியின் பிள்ளைகள் அசுரர்கள். தேவர்கள் பயந்தனர். தங்களிடமிருக்கும் பொருள்களுக்கு சேதம் வரும் என அறிந்தார்கள். அக்கினி தேவன் கொஞ்சம் அகம்பாவமுடையவன். அவன் கவலைகொள்ளவில்லை. தேவர்கள் அவனிடம் சென்றார்கள். "யுத்தமும் நெருங்கிவிட்டது. இனி நாம் வெற்றியை அடையமுடியாது ஆகவே இப்பொருளை உன்னிடம் அடைக்கலம் வைக்கிறோம். நீ காப்பாற்ற வேண்டும். யுத்தம் முடிந்ததும் பெற்றுக் கொள்ளுகிறோம்" என்றனர். அதற்கு அக்கினிதேவனும் இசைந்தான். தேவர்கள் அழகிய பொருள் யாவையும் அக்னி தேவனிடம் ஒப்படைத்தனர். தேவர்களுக்கும் அசுரர்களுக்கும் கடும் போர் நிகழ்ந்தது. அசுரர்கள் தோல்வியுற்றனர். தேவர்கள் வெற்றி கொண்டார்கள். இதை அக்னிதேவன் அறிந்தான்.

அக்னி தேவனின் பேராசை

தேவர்கள் வந்துவிடுவார்கள். பொருளைக் கேட்பார்கள் எனப் பயந்தான். பொருளைக் கொடுக்க மனமில்லை. பிறகு அவர்களுக்குத் தெரியாமல் ஓடி ஒளிந்தான், தேவர்கள் அக்னியைப் பார்க்க எண்ணினார்கள். அக்னியைக் காணவில்லை. எங்கும் தேடினார்கள். தேவர்களின் மனம் கொந்தளித்தது. கடைசியில் தெய்வகதியாய் அகப்பட்டான். தேவர்களுக்குக் கோபம் மிகுந்தது. 'எங்கள் பொருளைக் கொடுத்துவிடு' என அதட்டினார்கள். அக்னி தேவன் ஒன்றும் சொல்லாது அழ ஆரம்பித்தான், தேவர்கள் எப்பாடு பட்டும் அவன் அசையவில்லை. அழுகையும் நின்றபாடில்லை. தேவர்கள் அக்னியைக் கண்டு நகைத்தார்கள். ஒன்றும் பலிக்கவில்லை. தேவர்கள் "ஸ்வர்ண ஸ்தேயம் என்னும் பாபத்தை நீ அடைவாயாக" என சபித்தார்கள். அக்னியை பஞ்ச மஹாபாதகங்களில் ஒன்றாகிய ஸ்வர்ண ஸ்தேயம் என்னும் மஹா பாபமானது பிடித்துக்கொண்டது.

அதைப் போக்கடிக்க அக்கினி தேவன் எவ்வளவோ பாடுபட்டான். ஆயினும் முடியவில்லை. மிகவும் வருந்தினான். பிறகு சிவனே கதி என நினைத்தான். பிறகு சிவனைக் குறித்து தவம் புரிந்தான்: தவத்தினால் சிவனும் அவன் முன் தோன்றினார். அக்னி தேவன் சிவனை வணங்கினான். தன்னிடம் உள்ள ஸ்வர்ணஸ்தேயம், மித்திரத்ரோகம் முதலிய பாபங்கள் என்னை விட்டகல வேண்டும் என வேண்டினன. சிவனும் அக்னி தேவனை அன்புடன் அழைத்து "நீ திருவெண்காடு செல்லவேண்டும். அங்கு என் ஆலயத்தின் தென் கிழக்கில் ஒரு குளமுண்டு. அது என் நெற்றிக் கண்ணினின்று உண்டானது. மிகவும் புனிதம் வாய்ந்தது. நீ அதில் ஸ்நாநம் செய்து என்னை பூஜிப்பாயாக. உன் பாபம் தொலையும்" எனக் கூறி மறைந்தார். அக்னி தேவனும் வெண்காடு சேர்ந்தான். மேன்மை தங்கிய அக்குளத்தில் முறைபடி மூழ்கினான். ஆங்கு சுவேதவனப் பெருமானையும் விதிப்படி பூஜித்தான். அவ்விடத்திலேயே தங்கி சிவனுக்குத் தொண்டு செய்தான். சிவன் சந்தோஷமடைந்தார். அக்னியின் முன் தோன்றினார். அக்னியும் சிவனை தரிசித்தான் ஆனந்தக் கடலில் மூழ்கினான்.

பாபம் நீங்குதல்

சிவபெருமான் அக்னியைக் கண்டு 'உனது தவத்திற்கு மெச்சினேன். வேண்டியவற்றைக் கேள் தருகிறேன் என்றார். நான செய்த சுவர்ணஸ்தேயம் எனும் பாபமும் மித்திரத்துரோகம் எனும் பாபமும் தொலைய வேண்டும் என பிரார்த்தித்தான். இதுகேட்டு சுவேதவனேசன் "நீ இக்குளத்தில் மூழ்கிய மாத்திரத்திலேலே அப்பாபம் உன்னை விட்டகன்றது. வேறு வரம் கேட்பாயாக" என்று உரைத்தார்.

அதுகேட்ட அக்னி 'தங்கள் திருவடிகளில் எப்பொழும் எனக்கு பக்தி இருக்கவேண்டும்' என வேண்டினன். சிவனும் அப்படியே ஆகட்டும் என அருள்புரிந்து "இது முதல் இப் புஷ்கரிணியும் உன் பெயரால் வழங்கப்படட்டும்" எனக்கூறி மறைந்தார். அதுமுதற்கொண்டு கொண்டு இக் குளம் அக்னி புஷ்கரிணி என வழங்கப்படுகிறது. இந்த புண்ணிய தீர்த்தத்தில் கார்த்திகை மாதத்திலும் விசேஷமாக அம்மாத கார்த்திகை நக்ஷத்திரத்திலும் ஸ்நாநம் செய்து சிவனைத் தரிசித்து இம்மையில் ஸகல போகங்களையும் அனுபவித்து மறுமையில் சிவலோக மடைகிறான்.

சூரிய புஷ்கரிணி

இக்குளம் சுவேதவனப் பெருமானின் தென் புறத்திலும் அகோரமூர்த்தியின் ஸந்நிதியிலும் அமைந்திருக்கிறது. இதில் மூழ்கி பல தேவர்களும் அசுரர்களும் முனிவர்களும் இறைவனின் அருளுக்குப் பாத்திரமானார்கள். அதில் சூரிய பகவானும் ஒருவராவர். அதன் விவரத்தை இங்கு உரைப்போம்.

வித்யுந்மாலி என்றொரு அசுரனிருந்தான். அவன் மிகப் பொறாமையுள்ளவன். தினந்தோறும் சூரியனைப் பார்ப்பான். "நாம் ஏன் இவன் போல் பிரகாசிக்கக் கூடாது" என்று நினைப்பான். அதையே அடிக்கடி நினைத்துப் பொறாமை கொள்வான். முடிவில் தவத்தினால் ஆகாதது ஒன்றுமில்லை எனக் கண்டு கொண்டான். உலகில் மாபெரும் புண்யஸ்தலம் திருவெண்காடு என அறிந்தான். திருவெண்காட்டை வந்தடைந்தான். சிவனைக் குறித்துத் தவம் செய்தான். அவனது தவத்திற்கு இறைவன் இரங்கினார், அவன் முன் விளங்கினார். அன்புடனழைத்தார். "உனது தவத்தினால் மகிழ்ச்சி அடைந்தேன் வேண்டியவற்றைக் கேள் தருகிறேன்" என்றார்.

சூரியன்போல் விளங்குதல்

அசுரனும் கண்விழித்தான். கடவுளைக் கண்டான். கண்கள் மலர்ந்தன. சரீரம் சிலிர்த்தது. கடவுளை மனமாறத் துதித்தான். அநேகம் தடவை நமஸ்கரித்தான். "நான் என்றும் சூரியன் போல் பிரகாசிக்க வேண்டும்: சூரியனுக்கு ஒளி மழுங்கவேண்டும்" எனப்பிரார்த்தித்தான். கடவுளும் அப்படியே ஆகுக என அருளிமறைந்தார். அசுரனும் சூரியனைப் போல் பிரகாசித்தான். வித்யுந்மாலி உதயாஸ்தமனம் என்ற நியமமில்லாமல் பிரகாசித்ததால் இரவு இல்லாமல் ஒழிந்தது. சந்திரனும் நக்ஷத்ரங்களும் வானின் பிரகாசிக்கவில்லை. இதைக்கண்டு சூரியனும் தேவர்களும் கலங்கினர். இதன் காரணமாக சூரியனுக்கும் அசுரனுக்கும் சண்டை உண்டாயிற்று. அதில் சூரியனுடைய கிரணங்களினால் ரதமிழந்தும் பொசுக்கப்பட்டும் வருத்தமுடன் கீழே விழுந்தான். மறுபடியும் வித்யுந்மாலி வெண்காட்டில் கடும் தவம் செய்தான். மறுபடியும் சிவன் தோன்றி மாசற்ற ஒளியையும் அழியாத ரதத்தையும் கொடுத்து மறைந்தார். வித்யுந்மாலியும் முன்போல் பிரகாசித்தான். சிவபெருமான் தன் அடியார்களுக்கிழைக்கப்பட்ட குற்றத்தைப் பொறுக்கவில்லை. சிவனது கோபத்திற்கு ஆளாகி ஒளி மழுங்கி தேரிழந்து பழைய புண்ணிய வசத்தால் சூரியனும் வெண்காட்டில் விழுந்தான், சிவனைக் குறித்து பெரும் தவம் புரிந்தான். எவ்வளவு கடும் தவம் புரிந்தும் சிவன் அருள் புரியவில்லை.

வித்யுந்மாலியின் வேண்டுகோள்

இதைக் கண்டு இந்திரன் முதலிய தேவர்கள் வித்யுந்மாலியிடம் சென்றனர். அவனும் அவர்களை வரவேற்றான். நீங்கள் என்னைக் காண வந்த காரணம் யாது நான் என்ன செய்யவேண்டும் என வினவினான், அது கேட்ட தேவர்கள் "நம்மினத்தைச் சேர்ந்த சூரியன் வெண்காட்டில் கடும் தவம் புரிந்தும் சிவனிறங்கவில்லை. அவனுக்காக நாமும் வேண்டுவோம். நீயும் வருவாயாக" எனக் கூறி அசுரனுடன் வெண்காடு வந்தடைந்தார்கள். பிறகு வித்யுந்மாலி சிவனைப் பிரார்த்தித்தான். அவரும் அவன் முன் தோன்றி வேண்டுவதைக் கேள் என்றார். அசுரனும் சூரியனுக்கருள்புரிய வேண்டும் என வேண்டினான். "எனக்கிழைத்த தீங்கைப் பொறுப்பேன், எனது பக்தர்களுக்கு செய்த தீங்கை சற்றேனும் பொறுக்கமாட்டேன். ஆனாலும் உனது வேண்டுகோளுக்கிணங்கி சூரியனுக்கு அருளுகிறேன். அவன் முன்போல பிரகாசிக்கட்டும்" என்று கூறி மறைந்தார். வித்யுந்மாலியும் தேவர்களும் தம்மிருப்பிடம் சென்றனர். சூரியன் முன்போல் தனக்குரிய தேரில் ஏறிப் பிரகாசிக்கலானான்.

சூரியன் இக்குளத்தில் மூழ்கி சிவனைப் பூஜித்து அவனது அருள் பெற்றதால் அன்று முதல் இக்குளம் சூரியனுடைய பெயரால் வழங்கலாயிற்று. இதில் ஞாயிற்றுக்கிழமையிலும் கார்த்திகை மாசி மாதங்களிலும் ஸ்நாநம் செய்வது மிகவும் விசேஷமானது.

ரானடே சதாப்தி

★

ஜஸ்டிஸ் ரானடேயின் ஜன்ம தின சதாப்தி விழா பம்பாயில் மஹா கனம் ஸ்ரீநிவாஸ சாஸ்திரியார் தலைமையில் சென்ற மாதம் 18-ம் தேதி கொண்டாடப் பட்டது.

(பி. பி. ஏ.)

★



"வந்தேமாதரம்"

★

வார்தாவில் சென்ற மாதம் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டிக் கூட்டம் ஆரம்பிப்பதற்கு முன்பு "வந்தே மாதரம்" கீதம் பாடப் பட்டது. அப்போது தலைவர்கள் நின்று கொண்டு பிரார்த்தனை நடத்தினர்.

(ஜி. எஸ். ஏ.)

★

மஹாத்மாவும் மௌலானாவும்

★

சென்ற மாதம் வார்தாவில் அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி கூடியது. மஹாத்மா காந்தி, மௌலானா அபுல்கலாம் ஆஸாத், ஆச்சார்ய க்ருபாலினி, ஸ்ரீமதி சரோஜினி தேவி முதலியோர் சம்பாஷிக்கின்றனர்.

(ஜி. எஸ். ஏ.)

★

ஆலயத்துள் இருக்கும் மண்டபம் முதலியவற்றின் காட்சி

சந்திர புஷ்கரிணி

இது பிரும்ம வித்தியாம்பிகையின் ஸந்நிதியிலுள்ளது. இதன் கரையில் தான் பெரிய வட விருக்ஷ மிருக்கிறது. இதுவே இவ்வாலயத்தின் ஸ்தல விருக்ஷமாகும். இதனடியில் ருத்திரபாத மிருக்கிறது. தீர்த்த யாத்திரை செய்கிறவர்கள் இந்த ருத்திர பாதத்தில் பித்ருக்களை உத்தேசித்து சிரார்த்தம் செய்து பிண்டம் போடுவது பழக்கம். இதில் சந்திரனும், புதனும் மூழ்கி தங்கள் பாபங்களினின்றும் விடுபட்டு நவக்ரஹங்களில் ஒன்ருயிருக்கும் தன்மையை அடைந்தனர். அவ்விதிஹாஸத்தை இங்கு உரைப்போம்.

அத்திரி என்ருெரு முனிவரிருந்தார், அவருக்கு இரு புதல்வர்கள். மூத்தவர் தான் தூர்வாஸ மஹரிஷி, இளையவன் சந்திரன். இதில் தூர்வாஸர் பிறவிலேயே இல்லப் பற்றில்லாதவராய் ஆத்மஸ்வரூபத்திலேயே ஆழ்ந்து மகிழ்ந்தார். அத்திரி முனிவர் தன் இளைய குமாரனுகிய சந்திரனை வித்யாப்யாஸத்தின் பொருட்டு தேவ குருவிடம் அழைத்துச் சென்ருர். அத்திரியும் சந்திரனும் குருவை வணங்கினுர்கள். குருவும் இவர்களை உபசரித்து "தாங்கள் இவ்விடம் வரக் காரணம் யாது" என்று வினவ, அத்திரி மஹரிஷி "இவன் எனது இளைய குமாரன். இவனுக்கு தாங்கள் கல்வி கற்பிக்க வேண்டும்" என்று பிரார்த்தித்தார். குருவும் அதை அங்கீகரித்து சந்திரனை சிஷ்யனுக ஏற்றுக் கொண்டார். அத்திரி புதல்வனை விட்டு விட்டு தன்னில்லம் சேர்ந்தார். அநேகம் வருஷங்கள் சென்றன.

தாரையின் மோஹம்

குரு சில காரியத்தை முன்னிட்டு வேறிடம் சென்றிருந்தார். சந்திரன் குருவின் வீட்டிலேயே வசித்தான். குருவுக்கு தாரை என்ருெரு பத்நினியுண்டு. அவள் மிக்க அழகுடையவள். சிற்றின்பத்திலீடுபட்டவள். அழகில் சந்திரனைப்பற்றிக் கூறவேண்டியதில்லை. சந்திரனைக் கண்டு மோஹம் கொண்டாள். இவனை நாம் பதியாக அடையவில்லையே என வருந்தினுள். காமப்பேய் அவள் மனதைக் கொள்ளை கொண்டது. அதனுல் தன் பகுத்தறிவை இழந்தாள். சந்திரனிடம் தன் விருப்பத்தைத் தெரிவித்தாள். சந்திரன் இணங்கவில்லை: பல வந்தப்படுத்தினுள். சந்திரனும் ஒருவாறு இணங்கினுன். உடனிருவர்களுக்கும் ஓர் புத்திரன் பிறந்தான்: அவன்தான் புதன்.

குருவும் வந்து விட்டார். விஷயங்களைத் தெரிந்துகொண்டார், புதனிடம் குருவுக்கு ஆசை பிறந்தது, சந்திரன் ஊருக்குப் புறப்பட்டான். புதனையும் அழைத்தான், குரு புதனை அனுப்ப மறுத்தார், பிள்ளைக்காக சந்திரனுக்கும் குருவுக்கும் கலகமுண்டாயிற்று, அது கடும் போரில் கொண்டுவந்துவிட்டது, குருவின் பக்கம் தேவர்கள் கலந்துகொண்டார்கள், சந்திரனிடம் அசுரர்கள் சேர்ந்தார்கள். ஒருவரை ஒருவர் ஜயிக்க முடியவில்லை, இது கண்டு புதன் வருந்தினுன், தாயை அழைத்தான் "நான் யாருடைய புதல்வன்? உண்மையை உரைப்பாயாக. இல்லையேல் சபித்து விடுவேன்" என்ருன்,

அது கேட்ட தாரையும் "நான் உன்னைச் சந்திரனுக்கே பெற்றேன்" என்ருள். யுத்தம் முடிவடைந்தது. ஆகவே புதனுக்கு புதன் என பெயர் வழங்கலாயிற்று. குரு சந்திரனை சபித்தார். சந்திரன் தன் பிள்ளையுடன் வீடடைந்தான். அத்திரியிடம் யாவற்றையும் தெரிவித்தான். முனிவருக்கடங்காத கோபம் மூண்டது, ஆயினும் பிள்ளையாதலால் ஒன்றும் செய்யத் துணியவில்லை, "நீ சுவேதாரண்யம் சென்று பிரும்ம வித்தையின் எதிரிலுள்ள தீர்த்தத்தில் புதனுடன் ஸ்நானம் செய்துபரமசிவனை ஆராதிக்கவேண்டும்" என ஆக்ஞாபித்தார். சந்திரனும் தகப்பன் உத்திரவை சிரமேற்கொண்டு வெண்காடு சேர்ந்தான்.

நவக்ரஹ மாகுதல்

இருவரும் புஷ்கரிணியில் மூழ்கினர், ஒரு மாதம் அவ்விடத்திலேயே தங்கி சிவனை ஆராதித்தனர். சிவனும் அம்பிகையுடன் சந்திரன் முன் தோன்றினர், "உன் தவத்திற்கு வசமானேன்,வேண்டியவற்றைக்கேள்" என உரைத்தார், இதைக் கேட்டு சந்திரன் சந்தோஷம் கொண்டு "என் பாபம் என்னை விட்டகல வேண்டும்" என வேண்டினுன். கடவுளும் "குருதார கமனம் என்ற தோஷத்திலிருந்து விடுபட்டாய். நீ நவக்கிரகங்களில் ஒருவனுய் இருப்பாயாக. அவ்விதமே புதனும் நவக்ரஹங்களில் ஒருவனுக இருக்கட்டும்"என்று அருளினுர். இது முதல் இத்தீர்த்தம் உன் பெயரால் விளங்கும், புதனையும் அழைத்தார் "உன்னிடமுள்ள "குண்டன் என்ற தோஷம் உன்னை விட்டு நீங்கிற்று. நீ கிரஹங்களில் ஒன்ருய் இருப்பதுமன்னியிலும் எங்களைத் தரிசித்தவர்களுக்கு அந்தப் பலனை நீ அளிப்பாயாக, ஆகவே எங்களைத்தரிசித்த எல்லோரும் உன்னையும் தரிசிக்க வேண்டும்" எனக் கூறி மறைந்தார். அதனுல் இப்பொழுதும் எல்லா தேவர்களையும் தரிசித்து புதனையும் தரிசிப்பது வழக்கம். இக்குளத்தில் ஒவ்வொரு பௌர்ணமியிலும் திங்கள்கிழமையிலும் ஸ்நானம் செய்வது மிகவும் உத்தமம். இக்குளங்களுக்கு காயத்திரி, ஸாவித்திரி, ஸரஸ்வதி, இது போல் அநேகம் பெயர்களுண்டு,

மணிகர்ணிகை

இது திருவெண்காட்டுக் கோயிலுக்கு வடக்கில் முக்கால் மையில் தூரத்தில் ஓடுகிறது. இது காவேரி நதியிலிருந்து பிரிந்து வருகிறது. இது மிகப் புனிதம் வாய்ந்தது. இப்புண்ணிய நதியின் வட பார்ஸ்வத்தில் யோகீஸ்வரம் என்ருெரு புண்ணியஸ்தலமுண்டு, அதில் யோகநாதர் விளங்குகிருர். அந்த யோகநாதரின் ஸந்நிதியில் விளங்கும் இப்பொன்னி நதியின் ஒரு கட்டத்திற்குத்தான் மணிகர்ணிகை எனப்பெயர். முன்ஞெரு ஸமயம் லோகமாதாவாகிய அம்பிகை மதங்க முனிவரது தவத்திற்கிசைந்து அவருக்குப் புதல்வியாக அவதரித்தாள். அவ்விதம் அவதரித்த மாதங்கியை அடைய விரும்பி சுவேதவனேசன் யோகீஸ்வரத்தில் தக்ஷிணுமூர்த்தி அவஸரத்துடன் தவம் புரிந்து மாதங்கியைத் திருமணம் செய்து கொண்டார், அப்படி சுவேதவனப் பெருமான் தவம் புரியுங்கால் தான் ஸ்நானம் செய்வதற்காக பொன்னி நதியை (காவேரி) தன் ஸமீபம் அழைத்தார்: காவிரியும் ஈசன் ஆணையை முன்னிட்டு அவரது ஸமீபம் ப்ரவஹித்தாள்: ஆகவே காவிரி நதியானது ஸ்ரீரங்கத்தையும் ஜம்புகேஸ்வரத்தையும் சூழ்ந்து இருபுரத்திலும் செல்லுவது போல் இவ்வெண்காட்டில் சிவ பெருமானைச் சுற்றிப் ப்ரவஹிக்கிருள், காசியில் விசுவேசுவரனது ஆணையினுல் எப்படி கங்கை ஓடுகிறதோ, அவ்விதமே இங்கு யோகீஸ்வரனது. ஆக்ஞையினுல் காவிரி நதி ஓடுகிருள்; காசியில் மணிகர்ணிகைக் கட்டத்திற்கு உள்ள பலனைக் காட்டிலும் இங்குள்ள மணி கர்ணிகைக்கு பலன் அதிகமென்று ஸர்வேஸ்வரனே சொல்லியிருக்கின்ருர். யாத்ரீகர்கள் இம் மணிகர்ணிகையில் முறைப்படி ஸ்நானம் செய்து பின்பு முக்குளங்களிலும் ஸ்நானம் செய்து முறையாகும். இவைகளைத் தவிர இத்தலத்தில் அநேகம் தீர்த்தங்களிருக்கின்றன. அவைகளும் மிகச் சிறந்த புண்ணிய தீர்த்தங்களாகும்.

காவேரியின் மஹத்துவம்

கோயிலுக்குத் தெற்கில் ஒன்றரை மையிலுக்கப்பால் காவேரி ஓடுகிறது. சாயாவனம்,பல்லவனம் முதலிய தலங்களைக் கடந்து ஸமுத்திரத்தில் ஸங்கமமாகின்றது இதன் தென் கரையில் அகஸ்தியமுனியின் ஆசிரமம் விளங்குகிறது இவ்விடத்தில்தான் அகஸ்திய முனிவர் வசு மஹாராஜனுக்கு திருவெண்காடு மஹிமையை கூறினுர். இவ்விடத்தில் ஸ்நானம் செய்வது சிலாக்யம்.



கோவிலுக்குள் இருக்கும் பிராகாரமும் இதர சந்நிதிகளும்

ருஷ்யா மீது ஜெர்மனி யுத்தம் தொடர்ந்த காரணமாக அது அநேகம் டாங்கிகளை இழக்க நேரிட்டிருக்கிறது. ஸ்மாலன்ஸ்க் படையெடுப்பின்போது அவர்களுக்கு ஏற்பட்ட சேதம் மஹத்தானது. இந்த சித்திரத்தில் நாசம் நடக்கும் விதத்தைப் பார்க்கலாம்.

ஸ்ரீகாந்தன்

(13-ம் பக்கத் தொடர்ச்சி)

என் அபிப்பிராயம். என் மாமனுர் சந்நியாசம் வாங்கிக் கொண்ட தினம் அவளை ஆசீர்வதித்து 'அம்மா, நீ உண்மையில் தர்மத்தைக் கடை பிடிக்க விரும்பினுல் அவன் உன்னைச் சரியான பாதையில் கொண்டுபோவான். அவனை எனக்குச் சிறு வயது முதல் தெரியும், அவன் ஒருக்காலும் பிசகு செய்ய மாட்டான்' என்ருர்.

"அட சனியனே, அவனையும் கூடவா அந்தப் பாழாய் போனவள் அப்படி ரகசியமாக வசியம் பண்ணி வைத்திருந்தாள்! அன்று தான் எனக்குத் தெரிந்தது. அன்று மார்கழி மாதம் முடிவு. ஆகாயம் மேகம் மூடியிருந்தது. விட்டுவிட்டுத் தூரிக்கொண்டிருந்தது. ஆனுல் அவர் அன்றிரவுகூட எங்கள் வீட்டில் தங்கவில்லை. குழந்தையைக் கூட்டிக் கொண்டு வெளியே போய் விட்டார். எங்கள் மாமனுர் காலத்தில் ஒன்றுபட்ட குடும்பம் இரண்டாகி போய் விட்டது! அவர் காலத்திய வீடு ஒன்று பாழாய்ப் போய் கிடந்தது, பாம்புத் தேள் நிறைந்த அந்த வீட்டில் போய் அவர்கள் தங்கினுர்கள். நான் வீட்டில் கீழே விழுந்து புரண்டழுது 'அடி பாபி! இதற்காகவா நீ இந்தக் குடும்பத்தில் வந்து நுழைந்தாய்? பினுவைக் கூடக் கூட்டிக் கொண்டு போய் விட்டாயே? மாமனுர் குடும்பத்திற்குப் பெயர் வாங்கிக் கொடுக்கவேண்டும் என்று பிரதிக்ஞை செய்து கொண்டு விட்டாயா?" என்றேன். அவள் ஒரு பதிலும் சொல்லவில்லை "சாப்பாட்டிற்கு என்ன செய்வாய்?" என்றேன். 'மாமனுர் வைத்துவிட்டுப் போனதில் பாதி எங்களுடையது' என்ருள்.

அதைக் கேட்டதும் நான் மண்டையை உடைத்துக் கொண்டு செத்துப்போகலாம் போலஇருந்தது. "அடியே,அதை வைத்துக் கொண்டு ஒரு நாளைக் கூடக் கழிக்க முடியாதே. நீங்கள் எப்படியாவது போங்கள், பினு என்ன ஆகிறது?"என்றேன் 'வலைச்சிக் குழந்தையைப்பற்றி ஒரு நிமிஷம் எண்ணிப் பாருங்கள். அந்தக் குழந்தையைப் போல பினுவும் ஒரு வேளைச் சாப்பாட்டால் போதும்— பிழைத்துப்போவான்' என்ருள்.

அவர்கள் போய்விட்டார்கள். வீடுபூராவும்கதறிற்று.அன்றிரவு விளக்கேற்றவில்லை. என் வீட்டிற்காரர், இரவு வெகுநேரம் கழித்து வீட்டிற்கு வந்து திண்ணையிலேயே படுத்துக் கிடந்தார். ஒரு வேளை குழந்தை பினு தூங்க வில்லையோ, அல்லது பசியால் துடித்துக்கொண்டிருக்கிருனே என்று கதறினேன். விடிந்ததும் விடியாததுமாக ராகால் மூலமாக பசு மாட்டையும் கன்றையும் ஓட்டிவிட்டேன். ஆனுல் அந்த ராக்ஷஸி அதைத் திருப்பி அனுப்பி விட்டு பினு பால் குடிக்க வேண்டாமென்றும், பால் குடிக்காமலேயே வளரும்படி தயார் செய்யப் போவதாயும் சொல்லி அனுப்பினுள்." என்ருள்.

ராஜலக்ஷ்மி ஒரு நீண்ட பெருமூச்சு தான் விட்டாள். அந்த அம்மாளுடைய வேதனையும் அவமானமும் அன்று கரை மீறிப் போய் விட்டது. என் கையில் ஒட்டிக்கொண்டிருந்த பருப்பும் சாதமும் உலர்ந்து போய விட்டது; வீட்டுக்காரரின் ஆசனப் பலகையின் சப்தம் கேட்டது. அவருடைய மத்தியானச் சாப்பாட்டு வேலை முடிவாயிற்று. அவருடைய மௌன விரதம் கலையாமல் அவருடைய சாத்வீக போஜனம் நடைபெற்றது என்று நான் நம்புகிறேன். ஆனுல் அந்த அம்மாள் சொன்ன தகவலையோ அல்லது அதன் பொருளையோ அறிய அன்று நான் அங்கு போகவில்லை. அந்த அம்மாள் கண்களைத் துடைத்துக் கொண்டு, மூக்கைச் சிந்தி விட்டுத் தொண்டையைச் சரி செய்து கொண்டு, "அதற்குப் பிறகு ஒவ்வொரு கிராமத்திலும் எவ்வளவு கெட்டபெயர், எவ்வளவு கேலிக்கூத்து—என்னத்தைச் சொல்லுவேனப்பா. 'இரண்டு நாள் போகட்டும். சிரமம் தாங்காமல் தாங்களே திரும்பி வருவார்' என்ருர். எங்கள் வீட்டுக்காரர். 'அவளை உங்களுக்குத் தெரியாது, என்ன ஆனுலும் திரும்பிவர மாட்டாள் என்றேன், அப்படியே தான் ஆயிற்று ஒன்றின் பின் ஒன்ருக எட்டு மாதங்கள் கழிந்துவிட்டன. ஆனுல் அவர்களை மட்டும் காணவில்லை; என் வீட்டுக்காரர் ஏங்கி ஏங்கி ரகசியமாக அழுது அழுது துரும்பாகப்போய்விட்டார். குழந்தை பேரில் அவருக்கு உயிர்! அதற்கும் மேலாக தம்பிபேரிலும்! அதற்குமேல் தாங்க முடியாமல் அந்த வலைஞர்களுக்குக் காலட்சேபம் சௌகரியமாக நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்து விடுவதாகச் சொல்லி அனுப்பினுர். அதற்கும் அந்த நாசகாரி அவர்களுக்கு நியாயமாகக் கிடைக்க வேண்டியதைக் கொடுத்துவிட்டால் தான் திரும்பிவரமுடியும் என்று சொல்லிஅனுப்பினுள்."என்ருள்

நான் டம்ளா ஜலத்தைக் கொண்டு கையை அலம்பிய வண்ணம், "இப்பொழுது அவர்களுக்கு எப்படிக் காலட்சேபம் நடக்கிறது?" என்றுகேட்டேன்.

குசாரியின் மனைவி கவலையடைந்தவளாய், "இந்தக் கேள்விக்குப் பதில் சொல்லும்படி என்னை வற்புறுத்தாதே அப்பா, யாராவது கேட்க வந்தால்கூட நான் காதைப் பொத்திக் கொண்டு ஓடிவிடுகிறேன். எனக்குப் பிராணனே போய்விடும் போல இருக்கிறது. இந்த எட்டு மாதகாலமாக இந்த வீட்டில் மத்ஸ்யமில்லை, பால் கரக்கிறதில்லை. வீட்டிற்கே ஏதோ ஒரு சாபம் ஏற்பட்டது போல இருக்கிறது" என்று சொல்லி அவள் மௌனமானுள்.

அந்த மாதிரியாக நாங்கள் மூவரும் ஸ்தம்பித்துப் போய் மௌனமாக உட்கார்ந்திருந்தோம்.

அரை மணி நேரத்திற்குப் பிறகு நாங்கள் வண்டியில் ஏறி உட்கார்ந்தோம். குசாரியின் மனைவி கண்ணீர் அடைத்தக் குரலுடன் ராஜலக்ஷ்மியிடம் காதோடு காதாக, "அம்மா, அவர்கள் உங்கள் குடிகள்தான். எங்கள் மாமனுருடைய ஜமீன் நிலத்தில்தான் இருக்கிருர்கள் அது கங்கா மாட்டியில்தான் இருக்கிறது" என்ருள்.

ராஜலக்ஷ்மி தலையை அசைத்து "நல்லது" என்ருள்.

வண்டியை விடுவதற்கு முன்பாக அவள் மறுபடியும் "அம்மா, உங்கள் வீட்டிலிருந்தே கண்ணுக்குத் தெரியும். ஆற்றங்கரைப் பக்கமாக இருக்கும் இடிந்தவீடுதான் அது"என்ருள்.

ராஜலக்ஷ்மி முன் போலவே தலையை அசைத்து "நல்லது" என்ருள்.

வண்டி மெதுவாகப் புறப்பட்டது. வெகு நேரம் நான் ஒரு வார்த்தை கூடச் சொல்லவில்லை. ராஜலக்ஷ்மி எதையோ யோசித்துக்கொண்டிருந்தாள் என்று கண்டு கொண்டேன். அவளுடைய யோசனையைக் கலைத்து நான் "லக்ஷ்மி ஆசையற்றவர்களுக்கும், விருப்பமற்றவர்களுக்கும் சகாயம் செய்யப்போவது போன்ற ஏமாற்றம் உலகத்தில் எதுவுமே இல்லை" என்றேன்.

ராஜலக்ஷ்மி என் முகத்தைப் பார்த்துச் சிறிது சிரித்துவிட்டு "அது எனக்குத்தெரியும். உன்னிடமிருந்து எனக்கு வேறு ஒரு படிப்பினையும் ஏற்படாவிட்டாலும் இது மட்டும் ஏற்பட்டிருக்கிறது" என்ருள்.

(தொடரும்.)

உங்களுக்கு
மலச்சிக்கலோ அல்லது
ரத்தக்கொதிப்போ அல்லது
மண்டை கனமோ அல்லது
தலைவலியோ அல்லது
மயக்கமோ அல்லது
வாய்துர்நாற்றமோஅல்லது
சருமப்படுவனே இருந்தாலும்
உடனே பரீக்ஷியுங்கள்
காஸ்டபீன்

ருசி மிகுந்த சாக்லட் மலவிரோசனி. மலச்சிக்கலை ஒழிக்க பத்திரமும் நிச்சயமுமான வழி.

குழந்தைகள், நடுவயதினருக்கும், ஆரோக்யம், பலத்தை அளித்திருக்கின்றது.

எல்லா மருந்து வியாபாரிகளிடமும் 2 சாக்லட் உள்ள பாகெட் ஒரு அணு. ஒவ்வொன்றும் 25, 50, 100 கொண்ட பாட்டில்களிலும் கிடைக்கும்.

CASTOPHENE
CASTOR OIL CHOCOLATES
ஏஜண்டுகள் :—
மெஸர்ஸ்:
சிவராம் & ஸ்வாமி லிமிடேட்.
154, நைனியப்ப நாயக்கன் தெரு,
பி. டீ., மதராஸ்.

அறிக்கை
Dr, பிள்ளா பாபய்ய பாத்ருடு & பிரதரின்
ஓர் புதிய பிராஞ்சு
கும்பகோணம்
நெ. 7 சாரங்கபாணி கோவில் கீழ வீதியில்
ஸ்தாபிக்கப்பட்டிக்கிறது
வைத்ய நிபுணர் குழந்தைகளை பரீக்ஷிப்பார்

பாத்ருடுவின்
"பால சஞ்சீவினி"
குழந்தைகளின் ஈரல் குலைக்கட்டியை குணப்படுத்தும்
11, தெற்கு மாடவீதி,
மயிலாப்பூர், மதராஸ்.
போன்: 86257.
திருச்சி பிராஞ்சு:
81, ஆண்டார் தெரு,
தெப்பகுளம்.

ஜப்பானியர் போர் முறை

★

சீனர்களது அனுபவம்

★

தி. நா. சுப்ரமணியம் எழுதியது

★

சென்ற பதினாறு பதினேழாம் நூற்றாண்டுகளில் சீனுவுக்குள் ஜப்பான் புகுந்து கொள்ளையிட்டது சம்பந்தமாகவும், அவர்கள் அனுஷ்டித்த யுத்த முறை பற்றியும் சீன சரித்திரத்தில் பல ரஸமான குறிப்புகள் காணப்படுகின்றன. அவர்கள் கையாண்ட ஏற்பாடுகள் யாவும் விநோதமானவை. ஆகவே அவற்றை வாசகர் அறிவது உசிதமாகும்.

★

உலகத்திலே வியாபாரம் ஆரம்பித்த நாள் முதலே கொள்ளையும் உண்டாகிவிட்டது. ஒரே நாட்டிலே கிடைக்காதனவும் அந் நாட்டு மக்கள் விரும்பிப்பெறக்கூடியதுமான பொருள்களை ஒருவன் அங்கே கொண்டுபோய் விற்று ஏராளமான லாபம் சம்பாதிப்பதைப் பிறர் கண்டு பொறுக்க மாட்டார்கள். அவனுக்குக் கிடைக்காமல் அந்த லாபம் தன்னையே சேரவேண்டும்; அதைப் பெற முயற்சி செய்வர். அது முடியாமற்போனால் அது அவனுக்கும் கிடைக்காமற்போகட்டும் என்று தடுப்பர். அவ்விதம் தடுக்கும் வழிகளுள் மிகவும் சுலபமானது கொள்ளையடிப்பது.

இது தொழில் முறை. வாணிபத்தை மேற்கொண்ட மக்கள் பலரும் பல சமயங்களில் இதனைக் கையாண்டிருக்கிறார்கள். இதைப் பற்றிய குறிப்புகள் அங்கங்கே சரித்திரங்களில் சிதறிக்கிடக்கின்றன.

சரித்திரம் கூறுவது

ஐரோப்பியர்கள் தங்கள் மரக்கலங்களைச் சமுத்திரத்தில் மிதக்கவிட்டுத் தூரதேசங்களுக்குச் சென்று வியாபாரம்செய்ய ஆரம்பித்த பதினாறு பதினேழாம் நூற்றாண்டுகளிலே இத்தகைய் கொள்ளைகளைப் பற்றி அதிகமாகக் குறிப்புகள் உள்ளன. ஐரோப்பியர்கள் முதன் முதலாக இங்கேவந்த சமயத்தில் நம்நாட்டு வாணிபத்தின் பெரும் பகுதியை மேல் புறத்தில் அராபியரும் கீழ்புறத்தில் சீனரும் நடத்திவந்தார்கள். ஜப்பானியர்கள் அதிகமாக வெளிநாடுகளுக்கு வரவில்லை. அவர்கள் பெரும்பாலும் சீனர்களிடமே வாங்கியும் விற்றும் வந்தார்கள். ஒரொரு சமயங்களில் 'ஸுவர்ண தீபம்' என்று வழங்கும் ஸுமத்ரா, ஜாவா, போர்னியா முதலிய தீவுகள் வரை எட்டிப் பார்த்திருக்கிறார்கள்.

பதினாறும் நூற்றாண்டின் மத்தியில் ஜப்பானியர் சீனதேசத்துள் புகுந்து போர் புரிந்து கொள்ளையிட்ட விவரங்களைப் பற்றிய குறிப்புகள் சீன சரித்திரத்தில் அதிகமாக உள்ளன, அவர்கள் கையாண்ட முறைகளையும் அங்கே விவரித்திருக்கிறார்கள்.

ஜப்பானியர் போர்முறை

ஜப்பானியர் போருக்குக் கிளம்புமுன் தங்கள் படைகளை 'வண்ணாத்திப் பூச்சி' போன்ற உருவத்தில் வியூகமாக அமைத்துக்கொள்வார்கள். அவர்கள் தயாரானவுடன் ஒருவன் உத்தரவு கொடுப்பான். வியூகத்தின் முன்னால் விசிறிகொண்டு வீசுவது தான் அதற்கு அடையாளம். உடனே எல்லோரும் கத்தியை உருவிக்கொண்டு கிளம்பி விடுவார்கள். அவர்கள் கத்தி முனையை ஆகாயத்திலே சுழற்றும்போது சீனர்கள் ஆச்சரியம் அடைந்து தலையை உயர்த்தி வேடிக்கைப் பார்ப்பார்கள், அவ்வளவுதான், ஜப்பானியர் கீழ்ப்புறமாக அவற்றைப் பாய்ச்சி இச் சீனர்களைத் துண்டுசெய்து விடுவார்கள்.

பாம்புபோல நீளமாக வியூகம் அமைத்துக்கொள்ளும் வழக்கமும் ஜப்பானியருக்கு உண்டு. அப்பொழுது தலையிலும் வாலிலும் அஞ்சாநெஞ்சம் படைத்தத் திடசாலிகளான வீரர்களே இருப்பர் மத்தியில் சமர்த்தர்: கசடர், பயந்தாங்கொள்ளிகள் ஆகிய எல்லோரும் கலந்து நிற்பார்: இவ்விதமான வியூகம் புறப்படும்போது முன்னால் நூறு வால்கள் கொண்ட கொடி ஒன்றை ஏந்திச் செல்வார்கள்,

அவர்கள் எப்பொழுதும் விடியற்காலையில் கோழி கூவும் பொழுது எழுந்து விடுவார்கள், பிறகு எல்லோரும் ஒன்றாகவே தரையில் உட்கார்ந்துகொண்டு தங்கள் ஆகாரத்தை உட்கொள்வார்கள், அது முடிந்த பிறகு அவர்களுடைய தலைவன் தன் ஆசனத்தில் உயரமாக உட்கார்ந்து மற்றவர்களுக்கு உத்தரவு இடுவான். ஒவ்வொருவனும் அவனுடைய ஆணைப்புத்தகத்தை எடுத்துவரவேண்டும், அதில் அன்றைய தினம் அவன் என்ன வேலை செய்ய வேண்டும், அவன் கூட்டாளிகள் யார் யார், அவனுக்குத் தலைவனாக வருபவன் பெயர் முதலிய விபரங்கள் எழுதப்படும்.

கொள்ளையில் பாகம்

எந்த கோஷ்டியும் முப்பது பேர்களுக்கு மேற்பட்டதாக இராது. அவர்கள் தனித் தனியே தான் போவார்கள். ஆனால் ஒருவரை விட்டுப்பிரிந்து மற்றவர் அதிக தூரம் போய் விடமாட்டார். ஒரு கோஷ்டிக்கு ஏதாவது விபத்து நேரிட்டு விட்டால், அவர்கள் சங்கு ஊதுவார்கள். அதை கேட்டவுடன் பக்கத்தில் இருக்கும் மற்றவர்கள் உதவிக்கு விரைந்தோடி வருவார்கள்.

இவ்விதம் கோஷ்டியாகச் செல்லாமல் இரண்டு மூன்று பேர்கள் சேர்ந்து தனித்தனியாகப் போவதும் உண்டு ஆயினும் மாலைப் பொழுதில் எல்லோரும் முன்போலப் புறப்பட்ட இடத்திற்கே திரும்பி வந்து விட வேண்டும்.

ஒவ்வொருவனும் தான் கொள்ளையடித்த பொருளைத் தனக்கெனச்சிறிதும் நிறுத்திக் கொள்ளாமல் அப்படியே தன்



ஜப்பானிய வெடி குண்டு விமானமொன்றிலிருந்து யந்திரத் துப்பாக்கி பிரயோகிக்கப்படும் காட்சி. (இ. என். பி.)

அமெரிக்க பாதுகாப்பு ஏற்பாடு



நியூ யார்க்கில் ப்ரூக்லின் எனுமிடத்தில் எதிரிகளது விமானங்கள் வெகு தூரத்தில் வரும்போதே கண்டு பிடிப்பதற்கான கருவி அமைக்கப்பட்டிருக்கிறது. இந்தக் கருவி சப்தம் வருமிடத்தைக் கண்டு பிடித்து அந்த திக்கில் வெளிச்சத்தைக் காட்டுகிறது. இதனால் எதிரிகளது விமானத்தைச் சுட்டு வீழ்த்துவது சாத்தியமாகிறது. (இ. என். பி.)

தலைவனிடம் கொடுத்து விட வேண்டும். தலைவனும் அதனை அப்படியே எடுத்துக் கொண்டு விட மாட்டான். அவன் அவனுக்குத் தக்கப்படி பாகம் செய்து கொடுப்பான்.

கொள்ளை நடத்தும் பொழுது யாராவது பெண்களைப் பிடித்து விட்டார்களானால்மேலே கேட்க வேண்டியதில்லை. இரவுப் பொழுது முழுவதும் கேளிக்கை தான். குடிமயக்கத்தால் உணர் விழுந்து அவர்களாகத் தூங்கினால் தான் விமோசனம்.

கையாண்ட உபாயம்

ஓர் ஊரில் தங்களுக்குக் கிடைக்கக் கூடியது முழுவதையும்உறிஞ்சியபிறகு எதற்கும் பயன் படாத அந்தப் பாதையையும் சும்மா விட்டுப்போக மாட்டார்கள். தீயிட்டுக் கொளுத்தி விடுவார்கள். எங்கே பார்த்தாலும் நெருப்பு ஜ்வாலையும் புகையும் சூழ்ந்து கொள்ளும், அந்த ஆனந்தத்தை வேடிக்கைப் பார்த்து விட்டுத் தான் அவர்கள் வேறு ஊருக்குப் போவார்கள். ஊரை விட்டுப் போகும் தங்களைக் கிராமத்தார்கள் பின் தொடர்ந்து வந்து தாக்கி அடிக்காமல் இருக்கவே இந்த உபாயத்தை அவர்கள் கையாண்டு வந்தனர்.

அவர்கள் ஓர் இடத்திலிருந்து மற்றோர் இடத்துக்குப் போகும் போது ராஜ பாட்டைகள் வழியாகவே செல்வார்கள். குறுக்கு வழிகள், ஒற்றையடிப் பாதைகள் வழியாகச் செல்ல மாட்டார்கள். வழியில் விரோதிகள் தங்களைத் தாக்கிவிடுவார்களோ என்ற பயமே காரணம். அதேபோல அவர்கள் கோட்டைச் சுவர்களின் பக்கத்திலும் அடிவாரத்திலும் அதிகமாக நடமாட மாட்டார்கள். மதில்களின் மேலிருந்து தங்கள் மீது யாராவது கற்களை உருட்டி விடுவார்களோ என்ற பயம் போலும்!

சாலைகளில் நடை போட்டுச் செல்லும் போது ஒற்றை வரிசையாக ஒருவன் பின் ஒருவனாகப் போவார்கள். நடை அதிக வேகமாக இல்லாமல் நிதானமாக இருக்கும். இதனால் அவர்கள் நீண்ட தூரம் தங்கள் ஆதிக்கத்தைக் காட்டிப் பயமுறுத்த முடியும். இந்த முறையில் அவர்கள் நாள் கணக்கில் பிரயாணம் செய்ய முடியும் அவசியம் ஏற்பட்டால் தங்கள் படையை நாலைந்து கோஷடிகளாகப் பிரித்து எதிரிகளைச் சுலபமாகச் சூழ்ந்து கொள்வதற்கு இது சௌகரியமாக இருக்கும்.

எதிரிகளுக்குத் தொந்திரவு

போர் செய்வதற்கு ஆயத்தமாக அவர்கள் எதிரிகளின் முன்னிலையிலேயே பாடி இறங்குவார்கள். தங்கள் பக்கத்தவர்கள் சண்டைக்குத் தயாராக இருக்கின்றனரா இல்லையா என்பதைப் பிறர் எளிதில் அறிந்து கொள்ளவிடமாட்டார்கள். அதற்காக முதலில் ஒன்றிரண்டு பேர்களை எதிரியை நோக்கிப் போகச் செய்வர்.

எதிரிகள் தங்களை நோக்கிக் கல்லடிக்கும் பொழுதோ, அம்பு எய்யும் பொழுதோ, அந்த ஜப்பானியப் போர் வீரர்கள் மேலே எழும்பித் குதித்தும் கீழே குனிந்து படுத்தும் தப்பிவிடுவார்கள். இவ்விதம் எதிரிகள் அம்பறாத் தூணிகள் காலியாகும் வரையில் ஆடுவார்கள். அதிர்ஷ்ட வசமாக எதிரிகளின் குறி சரியாகப்பாய்ந்து அவர்களில்ஒருவனை வீழ்த்தி விட்டால், அவனுக்குப்பதிலாக உடனே பின்னாலிருந்து மற்றொருவன் வந்து விடுவான்,

இவ்விதம் ஜப்பானியர்கள் இடை விடாமல் எதிரிகளை அலைக்கடித்துச் சலித்துப் போகும்படி போரிடுவார்கள். நேருக்கு நேர் யுத்தம் செய்யும் பொழுதும் எதிரிகள் குண்டு மாரி பொழியும் வரையில் பொறுத்திருப்பார்கள். முதல் வரிசை முடிந்து மறுபடியும் சுடுவதற்கு மருந்து திணிக்கும் பொழுது ஜப்பானியர்கள் வேகமாக எதிரிகளைத் தாக்கித் திணற வைத்துத் துரத்தி அடிப்பார்கள். மறைந்திருந்து மும்முரமாகப் போர் செய்யும் காலத்தில் திடீரென்று நடுவில் ஜப்பானியர் வெளிக் கிளம்பி எதிரிகளை நான்கு புறங்களிலும் சூழ்ந்து கொள்வார்கள். அதனால் எதிரிகள் பீதிகொண்டு நிலை குலைந்து சிதறி ஓடி விடுவார்கள்.

கைவரிசை

ஜப்பானியர் இரட்டைக்கத்தி விளையாட்டில் தேர்ச்சி பெற்றவர்கள். இரண்டு கைகளிலும் ஏக காலத்தில் கத்தி ஏந்தித் தங்கள் கைவரிசையைக் காண்பிப்பார்கள். ஒரு கத்தியைத் தலைக்கு மேலாகச் சுழற்றிக் கொண்டே மற்றொரு கத்தியால் கீழ்ப்புறமாக அடிப்பார்கள். ஒரே கத்தியைக் கொண்டு போர் புரியும் எதிரிகள் அதனைத் தடுக்க வகையறியாமல் விழித்துக் கஷ்டப்படுவர்.

பலவிதமான தந்திரங்களைச் செய்து, பிறரை ஏமாற்றுவதில் ஜப்பானியர்கள் மிகவும் சமர்த்தர்.

பல் சமயங்களில் அவர்கள் ஆடுமாடுகளை தாங்கள் இறங்கி யிருக்கும் இடத்துக்கு முன்பாகக் கட்டி வைப்பார்கள். மற்றும் சில சமயங்களில் பெண் மக்களை வைத்திருப்பர். எதிரிகள் ஒரு பாவமும் அறியாத ஆடு மாடுகளை வதைக்க மாட்டார்கள்; பெண் மக்களைக் கண்டு எதிரிகள் மயங்கி விடுவார்கள். மனித சமூகத்தின் இத் தகைய மனோ தத்துவத்தை உபயோகித்தே அவர்கள் நடந்து வந்தார்கள் போலும். பொன், வெள்ளி, விலையுயர்ந்த ரத்தினங்கள் முதலியவற்றை வாரி யிரைத்தும் எதிரிகளை அவர்கள் மயக்குவர்.

ஜப்பானியர் தாங்கள் மேலே செய்யப்போகும் காரியத்தைப் பிறர் அறிந்துகொள்ள முடியாதபடி நடத்துவார்கள். திவட்டிக் கொள்ளை போன்ற பயங்கரச் செய்கை ஒன்றைத் துவக்குவதற்கு முன்பு அவர்கள் வலியிழந்தவர்கள்போலச் சோர்ந்து கிடப்பார்கள். 'பார்ப்பவர்கள் அவர்களால் ஒன்றும் செய்ய முடியாது என்று நினைத்திருக்கையில் திடீரென்று ரகசியமாகத் தங்கள் காரியத்தை முடித்துக்கொள்வார்கள்.

அவர்களுடைய கெட்டிக்காரத்தனம்

அதேபோல தரைமார்க்கமாக வேற்றிடத்துக்குப் போக விருக்கையில் அதைப் பிறர் கண்டு கொள்ளாதிருக்க ஜப்பானியர் படகுகளைத் தயார் செய்துவைப்பார்கள். கப்பல்களில் ஏறி ஒடிவிடத் தீர்மானித்தால், ஒட்டைப் படகுகளை நிறுத்தி அவற்றைச் செப்பனிடுவதுபோலப் பாசாங்கு செய்வார்கள், ஒரு நாட்டைப் பிடிக்க விரும்பினால் ஏதாவது ஒரு நகரத்தைத் தாக்குவதுபோலக் காண்பித்துக் கொள்வார்கள், ஒரு கோட்டையைப் பிடித்துக் கொள்வதற்காக ஏணிகளைக் கொணர்ந்து கோட்டை மதில்களில் சார்த்தி விட்டுப் பிறர் அறியாமல் வெளியேறிப் போய்விடுவார்கள், இவ்விதம் பிறருக்கு வேறுவிதமான போக்குக் காண்பித்துத் தங்கள் காரியத்தைச் சாதித்துக் கொள்வதில் ஜப்பானியர் கை தேர்ந்தவர்கள்.

ஏதாவது ஓர் ஊரைவிட்டுப் போகும்பொழுது விரோதிகள் தங்களைத் துரத்திக்கொண்டு வராமல் இருப்பதற்காக ஜப்பானியர்கள் ஊரைக் கொளுத்தி விடுவது மட்டுமல்லாமல் வழி நெடுக முள்ளை வாறி இரைத்து விடுவர், மூங்கில்களைக் கூர்மையாகச் சீவி, பூமியில் சொருகி வைப்பர்: தங்களைத் துரத்திவருபவர்கள் அவற்றால் அவதிப்படுவார் என்றே எண்ணினார்கள்,

"சந்தேகம் அதிகம்"

ஜப்பானியர்கள் வெகு ஸந்தேகப் பிராணிகள். யாரையும் நம்பமாட்டார்கள் கிராமங்களில் புகுந்து கொள்ளை யடிக்கும் உணவுப் பொருள்களை அப்படியே வாறிக் கட்டிக்கொண்டு போகமாட்டார்கள். ஒரு கால் அவற்றுள் விஷம் கலந்திருக்குமோ என்ற சந்தேகம் உண்டு. அதனால் ஊராரைப் பிடித்து வந்து அவர்களைக்கொண்டு அந்தச் சாமான்களை ருசி பார்க்கச் சொல்வார்கள். விஷம் கலந்த பொருள்களை ஊரார் சாப்பிடமாட்டார்கள் அன்றோ? விஷம் கலக்கவில்லை என்ற ஊர்ஜிதம் செய்து கொண்டே அவர்கள் அந்தப் பொருள்களைத் தூக்கிச் செல்வர்.

அன்றி, தங்களுக்கு உபயோகமாக இருக்கக்கூடிய மனிதர்களையும் ஜப்பானியர்கள் தூக்கிச் சென்று விடுவர். அவர்கள் திரும்பவும் தங்கள் ஊருக்குத் திருப்பி வரமுடியாமல் அவர்கள் முகத்தை விகாரப்படுத்தியும், அவர்களைப்பற்றிய பொய் வதந்திகளைக் கிளப்பியும் விடுவார்கள். அவ்விதம் பிடிபட்டவர்கள் எங்கே தங்களைக்காட்டி விடுவார்களோ என்று எண்ணத்தால் பிடிபட்டவர்களுடைய நாக்கை அறுத்தாவது பின்னால் இழுத்துக் கட்டியாவது பேசமுடியாமல் செய்து விடுவார்கள்.

ஆனால் அவர்களுக்கு உதவி செய்யும் துரோகிகளுக்கு ஜப்பானியர்கள் ஏராளமான பொருள் உதவி செய்வார்கள். அவ்விதம் அவர்கள் லஞ்சம் கொடுத்தே தங்கள் காரியங்களுள் பலவற்றைச் சாதித்துக் கொண்டனர் என்றும் கூறலாம்.

காந்தி ஜோஸியர்

ஒரு வருஷப் பலன் மாதிரி ரூ. 3.
ஆரூடம் 5 கேள்விகளுக்குப் பதில் ரூ. 1
வி. பி. செலவு அணா 5.
ஜனனகால விவரம் or எழுதும்நேரம். சுமார் வயது தேவை.
ஹனுமான் ஆச்ரமம், திருத்தணி S.I.

ஹிந்திக்கதை

மதபலி

★ சுதர்சன் எழுதியது.

5

அக்தா திடுக்கிட்டு எழுந்து உட்கார்ந்தாள். இப்படியும் அப்படியும் பார்த்து கலவரத்துடன் நாம் எங்கேயிருக்கிறோம் என்பதைக் கூட அவளால் நினைக்க முடியவில்லை. சிறிது நேரத்திற்குப் பிறகு அன்று பகல் நடந்த விஷயங்கள் எல்லாம் நினைவிற்கு வந்தன. அவிழ்ந்திருந்த கூந்தலை முடிந்து, ஆடையைச் சரிப்படுத்திக் கொண்டு எழுந்து நின்று, "இந்த நடு ராத்திரியில் ஒரு ஏழைப் பெண்ணருகில் வர உனக்கு என்ன அதிகாரமிருக்கிறது?" என்று கேட்டாள்.

பேச்சு என்னமோ மிகவும் கோபமானதாகத் தான் இருந்தது. ஆனுல் கைத்யானஸுக்கு அவ்விதம் பட வில்லை. அவன் மெதுவாக, "நான் உன் காதல் பூசாரி, பூசாரி தான் பூஜிக்கும் தேவி அருகில் எப்பொழுது வேண்டுமானுலும் வரலாம்!" என்றுன்.

அதைக் கேட்டு அக்தா பிரமித்து விட்டாள். அவள் கண்கள் ஜ்வலித்தன, முகம் ரத்தம் போலாகியது, அவள் யாதொரு பதிலும் சொல்லாமல் மௌனமானுள்.

அக்தா! நான் உனக்குப் பல முறை என்னைக் கலியாணம் செய்து கொள்ளும்படிச் சொல்லி அனுப்பியும் நீ முடியாது என்று சொல்லிவிட்டாய். நான் இந்த ஊரின் கவர்னர். ஸிஸிலியின் ஆட்சி பூராவும் என் கையில் இருக்கிறது. என்னிடம் பணமிருக்கிறது. நான் வியாதியஸ்தனல்ல, அழகில்லாதவனல்ல—அப்படியிருந்தும் நீ ஏன் என்னைக் கலியாணம் செய்ய மறுக்கிறுய்? அக்தா, நான் பொய் சொல்லவில்லை. நான் என் மனதை எவ்வளவோ திடப்படுத்திப் பார்த்தேன். ஆனுல் உன்னை நான் என்றைக்குப்பார்த்தேனே அன்று முதல் என்மனமே வேறு விதமாக மாறிவிட்டது. நான் கவர்னர்; என்னிடம் அதிகாரம் இருக்கிறது. நான் எது நினைத்தாலும் செய்து விடலாம் என்று நினைத்தேன். ஆனுல் உன் எதிரில் வரும்பொழுது என் அதிகாரமெல்லாம் எங்கோ பறந்து போய்விடுகிறது. என்மேல் இனி யாவது தயவு செய். என்னைக் கலியாணம் செய்து கொள். நான் தேவதைகள் சாட்சியாகச் சொல்லுகிறேன். அதன் பிறகு என்னுல் உனக்கு ஒரு விதக் கெடுதலும் நேராது. உன் மனதை என்றைக்கும் நோகும்படி செய்யமாட்டேன், நான் உன்னைப் பூஜை செய்வேன். உன் உத்திரவுப்படி கீழ்ப்படிந்து நடப்பேன்" என்றுன் கைத்யானஸ்.

"நான் இந்தக் கேள்விகளுக்கு முன்பே பதில் சொல்லிவிட்டேன். மேலும் இன்று என் எண்ணமெல்லாம் வேறுவிதமாக மாறிவிட்டன. என் தேகத்தில் உங்கள் அதிகாரச் சட்டம் அணுகிவிட்டது. என் பதிலும் அதே சட்டம் தான்! நீங்கள் என்ன சொல்ல நினைத்தீர்களோ அதைச் சொல்லி முடித்துவிட்டீர்கள். இனி நான் சொல்லப்போவதைக் கேளுங்கள், எனக்கு மரண தண்டனையில் தான் இஷ்டமிருக்கிறதேயொழிய உங்களைக் கலியாணம் செய்து கொள்ள மனம் இணங்கவில்லை. உங்களுக்கு என்ன இஷ்டமிருக்கிறதோ அதன்படி செய்து கொள்ளுங்கள். ஆனுல் கொலை செய்து ரத்தத்தால் நனைந்த உங்கள் கையைப் பிடிக்க எனக்கு இஷ்டமில்லை. பகலில் பட்ட கஷ்டத்திற்குச் சாந்தி கொள்வதற்காக கடவுள் இரவை ஏற்படுத்தியிருக்கிறுர். போங்கள். போய் சிரமபரிகாரம்செய்துகொள்ளுங்கள். ராஜத்துரோகிகளிடம் உங்களுக்கு இந்த நேரத்தில் என்ன வேலை?"

கைத்யானஸின் தலை சுழல ஆரம்பித்தது. அவன் கண்களில் நீர் பெருகியது. அவன் ஒரு தேசத்தையே நிர்வகிப்பவன். அவன் நினைத்தால் எந்த உத்திரவும் போடலாம். அவனுடைய உத்திரவைக் கீழ்ப்படிந்து நடத்தவும் நடத்துவார்கள். ஆனுல் அன்று அவன் ஒரு இளம் மங்கையின் முன் தலை சாய்க்க வேண்டியிருந்தது. அவள் மேலும் அவனை உதறித் தள்ளிவிட்டாள். அது எப்படிப்பட்ட அவமானகரமானது? அதை அவனுல் சகிக்க முடியவில்லை. அவன் தரையை ஓங்கி உதைத்தான்: கோபமாக அக்தாவைப் பார்த்து "நீ உன் மரணத்தைச் கூப்பிட்டுக்கொண்டிருக்கிறுய். உன்னுடைய அழகைத்தான் நான் பார்க்கிறேன். ஆனுல் ஜெயில் கம்பிகளைப் பார்க்கவில்லை" என்று சொல்லி வெளியே போய் விட்டான். உடனே அறையின் கதவும் தாளிடப்பட்டது.

"அது உண்மையான பிரேமையல்ல. அவன் நாடக நடிப்புக் காதல் பரீக்ஷை அந்த நெருப்பின் முன் பலிக்கவில்லை. உண்மைக்காதலனுக்கு கோபம் என்பதே வராது. அது பரவவும் பரவாது. அவன் தனக்குத் தானே நொந்து கொள்வான். ஆனுல் தன் காதலி கண்கலங்கச் சகிக்கமாட்டான்.

கைத்யானஸ் மறு நாள் காலை சிப்பாய்களுக்கு அக்தாவைச் சித்திரவதை செய்யும்படி உத்திரவிட்டான்.

6.

ஜனங்களுக்கு விஷயம் பரவியது. அவர்கள் கலவரமடைந்தார்கள். அதுவரை ஆண்களைத்தான் சித்திரவதை செய்து வந்தார்கள். இப்பொழுது பெண்களின் முறை வந்துவிட்டது. பியாஸ்ஸாவிற்கு எதிரில் உள்ள பரந்த மைதானத்தில் அவ்வூர் ஜனங்கள் எல்லோரும் கூடியிருந்தார்கள். கூடி என்ன செய்வது? ஏதும் சச்சரவு நடக்காதவண்ணம் நான்கு பக்கங்களிலும் போலீஸ் படை அணிவகுத்து நிறுத்தப்பட்டிருந்தது. நடுவில் அக்தா நின்று கொண்டு ஜனங்களைப் பார்த்து "எனக்கு இந்தத் தண்டனையை கொடுத்ததால் நான் மிகவும் பாக்யசாலி ஆனேன்! யாருக்கும் இந்த மாதிரி மரணம் ஏற்படுவது மிகவும் கஷ்டம். இது சாதாரணமான மரணமில்லை. தியாகத்தினுல் உண்டானது. உலகத்தில் உயிருடன் அடிமை வாழ்க்கை வாழ்வதை விட இது எவ்வளவோ மடங்கு மேலானது. இதனுல் ஜாதியின் கீர்த்தியும், மதத்தின் சக்தியும் அதிகரிக்கிறது. மனிதன் தினமும் இறப்பதும் பிறப்பதுமாகவே இருக்கிறுன். ஆனுல் இந்த மாதிரி தியாகம் செய்து இறப்பதற்கு ஏதாவது புண்ணியம் செய்திருந்தால்தான் கிடைக்கும். நான் ஏதாவது குற்றம் செய்திருக்கிறேனு, உங்களுக்குத் தெரியுமா?" என்று கேட்டாள்.

ஜனங்கள் ஒரே குரலில் "நீ நிரபராதி" என்றுர்கள்.

"எனக்கு இதை விட வேறு என்ன ஆனந்தம் வேண்டும். என் மதத்திற்காக நான் என்னைப் பலியிடுகிறேன். மேலும் என்னைப்போல் என் சகோதரிகளுடையவர்களும், என் மதத்தினர்களும், இதே மாதிரி உயிரைத் தியாகம் செய்ய முன் வருவார்கள் என்று நான் மனப்பூர்வமாக நம்புகிறேன்" என்றுள் அக்தா.

திடீரென்று ஜனங்களின் மத்தியில் கூச்சல் கிளம்பியது. கைத்யானஸ் வந்தான். ஜனங்கள் பீதி அடைந்தார்கள். கைத்யானஸ் அக்தா அருகில் வந்து "இப்பொழுதாவது நீ கிறிஸ்துவ மதத்தை விட்டு விட்டு எங்கள் மதக் கோட்பாட்டின்படி பிராயச்சித்தம் செய்து கொண்டால் உன்னை விடுதலை செய்து விடுவேன்" என்றுன்.

ஜனங்கள் பயந்து விட்டார்கள். ஆனுல் அக்தா நிர்ப்பயமாக நின்றிருந்தாள். அவள் பெருத்த குரலில் "நான் இந்த ஊர் ஜனங்களின் முன்பு பெருத்த குரலில் சொல்லுகிறேன். நான் கிறிஸ்துவ மதத்தினள். நீங்கள் வேண்டுமானுல் உங்கள் மதத்தின்படி ஒரு கையில் சந்திரனும், மறுகையில் சூரியனுமாக முத்திரையிட்டு விடுங்கள். நான் அப்பொழுதும் என் மதக்கோட்பாட்டை விடவே மாட்டேன்" என்றுள்.

அங்கு கூடியிருந்தவர்களில் யார் யார் கிறிஸ்துவர்களாய் இருந்தார்களோ அவர்கள் எல்லோரும் சந்தோஷமடைந்தார்கள். யார் யார் அம் மதத்தினர் இல்லையோ அவர்கள் பிரமித்து நின்றிருந்தார்கள். கைத்யானஸ் கோபத்தால் பைத்தியக்காரனைப்போல ஆகி விட்டான். அவன் தன் தலையை வேகமாக ஆட்டி "சித்திரவதை செய்யும் யந்திரத்தைக் கொண்டு வா" என்று சிப்பாய்களுக்கு உத்திரவிட்டான்.

யந்திரம் கொண்டு வரப்பட்டது. ஆனுல் அது இரும்பால் ஆனதல்ல. எலும்புகளால் செய்யப்பட்டது. அதைப் பார்த்து ஜனங்களின் மனது படபடத்தது. ஆனுல் அக்தா எவ்வித கவலையுமின்றி யந்திரத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாள். பிறகு அவள் சிரித்துக் கொண்டே சற்று முன் வந்து தன் அழகான மெல்லிய கை கால்களை மரணத்தின் வாயில் கொடுத்தாள். எவ்வளவு தைரியம். எப்படிப்பட்ட மனவுறுதி. மரணத்தின் முன் கூட 'பய'மென்பதே இல்லை. அவளுக்கு யந்திரத்தின் பயமுமில்லை, மரணத்தின் பயமுமில்லை. ஆனுல் அவள் மனதில் தன் மதத்தைக் காப்பாற்ற வேண்டு

அக்தாவின் மனதை மாற்ற கைத்யானஸ் பலவிதமாக முயற்சித்தான்: காரியம் நடக்கவில்லை. மரண தண்டனை விதித்த சமயமும் தன் மனுே திடத்தை மாற்ற அவள் மறுத்துவிட்டாள். மதத்திற்காகத் தன்னைப் பலியிட்டுக்கொள்ளவும் முன் வந்தாள் அந்த மாது சிரோமணி. கைத்யானஸின் கொடிய புத்தி பெருந்தீங்கை இழைத்துவிட்டது. ஆனுல் கைத்யானஸின் கதி என்னவாயிற்று? பிறகு அவன் மட்டும் சுகித்திருந்தானு? கடவுளின் தண்டனை அவனை விட்டதா? அவன் வாழ்க்கை எவ்விதம் முடிந்தது? — இதை யெல்லாம் இவ்வாரம் பூர்த்தி பெறும் இக் கதையில் படிப்பீர்கள்.

* * * * *

மொழி பெயர்த்தவர்: வி. எஸ். வெங்கடேசன்

மென்ற ஆசை தான் இருந்தது. அது ஒரு பெண்ணின் தியாகமுல்ல; மதத்தின் தியாகம். அதனுல் கிடைப்பது உதையும் அடியும் தான். யந்திரம் அழுத்தியது. அதன் முண்டுகள் அக்தாவின் சௌந்தரிய தேகத்தில் குத்தின. எலும்பு முறிந்து ரத்த வெள்ளம் ஏற்பட்டது. ஜனங்கள் அதைக் கண்டு கண் கலங்கினுர்கள். ஆனுல் அப்பொழுதும் அக்தா கண் கலங்கவில்லை. வாய் விட்டு 'ஹா' என்று கூடச் சொல்லவில்லை. அவள் முன் போலவே சிரித்துக் கொண்டிருந்தாள்.

கைத்யானஸ் அவளுடைய அபூர்வமான தைரியத்தைக் கண்டு மேலும் கோபமடைந்த அவன் சிப்பாய்களைப் பார்த்து தான். "அவளை இதிலிருந்து அவிழ்த்து உயிருடன்கொளுத்தி விடுங்கள். மாயா மந்திரக்காரியாக இருக்கிறுள்" என்றுன்.

நெருப்பை மூட்டினுர்கள். அதனுடனேயே அந்த தேசத்தவர்கள் மனதிலும் ஒரு உணர்ச்சித் தீமூண்டது. 'கைத்யானஸ் நெருப்பைப் பார்த்து சந்தோஷப்பட்டான். ஆனுல் அவன் அஞ்ஞானக் கண்களால் அக்தாவைப் பார்க்க முடியவில்லை. அவளது தைரிய தேவதை அவன் கண்களை மறைத்துவிட்டது. நெருப்பு கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்தது. அக்தாவின் மெல்லிய கைகளையும் கால்களையும் இரும்புச் சங்கலியால் கட்டினுர்கள். ஜனங்களது உணர்ச்சியின் நெருப்பு கண்களில் வந்து பரவியது. ஆனுல் கைத்யானஸின் கண்கள் மாத்திரம் முன்போலவே மறைக்கப்பட்டிருந்தன. அவன் ஜனங்களுக்கு மனிதன் அசட்டு தைரியத்தால் என்ன கஷ்டத்திற்கு உள்ளாகிறுன் பார்த்தீர்களா?' என்று சொல்ல விரும்பினுன். அக்தாவை நெருப்பிலிருந்து தப்பி வைக்கலாமா என்றும் நினைத்தான். ஆனுல் ஒன்றும் செய்யவில்லை.

எவ்வளவு கடுமையான தண்டனை? அதைக் கற்பனை செய்து பார்த்தால்கூட மெய் சிலிர்க்கிறது! அக்தா அப்பொழுதும் சாந்தமாகவே இருந்தாள். திடீரென்று சிப்பாய்கள் நெருப்பின் எதிரில் அக்தாவை மேலே தூக்கிக் கட்டினுர்கள்: ஒரு பாண்டத்தை நெருப்பில் காய்ச்சக் காண்பிப்பதுபோல்! அவளுடைய புடவை, பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே எரிந்துவிட்டது. அந்த தேசத்திலேயே அழகி, அடக்க ஒடுக்கம் வாய்ந்தவள், அப்படிப்பட்டவளை அம்மாதிரி நிலையில் கண்ட ஜனங்களுக்கு கோபம் அடக்கமுடியாதாகியது. அவர்களுடைய ரத்தம் கொதித்தது. உதடுகள் துடித்தன. கண்கள் ஜ்வலித்தன. அக்தாவின் தேகத்தில் சிறிய சிறிய ஈயத்துண்டுகள் பாய்ந்தன. அவள் உடம்பிலிருந்து ரத்தம் நெருப்பின் மீது சொட்டிக்கொண்டிருந்தது. மேலும் பகவான் அந்தமாதிரி அநியாயத்தை மௌனமாகப் பார்த்துக்கொண்டிருந்தார்.

திடீரென்று ஒருவன் முன் வந்து "ஜனங்களே, நீங்கள் அவமானத்தால் தற்கொலை செய்துகொள்ள நேரிடும். இந்த கைத்யானஸ் ராக்ஷஸன், பைசாசம், உங்களுடைய கௌரவத்தைக் குலைக்கிறுன். உங்களுடைய அன்பிற்குகந்த பாலிய கன்னிகை அக்தாவை, கூட்டம் நிறைந்த இந்த பரந்த மைதானத்தில் ஆடையின்றி செய்துவிட்டான். யாதொரு குற்றமும் இல்லாமல் அவளை நெருப்பிலிட்டு எரிக்கிறுன். நீங்களும் அதை வேடிக்கை பார்க்கிறீர்கள். நீங்கள் ஆண் பிள்ளைகளா? உங்களுக்கு சகோதர சகோதரிகள் இல்லையா? உங்கள் உடம்பில் ரத்தமில்லையா? உணர்ச்சியில்லையா? உங்கள் மனதில் உண்மையான ஜாதியின் அபிமானமில்லையா? நீங்கள் உண்மையான ஜாதி அபிமானிகளாகவும் அல்லது சகோதர சகோதரி அபிமானிகளாகவும் இருந்தால் இந்த கொலைகாரனை உயிருடன் விடாதீர்கள்" என்று கூக்குரலிட்டான்.

ஜனங்களின் மனதில் உணர்ச்சி வெள்ளம் பெருக்கெடுத்தது. அக்தாவைக் காப்பாற்ற முன்வந்தார்கள். கைத்யானஸ் சட்டென்று சிப்பாய்களுக்கு "பிடியுங்கள். அந்த துன்மார்க்கனை" என்று உத்திரவிட்டான்.

ஆனுல் சிப்பாய்களின் மனமும் அவர்களுடன் கலந்துவிட்டது. அவர்கள் அவனைப் பிடிக்கவில்லை. அவர்கள் கையிலிருந்த ஆயுதங்களைத் தரையில் வீசி எறிந்தார்கள். 'எங்களால் முடியாது' என்றும்சொல்லிவிட்டார்கள். ஜனங்களுக்கு உத்சாகம் அதிகரித்தது. அவர்களுடன் சிப்பாய் படைகளும் சேர்ந்து கொண்டன. ஜனங்கள் அவர்கள் கீழே போட்ட ஆயுதங்களை எடுத்துக்கொண்டார்கள். "கைத்யானஸைப் பிடித்துக்கொளுத்துங்கள் அக்தா கிறிஸ்துவளாக இருந்தாலும் பாதகமில்லை. அவளைக் காப்பாற்றுங்கள்" என்று கத்தினுர்கள்.

கைத்யானஸ் இவைகளைக் கண்டு பெருமூச்சு விட்டான். உயிரைக் காப்பாற்றிக்கொள்ள பிரயத்தனப்பட்டுக்கொண்டிருந்தான்! 'எப்படித் தப்புவது? எங்கே போவது?' என்று அவனுக்குத் தோன்றவில்லை. எவ்வளவு சீக்கிரம் விஷயம் மாறி விட்டது! சற்று முன் அதிகாரியாக இருந்தான். ஆனுல் இப்பொழுது ஒரு குற்றவாளியாக மாறி விட்டான். அவர்கள் தன்னைப் பிடித்துக் கொண்டால் கட்டாயம் சித்திரவதை செய்வார்கள் என்று பயந்தான். அவனே இரக்கமில்லாதவன். மேலும் யாரிடத்திலும் இரக்கத்தை அவன் எதிர் பார்க்கவில்லை. அவன் தன் அரண்மனையின் பக்கம் போகவில்லை. நண்பர்களிடம் போகவில்லை. அவன் சட்டென்று குதிரையின் மீது ஏறிக் கொண்டு நதியின் பக்கம் போய் படகுக்காரனிடம் "என்னை அந்தப் பக்கம் கொண்டு விடு, உன்னை நான் பெரிய பணக்காரனுக்கிறேன்" என்று சொன்னுன்.

படகுக்காரன் அவனை இன்னுன் என்று தெரிந்து கொண்டு பயந்தான். அவனுக்கு நகரத்தில் நடந்த விஷயம் தெரியாது. அவன் படகை ஓட்டினுன். கைத்யானஸ் சாந்தமாகப் பெருமூச்சு விட்டான். ஜனங்கள் கரையோரமாக நின்று தங்கள் கையிலிருந்த பட்சி பறந்து விட்டதைப் பார்த்துக்கொண்டிருந்தார்கள். மேலும் படகுக்காரனைத் திட்டினுர்கள். படகுக்காரனுக்கு விஷயம் இன்னதென்று புரியவில்லை. கைத்யானஸ் ஆனந்தமாக உட்கார்ந்திருந்தான். ஜனங்கள் வெறுப்புடன் நதிக்கரையைவிட்டுத் திரும்பி நகரத்திற்குள் போனுர்கள். மனிதர்கள் அவனை விட்டுவிட்டார்கள். ஆனுல் தெய்வம் விடவில்லை, அதன் எதிரில் எந்த ஆறும் குறுக்கிடவில்லை!

சந்தியா சமயம். ஆகாய வீதியில் நீலத்திரை பரவி இருந்தது. மேலே நீல ஆகாயம், கீழே ஜலத்தின் ப்ரவாகம், அதன் மத்தியில் சிறுபடகொன்று பாபத்தின் சுமையுடன் மெதுவாகப் போய்க்கொண்டிருந்தது. ஆனுல் தெய்வத்தின் முன் மனிதனின் சக்தி என்ன செய்யும்? படகில் ஒரு குதிரையும் இருந்தது. அது சட்டென்று அப்படியும் இப்படியும் அசைந்து ஆட ஆரம்பித்தது. பார்த்துக்கொண்டிருக்கும்பொழுதே படகு கவிழ்ந்தது. கைத்யானஸ் அந்த ஜலப்பிரவாகத்தில் மூழ்கிவிட்டான்: படகோட்டி குதிரையுடன் தப்பினுன். ஆனுல் கைத்யானஸ் தப்பவில்லை. படகு தண்ணீரில் மிதந்தது. ஆனுல் கைத்யானஸின் சரீரம் கூடத் தண்ணீரில் மிதக்கவில்லை. நதியைக் கடந்தவுடன் குதிரை மீது ஏறிக் கொண்டு எங்காவது உயிர் தப்பிப் போய் விடலாம் என்று அவன் நினைத்திருந்தான். ஆனுல் அவன் எதை ஆதாரமாகக் கொண்டு அதையும் படகில் ஏற்றிக் கொண்டானே அது யமனுக வரும் என்று அவனுக்கு எப்படித்தெரியும்? அவன் ஜனங்களிடமிருந்து தப்பினுன். ஆனுல் கடவுளிடமிருந்து அவனுல் தப்ப முடியவில்லை. எப்படிப்பட்ட பெருமை வாய்ந்த மனிதன். அப்படிப்பட்ட மனிதனுடைய சடலத்தின் மேல் இச்சை கொள்ள அப்பொழுது ஒருவர் கூட இல்லாமல் போய் விட்டார்கள்.

ஜனங்கள் அக்தாவின் அருகில் நின்று கண்ணீர் வடித்துக் கொண்டிருந்தார்கள். ஆனுல் உண்மையான அக்தா எங்கே இருந்தாள்? அவளை ஜனங்கள் நெருப்பிலிருந்து தப்புவித்தார்கள். ஆனுல் சாவின் வாயிலிருந்து அவர்களால் தப்புவிக்க முடியவில்லை. அதிக நேரத்திற்குப் பிறகு அக்தா கண்ணைத் திறந்தாள். நாலு பக்கங்களிலும் தாயார் குழந்தைகளைப் பார்ப்பது போல் பார்த்துவிட்டு அந்த அக்ஞானிகளிடமிருந்த பார்வையை எங்கோ கண்காணுத இடத்திற்குச் செலுத்தினுள்!

PARASURAM'S

சித்த எண்ணெய்.

இந்த எண்ணெயில் பதினெட்டு சித்தர்களால், அடி, நடு, முடி, என்ற முப்பு குரு பஸ்பம் சேர்ந்திருக்கிறபடியாலும், ஷை எண்ணெயிலுள்ள மூலிகைகளுக்கு நூறு மடங்கு சக்தி ஏற்பட்டு இருக்கிறபடியாலும் மூலிகை சத்துக்கள், ஆல்கலிஸ், ஆல்கலாய்ட்ஸ் (Alkalis, Alkaloids) களாக மாற்றப்பட்டு இருக்கின்றன.

குணமாகும் வியாதிகள்:- அஷ்ட குன்மங்கள், வாயு கட்டிகள், பாண்டு ரோகம், மூல வியாதி. சூலைகள், சர்ம ரோகம், மூத்திர தோஷம், பெரும்பாடு, தலை நோய், வயிற்றுப் புண், கீல்வாயு பிடிப்பு, பித்த பாண்டுகள், சொறி சிரங்கள், ஸ்திரீகளுக்கு மாத விடாய்களில் உள்ள எவ்வகை தோஷங்களையும் நிவர்த்தி செய்யக் கூடியது. சிறு குழந்தைகளும் உட்கொள்ளலாம்.

விலை ½ அவுன்ஸ் ரூ. 1.

பரசுராம் சித்த ஔஷத ஆச்ரமம்
திருவண்ணுமலை.

(பிராஞ்சு: 59-A, லாயிட்ஸ் ரோட், ராயப்பேட்டை மதராஸ்)

ஏஜண்டுகள்:—
மதராஸ்: அப்பா & கம்பெனி.
மதுரை: டி. என். சொக்கலிங்கம் பிள்ளை & ஸன்ஸ்.
காரைக்குடி: சாரதா ஸ்டோர்ஸ்.

வீதிகளிலும் நம்பிக்கையற்ற கடைகளிலும் வாங்காதீர்கள்

நஞ்சன்கூடு பல்பொடி

பல வியாதிகளைத் தடுக்கவும் . குணப்படுத்தவும்

ஊக்கம் உற்சாகம் ஊட்ட | அஜீர்ண பித்த சமனி

உஷ்ண சமனி | கூலாயில் | ஸ்நான தைலம்

கவனிக்க போலிகளால் பற்களுக்கே அபாயம்

சோல் ஏஜண்ட்ஸ்: யுனைடெட் கன்ஸர்ன், 54, பந்தர் தெரு, மதருஸ்
(உதவி வைத்தியர் Dr. P. S. C. மணி) (தபால் மூலம் சிகிச்சை பெறுக)

அமிர்தாஞ்சன்

போலிகள் எச்சரிக்கை

"சுதேசமித்திரன்"

எல்லாவித நோய்களையும் தீர்க்கும்.

அமிர்தாஞ்சன் லிமிடெட்,
பம்பாய் - சென்னை - கல்கத்தா.

சிறுவர் பகுதி

★

புத்திமான் பலவான்

"ராஜன்"

பெரிய அரசர்களில் சிலர் தோன்றிய காலத்தைக் முதலாகக் கொண்டு நம்மவர்கள் காலத்தை கணக்கிடுவார்கள். அப்படிப்பட்ட அரசர்களில் சாலிவாகனன் என்பவன் ஒருவன். இவன் தென்னாட்டை ஆண்ட அரசர்களில் சிறந்தவன். இவன் பிறந்து 1850-ம் வருஷங்கள் ஆகின்றன. இவனைப் பற்றிய கதை ஒன்றுண்டு.

பூர்வம் பைடணபுரி என்னும் நகரில் சோமகாந்தன் என்னும் ஓர் அரசன் இருந்தான். அந்நகரத்திலேயே அறிவில் சிறந்த சுலோசனன் என்னும் ஓர் பிராமணன் இருந்தான். அவனுக்கு சுமித்ரை என்ற பெண் இருந்தாள். அவள் அழகைக் கண்டு பூலோக மாந்தர்களே யன்றித் தேவர்களும் மெச்சினர்.

இப்படி யிருக்கையில், ஆதிசேடன் மானிட உருவங் கொண்டு வந்து, மன்னன் உத்தர வின்றி ரகசியமாக அவளை மணம் புரிந்து கொண்டான். இதை விரும்பாத மன்னன் சுமித்திரையை அவ்வூரினின்றும் துரத்தி விட்டான். மிகுந்த வருத்தத்தோடு அவள் ஊருக்கு வெளியேயிருந்த ஒரு குயவன் வீடு போய்ச் சேர்ந்தாள். கடவுள் கிருபையால் அங்கு ஓர் ஆண் குழந்தையைப் பெற்றாள். அப்பிள்ளை சக்ரவர்த்தியாவதற்குறிய அடையாளங்களோடு பிறந்திருந்தது. அசரீரியும் 'சாலிவாகனன் என்ற பெயரைக் குழந்தைக்கு அளிப்பாய்' என அருளியது. அவ்வண்ணம் தாயும் குழந்தைக்குச் சாலிவாகனன் என்ற பெயரிட்டனள். குயவன் சாலிவாகனனை அதிக அன்புடன் வளர்த்து வந்தான். அவன் வளர் பிறை போல நாளுக்கு நாள் நன்றாக வளர்ந்தான். அவன் தனது சிறிய வயதில் விளையாட்டாகத் தேர், யானை, குதிரை, வீரர்கள் முதலியவற்றை மண்ணால் செய்து வைத்தான். சாலிவாகனன் தன் தோழர்களைக் கூட்டிக் கொண்டு, தான் அரசனாகவும் மற்றவர்கள் மந்திரி பிரதானிகளாகவும் காண்போர் மனம் களிக்கத் தெருவில் விளையாடி வந்தான். அவன் இஷ்டப்படி தினம் தினம் அரசன் சபையில் நிகழும் சம்பவங்கள் யாவும் அறிவிக்கப்பட்டு வந்தன.

ஒரு நாள் சாலிவாகனன் தன் தோழர்களுடன் கொலுவிருக்கையில், ஒரு பிராமணன் வந்து பரிகாசத்திற்குப் பஞ்சாங்கம் ஓதினான். அதற்குச் சாலிவா



கனன் ஒருமண்குடம் அவனுக்குப் பரிசளித்தான். அது மறுநாள் பொன் குடமாயிற்று.

அந்த நகரில் தனகோடி என்னும் செட்டி இருந்தான். அவன் சாகுந்தருணத்தில் தான் படுத்திருந்த கட்டிலின் கால்களின் அடியில் மண், உமி, கரி, எலும்பு ஆகிய நான்கு விதப் பொருள்களைப் புதைத்து வைத்து சமபாகமாகப் பங்கிட்டுக் கொள்ளும்படித் தன் புத்திரர்களுக்குத் திட்டம் செய்து இறந்தான். அவர்கள் அப்பொருளை எவ்விதம் பாகம் செய்வது என்று அறியாமல் திகைத்தனர். அவர்கள் விக்கிரமாதித்த மன்னனிடம் சென்று தங்கள் வழக்கைக் கூறியும் அவனாலும் செவ்வனே தீர்க்க முடியாது போயிற்று. கடைசியில், சாலிவாகனன் பெருமையைக் கேள்வியுற்று அவனிடம் போய் தம் வழக்கைக் கூறினர்.

அப்போது சாலிவாகனன் விஷயத்தை விசாரி

த்து, அவ்வணிகன் நோக்கத்தை யறிந்தான். மூத்த பிள்ளைக்கு மண் அதாவது பூமி, இரண்டாமவனுக்கு உமி அதாவது தானியங்கள், மூன்றாமவனுக்குக் கரி அதாவது பொன் வெள்ளி முதலிய உலோகத் திரவியங்கள், நான்காவது குமாரனுக்கு எலும்பு அதாவது கால் நடைகள் என்றும் சாதுர்யமாகக் கூறி வழக்கைத் தீர்த்தான்.

சாலிவாகனன் பெருமை அவன் புத்தி கூர்மையின் தன்மையால் இவ்வாறு விளங்கவும், அவ்வூர் அதிபதியான விக்கிரமாதித்தன் அவன் மீது பொறாமை பெரிதும் கொண்டான். விக்கிரமாதித்தன் தன் சேனையோடு புறப்பட்டுச் சண்டைக்குப் போனான். அதைக் கேட்ட சாலிவாகனன் தான் மண்ணால் செய்த தேர், யானை, குதிரை, காலாள் முதலியவைகளுக்கு உயிர் தந்து அழைத்துக் கொண்டு விக்கிரமாதித்தனை எதிர்த்தான். சாலிவாகனன் வெற்றி பெற்றான். அவன் "தந்தை அறிவு மகற்கு" என்பதற்கேற்ற நீதிமன்னனாய் சகல சாஸ்திர விற்பன்னனாய் நீடூழி காலம் ஆண்டு தன் காலத்தையும் 'சாலிவாகன சகாப்தம்' என விளங்கும்படிச் செய்தான்.

இவன் அரசாண்ட காலத்தை ஓர் எல்லையாக வைத்து 'சாலிவாகன சகாப்தம்' என்று நமது தேசத்தில் காலத்தை கணக்கிட்டு வருகின்றனர்.

அபார சக்திவாய்ந்த டானிக்!

S.K.M.

Dr. N. V. ஸ்ரீராமாச்சார்லுவின்

ஸித்தகல்ப

மகரத்வஜம்

60 மாத்திரை ரூ. 10.
30 மாத்திரை ரூ. 5.

விவரத்திற்கு எழுதவும்:
மதராஸ் ஆயுர்வேதிக் பார்மஸி லிமிடெட்.,
த, பெ. நெ. 151 (ஸ்தாபனம் 1915௵) 289, எஸ்பிளனேட், மதராஸ்.

பிராஞ்சு:- பேனிங்டன் ரோடு, தஞ்சாவூர்.

த்யாகராஜ கீர்த்தனம்

[காபிரைட்]

(சங்கீத வித்வான் துறையூர் எம். ராஜகோபால சர்மா)

I

பல்லவி

மரவகரா நவ மன்மத ரூபுனி

சரணம்

1. நீடோ மெல்லனி மாடோ கன்னுல
   தேடோ மரி வலுவாடோ மனஸா!
2. குலுகோ பாவுல கிலுகோ கபுரபு
   பலுகோ செக்குல தளுகோ மனஸா!
3. வில்லோ கண்டல கல்லோ ஸௌமமுல
   யில்லோ ஸேவபு கோள்ளோ மனஸா!
4. கேலோ வுங்கராலோ பங்க ருய்
   யாலோ செந்த நில்லாலோ மனஸா!
5. சரமோ கனகாம்பரமோ ஸ்ரீகர
   யுரமோ ப்ரோசு துரமோ மனஸா!
6. ஆஜன்மமு ஹ்ருத் ராஜீவமுதோ
   பூஜிந்துர த்யாகராஜநுதுனி மனஸா!

II

நவ மன்மத ரூபுனி	—பார்க்கத் திகட்டாத அழகு கொண்டு விளங்கும் கோடி மன்மத ஸ்வரூபனான ஸ்ரீராமனை
மரவகார	—மறக்காதே
மனஸா!	—மனமே!
நீடோ	—ஸ்ரீராமனின் காம்பீர்யமோ
மெல்லனி மாடோ	—மிருதுவான பேச்சுகளோ
கன்னுல தேடோ	—அழகிய கண்களின் தெளிவோ
மரி	—மேலும்
வலுவாடோ	—மேல் உத்தரீயத்தின் நேர்மையோ—சொல்லத் தர மல்ல, அப்படிப்பட்ட ஸ்ரீராமனை
மரவகரா	—ஒரு போதும் மறக்காதே
குலுகோ	—ஸ்ரீராமனின் நடை அழகோ
பாவுல கிலுகோ	—நடக்கும்போது ஏற்படும் பாதுகைகளின் த்வனி விசேஷமோ
கபுரபு பலுகோ	—கற்பூர புத்திபோன்று விஷயங்களை எளிதில் அறிந்து பேசும் நேர்மையோ
செக்குல தளுகோ	—கன்னங்களின் அழகோ—சொல்லத்தரமல்ல—அப்படிப்பட்ட ஸ்ரீராமனை
மரவகரா	—ஒரு போதும் மறக்காதே
வில்லோ	—கை தனில் விளங்கும் கோதண்டம்
கண்டல கல்லோ	—அந்தக் கோதண்டத்தில் உள்ள மணிகளின் ஓசை
ஸௌமமுல யில்லோ	—பகவான் ஏகாந்தமாக வாஸம் செய்வதற்காக அமைக்கப்பட்டுள்ள புஷ்ப வீடுகள் (லதாக்ரஹங்கள்)
ஸேவபு கொள்ளோ	—அந்த புஷ்ப கிரஹங்களில் பகவான் அதிகமாக வாஸம் செய்யும் நேர்மை முதலானவை-வர்ணிக்கத்தரமல்ல அப்படியுள்ள ஸ்ரீராமனை
மனஸா! மரவகரா	—மனமே! நீ மறக்காதே.
கேலோ வுங்கராலோ	—கை விரலில் அணிந்துள்ள கணையாழி மோதிரத்தின் அழகு
பங்காருய்யாலோ	—பகவான் அமரும் தங்கத்தால் செய்யப்பட்ட ஊஞ்சலின் அழகு
செந்தனில்லாலோ	—பக்கத்தில் மனைவியான ஸீதாதேவியுடன் கூடி வீற்றிருக்கும் காக்ஷி-முதலானவை-விவரிக்க இயலாதது. அப்படியுள்ள ஸ்ரீராமனை

விக்டோரியா டிபோ.
மைலாப்பூர், மதராஸ்.

நினைவிருக்கட்டும்

தேகாரோக்கியம் கெடாமலிருப்பதற்கு எப்படி கலப்பற்ற சுத்தமான உணவு உட்கொள்ளுகிறோமோ அதுபோலவே, கண்களுக்கும், மூளைக்கும் கெடுதல் நேரிடாது. ஞாபக சக்தியும் சுறு சுறுப்பும் அடைவதற்கு கலப்பற்ற பொடியே அவசியமென்பதை பொடி உபயோகிக்கும் சகோதரர்கள் அறிதல் வேண்டும். இவ்வித கலப்பற்ற பொடிக்கு மதராஸ் ஸ்ரீ அம்பாள் அண்டு கம்பெனி, யார் 35 ஆண்டுகளாக புகழ் பெற்றவர்களென்பது யாவரும் அறிந்ததே. பொடி வாங்கும் போது ஸ்ரீ அம்பாள் பட்டணம் பொடியையே கவனித்து வாங்க நினைவிருக்கும்படி கேட்டுக் கொள்ளுகிறோம்.

பயஸ்யா

தாய்மார்களே!

குழந்தைகளுக்கு தாய்ப்பால் தவிர மற்ற எந்த உணவும் ஏற்றதல்ல.

உங்கள் பாலை விருத்தி செய்து கொண்டு குழந்தைகளை நீங்களே ஆரோக்கியமாய் வளருங்கள்.

தாய்ப்பாலினால் வளர்ப்பது ஆரோக்கியம் மட்டுமல்ல. மிகச் சிக்கனம்கூட.

பயஸ்யா (Regd)

தாய்ப்பாலை மிகுதியாய் உண்டு பண்ணும் உத்தம ரஸாயனம்.

விலை ரூ. 2—8—0
(Packing & Postage Extra.)

எல்லா மருந்துக் கடைகளிலும் கிடைக்கும்.

அல்லது நேரில்:—
ஆத்ரேய ஆயுர்வேதிக் ஒர்க்ஸ்,
தென்னூர்ரோடு, திருச்சிறாப்பள்ளி.
Prop. V. B. Nataraja Sastri,
Ayurvedacharya.

(தாய்மாருக்கு உபயோகமுள்ள பயஸ்யா புஸ்தகம் இனாம்.)

மனஸா! மரவகரா	—மனமே! நீ ஒருபோதும் மறக்காதே
சரமோ	—கை தனில் விளங்கும் பாணம்
கனகாம்பரமோ	—பகவான் உடுத்தியுள்ள உயர்ந்த பீதாம்பரம்
ஸ்ரீ கர யுரமோ	—லக்ஷ்மீதேவி வாஸம் செய்யும் பகவானின் வக்ஷஸ்தலம்
ப்ரேசேதி உரமோ	—பக்தர்களை ரக்ஷித்தருள எண்ணம்கொண்டு கிருபை நிறைந்துள்ள ஹ்ருதயம்-முதலானவ்வ-வர்ணிக்க இயலாதது அப்படியுள்ள ஸ்ரீராமனை
மனஸா! மரவகரா	—மனமே! மறக்காதே.
மனஸா!	—மனமே! (ஜனங்களே!)
ஆஜன் மமு	—பிறந்தது முதல் (எப்போதும்)
ஹ்ருத் ராஜீவ முதோ	—மனமாகிற தாமரை மலரால்
த்யாகராஜ நுதுனி	—த்யாகராஜனல் துதிக்கப்பட்ட ஸ்ரீராமனை
பூஜிந்துர	—பூஜை செய்.

III

இது திவ்ய நாமஸங்கீர்த்தனப் பகுதியைச் சேர்ந்த கீர்த்தனங்களிலொன்ருகும். இந்தக் கீர்தனததால் ஸ்வாமிகள் ஸ்ரீ ராமனின் குண கணங்களையும், ஸ்வரூப லக்ஷணங்களையும் விரிவாக எடுத்துரைத்து ஸ்ரீ ராமத்யானம் செய்து உய்யுமாறு உபதேசிக்கிருர்.

நவ மன்மத ரூபுனி:—'தலசி நந்தனே' என்ற கீர்த்தனத்தின் சரணத்தில் 'கோடி மதனலாவண்ய முலைன ஸாடிகானி நீ திவ்ய ரூபமுனு' என்று சொல்லப்படுவது கவனிக்கத் தக்கது.

மேல்லனி மாடோ:—'நீ தயசே' என்ற கீர்த்தனத்தின் சரணத்தில் 'வர ம்ருது பாஷ ஸுஸ்வரமய பூஷ' என்றும் 'நினுவினு ஸுகமுகான' என்ற கீர்த்தனத்தின் 2-வது சரணத்தில் 'கருணுரஸ பரிபூர்ண வரத ம்ருது வார்த்தலு கல' என்றும் காணப்படுவது குறிப்பிடத்தக்கது.

குலுகோபாவுலகிலுகோ:—இக்கீர்த்தனத்தின் சரணங்களால் ஸ்ரீராமனின் நடை யழகு முதலானவைகளையும் கையில் பிடித்துள்ள வில், தரித்துள்ள பீதாம்பரம் முதலியவைகளையும் குறிப்பிட்டு வர்ணித்துள்ளார். ஸ்ரீமத் வால்மீகி ராமாயணம் ஸுந்தர காண்டம் 35-வது ஸர்க்கத்தில் ஸ்ரீராமனின் ஸாமுத்ரிகா லக்ஷணம் விவரிக்கப்பட்டுள்ளது. 'எந்து கௌகலிந்துரா' என்ற கீர்த்தனத்தின் சரணத்தில் 'நீது பலுகே பலுகுரா—நீது குலுகே குலுகுரா —நீது தளுகே தளுகுரா' என்று காணப்படுவது கவனிக்கத்தக்கது.

ஆஜன்மமு,—ஆதிசங்கரர் தெரிவித்துள்ள,

கபீரே காஸாரே விசதி விஜனே கோர விபினே
விசாலே சைலேச ப்ரமதி குஸுமார்த்தம் ஜபமதி: |
ஸமர்ப்யேகம் சேதஸ்ஸரஸிஜம் உமாநாத பவதே
ஸுகே நாவஸ்தாதும் ஜன இஹ நஜானதி கிம்ஹோ ||

(சிவாநந்தலஹரி)

என்ற ச்லோகத்தில் கூறப்பட்டுள்ளது போன்றே ஸ்வாமிகளும் தெரிவித்துள்ளார்.



தூசி மூலம் சுவாசப்பைக்கு வியாதி செல்லுகின்றது.
பேப்ஸ் சுவாசகாச மாத்திரைகள் உட்கோள்ளுங்கள்.
பெப்ஸ் வாயில் கரைந்தவுடன் மருந்து பூர்வமான சத்து தொண்டைக்கு சமனமூட்டி, சுவாச அடைப்பை நீக்கி, ஜலதோஷம், க்ருமிகளை ஒழித்துவிடும். விலை ரூ1.

பேப்ஸ் உட்கோள்க:
PEPS
கிருமிநாச சுவாச மாத்திரைகள்.

கர்ப்பத்தைத்தடுக்க "ரஹாத்"

நிச்சயமான மருந்தாகும். மூன்று நாட்கள் உபயோகித்தால் கர்ப்பம் தரிக்காது. ஆர்டருடன் உத்திரவாத பாரமும் அனுப்பப்படும். விலை ரூபா 5/8. அல்லது 10 ஷில்லிங். மாதவிடாய் தவருமல் ஏற்படும்.

Dr. S. H. KHAN, (S.M.) 42, Churchgate St., Fort, Bombay. Phone 21343.

ஆனந்த பற்பொடி

இந்த லேபிலைப்பார்த்து வாங்குங்கள். இதுதான் மார்க்கட்டில் சிறந்தது எங்கும் கிடைக்கும்.

Certified by Rt. Hon. V. S. Srinivasa Sastri, P.C.
Hon. Sir R. K. Shanmukham Chetty, K.C.I.E.
Hon Sir Md. Habibulla Sahib Bahadur, K.C.S.I.
Hon. Sir K. V. Reddi, Kt. Sir B.N. Sarma, K.C.S.I.
Hon. Sir P. S. Sivaswami Aiyar, K.C.S.I., C.I.E.
Hon. Sir C. P. Ramaswamy Aiyar, K.C.I.E.
Hon. Sir M. Krishnan Nair, Kt. Sir A. P. Patro Kt.
Hon. A. T. Pannirselvam, Dr. P. Subbaroyan
Hon. Justice K. Sundaram Chetti, Hon. P. T. Rajan

ANANDA TOOTH POWDER — TRADE MARK — REGISTERED

Hon. Justice Sir C. V. Kumaraswami Sastri, Kt.
Hon. Justice Sir V. Ramesam, Kt.
Hon. Justice Sir C. V. Ananthakrishna Aiyar Kt.
,, C Madhavan Nair, Sir M. D. Devadoss, Kt.
,, M. Venkatasubba Rao, Raja of Sivaganga.
Rajas of Kollengode, Bobbili, Ramnad, Mandasa.
Gold medals from Mysore, Pudukkottai, Etc. States

MANUFACTURED BY—VAIDYARATNA PANDIT U. RAMANATHA SASTRI, MADRAS, 4.



வைத்திய ஸித்தாச்ரமம், 39, பஜார் ரோட், மைலாப்பூர் — மதராஸ்

BLACK LOCK & MACARTHUR LTD., GLASGOW

வெள்ளை வர்ணத்தில் 541 வெள்ளைதான் உயர்ந்தது. வெண்மை மாருது வெடிக்கவும் செய்யாது. அதிக ஸன்னமாதலால் ஆண்டு வரும். 541 ஈய வெள்ளையை வாங்கி உபயோகித்தால் கூலி மிச்சமாகும். அடிக்கடி வர்ணம் கொடுக்க வேண்டிய அவசியமுமிராது. 541 கெக்கின்பேரில் மான் மார்க்கும் இரண்டு ஈய லீல்களும் இருக்கிற கெக்காகப் பார்த்து வாங்குகள். போலிகளை வாங்கி ஏமாருதீர்கள். செந்தூரத்தில் "மான் மார்க்" செந்தூரம்தான் உயர்ந்தது. இவைகள் எல்லா வர்ண வியாபாரிகளிடத்திலும் கிடைக்கும்.

Sole Agents:- M.R.V. AIYER & CO., 49, பந்தர் தெரு, மதராஸ்.

புதிய பதிப்பு! மலிந்த விலை!!

பாரதி நூல்கள்

(நேர்த்தியான காலிகோ பைண்டு)

1.	கவிதைகள்	Vol I	ரூ. 3 0 0
2.	வசனங்கள்	Vol II	,, 3 0 0
3.	கட்டுரைகள்	Vol III	,, 3 0 0
4.	பகவத்கீதை (காலிகோ)		,, 0 8 0
5.	Agni & other Poems & Translations		,, 1 0 0
6.	Essays & other Prose Fragments		,, 1 0 0
7.	சரித்திரம்		,, 0 4 0

பாரதி பிரசுராலயம்,
567, ஷைரோடு, திருவல்லிக்கேணி, மதராஸ்.

IV

ராகம் தேவகாந்தாரி — ஆதி தாளம்

(29-வது மேள ஜன்யம். ஆ ஸரிமபதஸ. அவ. ஸநிதரீ தபமகமா கரீஸ)

பல்லவி

1.	; நிஸா ரிரீ கமகரீ ரிரீ	ரிஸ நிஸநி ஸரீ	கமகரீ ரீக
	மர வக ரா . . . நவ	. . மன் . மத	ரு . . . பு .
2.	ரிஸஸா நிஸாரிரீ கமபம கரீ ரிரீ	ரிஸ நிஸநி ஸரீ	கமபம கரீரீக
	னி . . மரவக ரா . . . . நவ	. . மன் . . மத	ரு . . . . . பு .
3.	ரிஸ்ஸா மபாததா தநித பாமபா	பா பாதநி தநிதப பா	பதநித மபதப மகரீ . க
	னி . . மரவக ரா . . . நவ	. மன் . . . ம . த	ரு . . . . பு .
4.	ரிஸஸா மபாததா நீஸ்ஸாஸ்ா ஸ்நிதா	நிதபம பாதநிதநிதப பா	பதநிதமபதப மகரீ ரீ, க
	னி . . மரவக ரா . ந வ . .	. . . . மன் . . . ம . த	ரு . . . . பு .
5.	ரிஸஸா மபாததா நிஸ்ரீ ரீ ஸ்நி தா	நிதபம பாதநிதநிதப பா	பதநிதமபதப மகரீ ரீ, க
	னி . . மரவக ரா . . ந வ . .	. . . . மன் . . . ம . த	ரு . . . . பு .
6.	ரிஸஸா மபாததா நிஸ்ரிக் ரீ ஸ்ா ஸ்நிதா	நிதபம பாதநிதநிதப பா	பதநிதமபதப மகரீ ரீ. க
	னி . . மரவக ரா . . . . ந வ . .	. . . . மன் . . . ம . த	ரு . . . . பு .
7.	ரிஸஸா நிஸாரிரீ கமகரீ ரிரீ	ரிஸ நிஸநி ஸரீ	கமகரீ ரீக
	னி . . மரவக ரா . . . நவ	. . மன் . . மத	ரு . . . பு .
	ரிஸஸா		
	னி . . (மரவகரா)		

சரணம் (1)

; ரீ ரீ ; ரிஸ் நிஸ் நி ஸ்ரீ	க்ம்க்ரி ரீ ;	; ஸ்ரி க்ஸ்ரிஸ்
நீ டோ மெல் . . . லனி	மா . . . டோ	கன் . . னுல
ஸ்நிதா நிதபா ; மரீ பபம	பாதநி தநிபா	; தப மகரிக
தே . . டோ . . மரி வலு .	வா . : . . டோ	ம . ன . ஸா .
ரிஸ		
. . (மரவகரா)		

சரணம் (2)

; பப பா ; ; பா , மபம	பாதநி பா ;	; தபாம கமக
குலு கோ பா வல .	கிலு . கோ	கபுர பு . .
ரீ ரிரி மபதா ; மபா தரிஸ்	ஸ்நிதா தாநித பா	; தப மகரிக
. பலுகோ . . செக் குல .	த : ளு . கோ . . .	ம . ன . ஸா .
ரிஸ		
. . (மரவகரா)		

சரணம் (3)

; ரிரி பா ; ; தா , பமப	தாதரி ஸ்ா ;	; ஸ்தா ரிஸ்
வில் லோ கண் ட . ல	கல் . . லோ	ஸும முல
ரிஸ் நிஸ்ரிஸ் ரீ ; ; ஸ்நித பபம	பாதநி தநி பா ;	பநிதப மகரிக
யில் . . . . லோ ஸே . . வபு .	கொள் . . . . ளா	. . ம . ன . ஸா .
ரிஸ		
. . (மரவகரா)		

சரணம் (4)

; தத ரீ ; மகரிரி பமபா	; மப தா ;	ஸ்நிதத ஸ்ா ஸ்ா
கே . லோ வுங் . . . . . க	ரா . லோ	பங் . . கருய்
; தரி ஸ்ரீ ; க்ம்க்ரி ரிஸ்ஸ்ா	ஸ்நிதா தாநித பா	பநிதப மகரிக
யா . . லோ செங் . . த . நில்	லா . . . லோ . . .	. . ம . ன . ஸா .
ரிஸ		
. . (மரவகரா)		

சரணம் (5)

; தத ஸ்ா ; ; ரிரி ரீ ;	க்ம்க்ரி ரீ ;	; ஸ்ரிக் ஸ்ரிஸ்
சர மோ கன காம்	ப . ர . மோ	ஸ்ரீ . . கர .
நிஸ்ரிஸ்ரீ ; ததபா மபதரி	ஸ்ாததநி . பா ;	பநிதப மகரிக
யுரமோ . . ப்ரோ . . சு . . .	. துர . மோ	. . ம . ன . ஸா .
ரிஸ		
. . (மரவகரா)		

சரணம் (6)

; மகரிரி மப பமதா ததஸ்நி	தாரிஸ் ரீகம	கரிரிரீ ரிஸ்ஸ்
ஆ . . . ஜன் . ம . மு ஹ்ருத் . .	ரா . . . ஜீ .	. . வமு தோ . .
; ததரி ஸ்ா , ஸ்நிதா நிதபா பமபா	பா பாதநி தபபா	பாதப மகரிக
பூ . . ஜிந் து . . ரா . . த்யா . க	ராஜ . . நு . து	னிம . ன . ஸா .
ரிஸ		
. . (மரவகரா)		

(ஸங்கீத வித்வான் உமையாள்புரம் எஸ். வெங்கடராமையர் இந்தக் கீர்த்தனத்தின் வர்ணமெட்டை உதவினர்.)

ஸ்ரீமதி வை. மு. கோதைநாயகி அம்மாள் எழுதிய

இனிய தமிழ் நாவல்கள்

	ரூ. அ.		ரூ. அ.
வைதேகி	2 8	சுகந்தபுஷ்பம்	1 0
பத்மசுந்தரன்	2 8	கருணாலயம்	1 0
சாருலோசனா	2 8	சாந்தகுமாரி	1 0
காதலின் கனி	2 8	மாய ப்ரபஞ்சம்	1 0
ராதாமணி	2 8	சந்திரமண்டலம்	1 0
தியாகக் கொடி	2 0	கோபாலரத்னம்	0 14
நவநீதகிருஷ்ணன்	2 0	புத்தியே புதையல்	0 14
சாமளநாதன்	2 0	கதம்பமாலை	0 12
ருக்மணிகாந்தன்	2 0	பட்டமோ பட்டம்	0 10
மங்களபாரதி	2 0	மகிழ்ச்சி உதயம்	0 10
சண்பகவிஜயம்	1 12	பிச்சைக்காரக் குடும்பம்	0 8
சௌரீமுகுந்தன்	1 12	ஆனந்தபோகர்	0 8
ஸாரமதி	1 12	வீரவஸந்தா	0 8
தயாநிதி	1 12	நளினசேகரன்	0 8
உணர்ச்சி வெள்ளம்	1 8	மூன்று வைரங்கள்	0 8
சந்தோஷமலர்	1 8	படாடோபத்தின் பரிபவம்	0 8
சோதனையின் கொடுமை	1 8	வத்ஸகுமார்	0 8
ராஜமோகன்	1 4	படகோட்டி	0 8
அநாதைப்பெண்	1 4	மாலதி	0 8
இன்பஜோதி	1 4	ப்ரேமப்ரபா	0 8
வானக்குயில்	1 4	சுடர் விளக்கு	0 6
கஸ்தூரி திலகம்	1 4	பக்ஷமாலிகா	0 6
கானல் நீர்	1 4	மாதவமணி	0 4
புகழ்மாலை	1 4	ஸரஸராஜன்	0 4
கலா நிலையம்	1 4	ஜெயசஞ்சீவி	0 4
ஜீவியச் சுழல்	1 4	சுகுணபூஷணம்	0 4
ஆத்மசக்தி	1 4	அம்ருததாரா	0 4
உத்தமசீலன்	1 4	அன்பின் சிகரம்	0 4
பரிமளகேசவன்	1 4	உளுத்த இதயம்	0 4

தபாற்செலவு, ரயில் செலவு பிரத்யேகம்.

எமது எல்லா ரயில்வே புத்தகசாலைகளிலும், ஏஜண்டுகளிடமும் கிடைக்கும்.

இவைகள் தவிர வியாபாரிகளுக்கும், வாசக சாலைகளுக்கும், பஞ்சாயத்து போர்டுகளுக்கும் கோர்வையான் அகப்படக்கூடிய நாவல்கள் முதலியன ஆர்டரின் பேரில் அனுப்பப்படும்.

மானேஜர்,

"சுதேசமித்திரன்" புத்தகசாலை, சென்னை.

Printed and Published by T.S. Visvanatha Iyer, B.A., at the Swadesamitran Power Press, Mount Road, Madras. Editor, C.R. Srinivasan, B.A.

நவநாகரீகம்

★

ஒரு புடவை

★

காசினி - எழுதியது

* * * 'போன மாஸத்தை விட இந்த மாஸம் புடவை விலை இன்னும் ஏறி இருக்கிறது! இது என்னிக்குத்தான் குறையப்போரதோ? ஈஸ்வரனுக்குத்தான் வெளிச்சம்?' என்று சுலோசனா சொன்னாள்.

'நன்னாய்ச் சொன்னாய்! உன் வாய்க்குச் சக்கரை தான் போடணும்!' என்றாள் லேடி சுந்திராசாரி:

இவள் இப்படி யதார்த்தமாகச் சொன்னாளா, அல்லது கேலியாகச் சொன்னாளா என்பது தெரியாமல் சுலோசனா விழித்தாள். பிறகு:—'எதுக்காக எனக்குச் சக்கரை வழங்கணும்? அதின் விலையும் தான் ஏறிக் கொண்டே வரதே?' என்று கேட்டாள்.

'ஈசுவரனைக் கூப்பிட்டதுக்குத்தான். விலைவாசி நாளுக்கு நாள் ஏறரது. யுத்தம் முடிந்து சமாதானம் ஏற்பட்டு, அப்புறம் எல்லாம் ஒரு நிதானத்துக்கு வர இன்னும் எவ்வளவு நாள் ஆகுமோ? நடுவில் என்ன என்ன நடக்குமோ? எல்லாம் ஈசன் செயல்!' என்று லேடி சுந்திராசாரி பெருமூச்சு விட்டாள்.

'எப்போ பார்த்தாலும் இந்தப் பேச்சுதானா? ஆமாம், புடவை விலை ஏறி இருக்கு என்று சொன்னையே? நீ இன்னும் ஒரு புடவை வாங்கி இருக்காயா என்ன?' என்று லேடி சின்னையாவின் மருமகள் கேட்டாள்.

'ஆமாம், வாங்கினேன்! அதனாலே என்ன இப்போ? இதோ

முதல் பரிசு

புது டில்லியில் நடந்த அகில இந்திய அமெச்சூர் சங்கீத நடனப் போட்டியில் "யங் இந்தியா" கேடயத்தையும் மற்றும் சில பரிசுகளையும் ஸ்வீகரித்த மிஸ் குஸும் யாதவ்.

(என். என். பி. எஸ்.)

காரில் வைச்சு இருக்கேன்!' என்று கூறிவிட்டு, சுலோசனா வாசற்பக்கம் சென்று; புடவைப் பொட்டலத்துடன் திரும்பினாள். புடவை நன்றாகத்தான் இருந்தது.

ஜமக்காளம் மோஸ்தர் புடவை. நல்ல விரலகலத்திற்கு மேலான ஆழ்ந்த கரும் பச்சைப் பட்டி ஒன்று; ஆழ்ந்த சிகப்புப் பட்டி ஒன்று என்று மாறி மாறிப் போட்டிருந்தது. இந்தப் பட்டிகளின் மேல், இலேசான மஞ்சள் வர்ண நூலில் கோத்த மாதிரியில் புள்ளி, புள்ளியான வரிகள் போட்டிருந்தது. இந்த வரிகள் பார்வைக்குப் பூவேலை செய்த மாதிரியில் தூக்கிநின்று, ரொம்பவும் அழகாக இருந்தது. முக்கால் முழ அரக்குத் தலைப்பு; இதிலும் மஞ்சள் பட்டு பூவேலைக் கோடுகளும், சரிகைப் பட்டியுமாகப் போட்டிருந்தது. ஐந்தாறு விரல் அகலமான அரக்குக் கரை; இதில் நெருங்கிய சரிகை நெளிகள் போட்டிருந்தன. ஆறு கஜம் புடவை தான்; விலை நாற்பத்தி மூனு ரூபாய்கள் சொச்சம் ஆச்சுதென்று சுலோசனா சொன்னாள்.

புடவையைத் தொட்டுப் பார்த்துவிட்டு:-'கைக்கு மிருதுப் பட்டு மாதிரியில் இருக்கே! கொர்னாட்டு தினுசாகவும் இருக்கு! இந்தப் புடவை புதிய பாஷனாக, நன்றாகத்தான் இருக்கு!' என்றாள் லேடி சுந்திராச்சாரி.

'போரது! போன வாரம் ஒரு புடவை; இந்த வாரம் ஒரு புடவையா என்று சொல்லாமல் இந்த மட்டும் சொன்னீர்களே? நான் அதிருஷ்டசாலிதான்!' என்றாள் சுலோசனா.

'இவ்வளவு அழகான புடவையை பார்த்த பின், கையில் காசு இருந்தால், வாங்காமல்கூட வீடு திரும்புவாளா என்ன?' என்றாள் லேடி சின்னையாவின் மருமகள், புடவை நிஜமாகவே ரொம்பவும் அழகாகத்தான் இருந்தது.

அவல் கொழுக்கட்டை

நேற்று ஒரு சிநேகிதி வீட்டிற்குப் போயிருந்தேன். கூடத்தில் ஆளைக் காணவில்லை; சமையல்கட்டுப் பக்கத்திலிருந்து கம் என்ற வாசனையும் வீசிற்று; பேச்சுக் குரலும் கேட்டது; சரி என்று உள்ளே சென்றேன்: என் சிநேகிதியும், அவள் பெண்ணும், வேலைக்கார அம்மாவும் மும்முரமாகக் கொழுக்கட்டை பண்ணுவதில் ஈடுபட்டிருந்தார்கள்.

'வாருங்கோ. அப்படி அந்தப் பலகையைப் போடு அலமேலு! மாமி உட்காரட்டும்!' என்று என் சிநேகிதி உபசரித்தாள், ஏதோ பிள்ளையாருக்கு நூற்றெட்டுக் கொழுக்கட்டை பண்ணி நைவேத்தியம் செய்வதாக வேண்டிக் கொண்டிருந்தாளாம். என்னை, இருந்து, பிரசாதம் வாங்கிக் கொள்ளும்படி வற்புருத்தினாள்.

கொழுக்கட்டைகளை மோதகம் மாதிரியில், பெரிசு, பெரிசாகப் பண்ணி இருந்தாள். கடலைபருப்பும், தேங்காயுமாகச் சேர்த்துத் தீச்சுப் பூரணம் செய்வதற்கு பதிலாக, அவலும் தேங்காய்த் துருவலுமாகச் செய்திருந்தாள், இதற்கு, முதலில் அவலை நெல், கல் முதலியவைகள் இல்லாமல் சுத்தமாகப் பொருக்கிக் கொள்ள வேணும். அப்புறம். நிதானமாகத் தீயை விட்டு, ஒரு பானலியில் போட்டு, பொன் போல வருத்துக் கொள்ள வெண்டும். வருத்த சூடுடன் அவலை ஒரு உரலில் போட்டு, ரவை மாதிரியில் நொருக்கிக்கொள்ள வேண்டும். பெரிய தேங்காய் ஒன்றுக்கு ஆழாக்கு அவலுக்கு மேல போடலாம். தேங்காயைப் பூரணம் தீய்க்கும் போது, நொருக்கின அவலையும் கூடப் போட்டு தீய்க்க வேண்டும். ஒரு கை தண்ணீரைத் தெளித்துத் தீய்ச்சால், அவல் மெதுப்பட்டு, பூர்ணம் நன்றாக இருக்கும், அவலுக்கும் சேர்த்து வெல்லம் போட்டு, ஏலப்பொடி தூவி இறக்க வேண்டும். மற்றபடி சாதாரணக் கொழுக்கட்டை மாதிரியே என்று வைச்சுக் கொள்ளேன், இது மணமாகவும் ருசியாகவும் இருப்பதுடன் கடலைப் பருப்பை அரைக்கும் சிரமமும் கிடையாது. மேலும் உடம்புக்கும் வலுவு கொடுக்குமாம். செய்து பாரேன்.

தயிரின் குணம்

சில நாட்களுக்கு முன் ஏதோ காரியமாக லேடி சின்னையாவின் வீட்டிற்குப் போயிருந்தேன். பேச்சு சாப்பாட்டில் திரும்பிற்று. 'வேணி, இளைக்கணும் என்கிறாளே ஒழிய, எருமைத் தயிரை விடமாட்டேன் என்கிறாளே!' என்றாள் லேடி சின்னையா. இதிலிருந்து, இவள் தயிர், மோர்களின் குணத்தை விவரமாகச் சொன்னாள். உனக்கும் தெரியட்டுமே என்று எழுதி இருக்கேன்.'

எருமைத் தயிர் குளிர்ச்சி, ஆனால் வாத ரோகம் வரும்; உடம்பு பெருக்கும்; புத்தி மங்கும். வெள்ளாட்டுத் தயிரால் உஷ்ணம் அதிகமாகும். பசுவின் தயிர் தான் ரொம்பவும் நல்லதாம். பசி எடுக்குமாம். ஆயாசம் நீங்குமாம். உடம்பு எரிச்சல் தணியுமாம். இன்னும் ஒட்டகையின் தயிரைச் சாப்பிட்டால் பசி எடுக்குமாம். சரீரம் மேனியிட்டுக் காணுமாம். ஆனால் நடுவிலே ஒருவித சொறி சிறங்கும் உண்டாகுமாம்! இன்னும் மோரின் குணம், பலவகைப் பால்களின் குணம் என்று அடுக்கிக்கொண்டே போனாள். கடைசியில் பசுவின் பாலே நல்லது என்று முடித்தாள். ஏதோ ஒரு புஸ்தகத்தை சமீபத்தில் படித்திருக்கிறாள் என்று ஊகிக்கிறேன்: யானைப்பால், பாலுடன் தேன் கலந்த ருசியாக இருக்குமாம். பலம் உண்டாகுமாம்; அழகிடுமாம். ஆனால் கூடவே பித்தத்தையும் தூக்குமாம்; 'அழகு உண்டாகுமானால் பித்தம் குறைய இரண்டு எலுமிச்சம் பழத்தை சாப்பிட்டால் ஆச்சு!' என்கிறாள் அவள் பெண்.

குலதனம்

போலக் கேசதனமும், சில குடும்பங்களில் பாரம்பரையாக வருவதுண்டு. கேசதனம் படைத்தவர், அது நஷ்டமாகாமல் கேசவர்த்தினியைக்கொண்டு காப்பாற்றுங்கள். படைக்காதவர் கேசவர்த்தினியைக்கொண்டு அதை அடையுங்கள். சிறுவயது முதல் கேசவர்த்தினி ஒன்றையே உபயோகித்துவருவதால், இளநரை வழுக்கைகளைத் தடுத்துக் கேச ஆரோக்கியத்தையும் கேச சம்பத்தையும் தவறாமல் பெறுங்கள்.

மெலிந்து இளைத்த சிறுவனும் தேகப்பயிற்சி ஆகாரங்களால் பருத்து அழகிய சதைக்கட்டைப்பெறுவதுபோல, அற்ப கூந்தல் படைத்தவரும் கேசவர்த்தினியைக்கொண்டு அபரிமிதமான கூந்தலைப் பெறலாம்.

குழந்தையின் கூந்தலைக் கேசவர்த்தினிகொண்டே விருத்தி செய்யுங்கள்.

கேசவர்த்தினி

கூந்தலைக்காப்பது. விருத்தி செய்வது, அழகுபடுத்துவது விலை அணா 12; மேற்செலவு வேறு. எல்லாக்கடைகளிலும் கிடைக்கும்.

தயாரிப்பவர்:

தென் இந்திய ரஸாயன சாலை, ஆர். எஸ். புரம் - கோயமுத்தூர்.

தமிழபிமானிகளுக்கும் — அன்பர்களுக்கும்

தமிழில் சுவை ததும்பும் நூல்களையாவும்

காரைக்குடி, நியூ டவுன், அல்லயன்ஸ் கம்பெனி

கிளை ஆபீசில்

சென்னை விலைக்கே கிடைக்கும்.

(வேண்டுவோருக்கு புத்தக விலைப்படி அனுப்பப்படும்.)

அல்லயன்ஸ்கம்பெனி, மயிலாப்பூர், சென்னை

சித்திரமும் சிருங்.காரமும்

★

தமிழறியும் பெருமாள் — தமிழ் நாட்டில் தோன்றிய பண்டிதை — ரஸமான வரலாறு — "கிப்ஸ்" — வெல்ஸ் எழுதிய நவீனம் — பிறவி முதல் — ரெட் க்ரேவின் நடிப்புத் திறமை — ஆஸ்திரேலிய ஸினிமாக்கள் — தடங்கலின்றி நடக்கின்றன — கெட்டிக்கார கணவன் — சில காதற் கட்டங்கள் — நேஷனல் ஸ்டுடியோ செய்தி.

ஸ்ரீமதி எம்.எஸ்.தேவஸேனு

"தமிழறியும் பெருமாள்" என்ற படத்தில் மரகத வடிவு வேஷத்தில் நடிக்கிறார்.

கெட்டிக்கார கணவன்

ஜீன் டார்னி காதல் கட்டக்களில் மிகவும் நன்றாக நடிக்கிறாள் என்று பெரிதும் சந்தோஷப்பட்ட டைரக்டர்களுக்கு அவள் மிகவும் ரகஸியமாகத் தனது பாகத்தை ஒத்திகை செய்து வருவது தெரியவே தெரியாது.

டைரோன் பவருடன் "ஸன் அப் ப்யூரி" என்ற படத்தில் நடிக்கும் ஜீன் டார்னி, மிகவும் சிறப்பாக நடித்ததாகக் கூறி டைரக்டர் ஜான் க்ராம்வெல் அவளைப் பாராட்டினார்.

இந்தக் காட்சியைக் கவனித்துக்கொண்டிருந்த ஜீன் டார்னியின் கணவன் கவுண்ட் அலக்ஸாஸினி, "அவள் நன்றாக நடிப்பாள்" என்றார்.

"ஆம்!" என்றார் கிராம் வெல்.

"அது நிச்சயம்தான். தினமும் பாதி ராத்திரி வரை என்னை வைத்துக்கொண்டு அவள் ஒத்திகை நடத்துகிறாள்: நான் டைரோன் பவர் ஸ்தானத்தில் இருக்க நேர்கிறது. ஒரு மாதத்திற்கு முன்பு நான் விக்டர் மச்சூராகவும், அதற்கு முன்பு அலக்ஸாண்ட் ஸ்காட்டாகவும், பிறகு ஹென்ரி பாண்டாகவும் அவளுக்காக நடித்தேன்" என்றார்.

* * *

மற்றும் சில

ஒரு நிமிஷத்தில் படங்களில் காதல் ஏற்படுவதைப்பற்றி முன்பொரு வாரம் குறிப்பிடப்பட்டிருக்கிறது. இதற்கு ஆதாரமாக மற்றுமிரு சம்பவங்களைக் கீழே காணலாம்.

"ரெய்ன் அண்ட் ஸன்ஷைன்" என்ற படத்தில் தமது காலேஜ் புரொபஸரின் ஆலோசனையை நாடுகிறான் ஜார்ஜ் மர்பி. புரொபஸரின் புத்திரி—லிண்டா டார்னல்—அச்சமயம் தகப்பனாரின் அறைக்குள் வருகிறாள். இதற்கப்புறம் என்ன நேரும்? காதல் தவிர வேறு என்ன! இருவரும் காதலில் வீழ்ந்து விடுகின்றனர்.

"ஜான்னி ஈகர்" என்ற படத்தை எடுத்துக் கொள்வோம். இதில் நடிக்கும் ராபர்ட் டேலர் ஒரு மாஜி கைதி: போலீஸாரிடம் தன் அன்றாடத் தகவலை யறிவிக்க அவன் வருகிறான், அவன் வந்த சமயம் உத்யோகஸ்தரின் குமாரியும் அந்த இடத்திற்கு வருகிறாள். குமாரியாக நடிப்பவள் லானா டார்னர். இருவரும் ஒருவரை யொருவர் ஒரு முறை பார்க்கின்றனர், இருவரது உள்ளமும் ஒன்று படுகிறது. குற்றவாளியாயிருந்தால் காதல் போய் விடுமா?.

* * * *

நேஷனல் ஸ்டுடியோ

ஸமீபத்தில் பம்பாய் நேஷனல் ஸ்டுடியோவுக்கு கவர்னர் மே. த. ஸர் ரோஜர் லம்லியும் லேடி லம்லியும் விஜயம் செய்தனர். ஸ்டுடியோ டைரக்டர்களது போர்ட் தலைவர் ஸர் ரஹிம்துல்லா சினுயும் டைரக்டர் ஸ்ரீ பஸல்பாயும் அதிதிகளை வரவேற்று உபசரித்தனர். புலர் அறிமுகமாக்கப்பட்ட பின்பு அவர்கள் ஸ்டுடியோ முழுதும் போய்ச் சுற்றிப் பார்த்தனர்: எல்லாவற்றையும் மிகுந்த சிரத்தையுடன் அவர்கள் கவனித்தனர், விமானப்படை யெடுப்பை பாதுகாக்க உள்ளே செய்யப்பட்டிருந்த ஏற்பாடுகள்தான் முக்கியமாக அவர்களது கவனத்தைக் கவர்ந்தது. பிரசாரப் படப் பிடிப்பு வேலையையும் அவர்கள் பார்த்தனர், ஆனால் மாலையில் ஒரு மணி நேரத்திற்கு முன்பு கவர்னர் தம்பதிகள் ஸ்டுடியோவுக்கு விஜயம் செய்தது படம் பிடிக்கப்பட்டது, சினிமாக்களில் காட்டப்பட்டது, எல்லோருடைய ஆச்சர்யத்தையும் சம்பாதித்தது.

* * * *

"கிப்ஸ்"

பிரபல நவீனகர்த்தரான எச். ஜி. வெல்ஸ் என்பவர் எழுதிய புத்தகங்களுள் அதிகப் பிராபல்யம் பெற்றிருப்பது "கிப்ஸ்" என்ற நூல் தான். இந்தக் கதையை இப்போது இருபதாம் நூற்றாண்டு பாக்ஸ் கம்பெனியார் படம் பிடித்திருக்கின்றனர். மைக்கேல் ரெட்க்ரேவ், டையானா வினியார்ட், பில்லிஸ் கால்வர்ட் முதலியோர் இதில் நடிக்கின்றனர்.

இந்தக் கதையில் மிஸ்டர் வெல்ஸ் சிருங்கார ரஸத்தை மிகவும் தெளிவாகக் கையாண்டிருக்கிறார். இந்தப் புத்தகம் 1905-ம் வருஷம் எழுதப்பட்டது. அப்போது அநேகர், ஆசிரியர் தமது சுய சரிதையையே இவ்விதம் கதா ரூபமாக எழுதியிருக்கிறார் என்று எண்ணியதுண்டு. இப்புத்தகம் பிரசுரமான சமயம் மிஸ்டர் வெல்ஸ் எழுதிய புத்தகங்களின் அபிமானிகள் இரு பகுதிகளாகப் பிரிந்தனர்: ஒரு சாரார் அவர் இம்மாதிரி மேலும் மேலும் காதற் கதைகளை எழுதுவது தான் தகும் என்றனர்: மற்றொரு சாரார் அவர் முன்போலவே சிந்தா சக்தியை உபயோகித்து, வருங்காலத்தைப்பற்றி ஹேஷ்யமயமான பல கட்டுரைகளையும் கதைகளையும் எழுதி மனதை மகிழ்வுறச்செய்ய வேண்டும் என்றனர். ஆனால் "கிப்ஸ்" என்ற புத்தகம் பிரசுரமானது முதற்கொண்டே, மனுஷ ஸ்வபாவத்தையும் உணர்ச்சிகளையும் மிஸ்டர் வெல்ஸ் நன்கு அறிந்தவர் என்பது விசதமாகியது. முக்கியமாக இந்த "கிப்ஸ்" கதையில் தனது நேர்மையான நடத்தையும் பழைய கால நிலையும், வினயமும் தான் இறுதியில் ஒருவனுக்கு உதவும் என்பதை ஆசிரியர் வெகு நேர்த்தியாக எடுத்துக் காட்டியிருக்கிறார்,

இந்த படத்தைத் தயாரித்தவர் எட்வர்ட்ப்ளாக்: சினிமாவுக்காக கதையைத் திருத்தியவர் ஸிட்னி இல்லியாட்: இதை டைரக்ட் பண்ணிவர் கரோல் ரீட்.

இந்த படத்தின் ஸாரம் வருமாறு, ஆர்தர் கிப்ஸ் (மைக்கேல் ரெட்க்ரேவ்) சிறுவனாயிருக்கும்போதே ஒரு கடையில் பயிற்சி அளிக்கப்படுகிறான். அவன் வீட்டை விட்டுபுறப்படும் முன்னர் ஆன் போர்னிக் என்றசிறுமி (பில்லிஸ் கல்வர்ட்) அவனுக்குத்தன் அன்பின் அறிகுறியாக ஒரு சிறு நாணயத்தைத் தருகிறாள், வயது முதிர்ந்த பின் கிப்ஸ் தனது உபாத்யாயினி ஹெலனை (டையானாவினியார்ட்)க் காதலிக்கிறான்: அவள் அவனை உண்மையில் காதலிக்கவில்லை: ஒரு நாள் இரவு தனது நண்பனான சிட்டர்லோ என்றநடிகருடன் கிப்ஸ் சேர்ந்து குடித்து உல்லாஸமாகக் காலத்தைக் கழிக்கிறான், இது காரணமாக அவன் தனது உத்தியோகத்தை இழக்க நேரிடுகிறது. பிறகு சிட்டர்லோ பத்திரிகையொன்றில் பிரசுரமாகியிருக்கும் ஒரு செய்தியை கிப்ஸிடம் காட்டுகிறான். இதன் மூலம் தான் ஒருபெரிய சொத்துக்கு வார்சாகியிருப்பது கிப்ஸுக்குத் தெரியவருகிறது. கிப்ஸ் பணக்காரனாகி விட்டான் என்பதையறிந்ததும் ஹெலன் தனது மனோநிலையை மாற்றிக் கொள்கிறாள். இருவரும் விவாகம் செய்து கொள்ளவும் நிச்சயிக்கின்றனர். ஹெலனின் சகோதரனிடம் தன் சொத்து நிர்வாகத்தை கிப்ஸ் ஒப்படைக்கிறான். ஒரு நாள் ஒரு விருந்தில் கிப்ஸ் ஆன் போர்னிக்கைச் சந்திக்கிறான். உடனே கிப்ஸ் அவளை உண்மையில் காதலிக்கிறான். இருவரும் அங்கிருந்து கிளம்பி ஒருவரும் அறியாமல் விவாகம் செய்து கொள்கின்றனர். பண விஷயத்தில் கிப்ஸ் காட்டும் தாராளமும் ஆன் கொள்ளும் சிக்கனக் கொள்கையும் தகராறையே விளைவிக்கிறது: விவாகம் பரிதாபகரமாக முடியும் ஸ்திதியையும் எட்டுகிறது. இந்த சமயத்தில் ஹெலனின் சகோதரன் பணத்தை யெல்லாம் செலவழித்து விட்டு கிப்ஸைத் துறக்கிறான். கிப்ஸிடம் பணம் கிடையாது. இவ்வாறு கிப்ஸ் வருத்தப்பட்டுக்கொண்டிருக்கும்போது சிட்டர்லோ அவன் உதவிக்கு வருகிறான். கிப்ஸ் கொடுத்த சொற்ப பணத்தைக் கொண்டு சிட்டர்லோ நடத்தும் நாடகம் அமோகமான வெற்றியடைகிறது. இதற்கு நல்ல பணம் கிடைக்கிறது. பிறகு கிப்ஸும் ஆனும் ஒரு சிறிய தொழிலை ஆரம்பித்து சந்தோஷமாக வாழ்க்கையை நடத்துகின்றனர்,

இந்தப் படம் விரைவில் நியூ க்ளோப் தியேட்டரில் காட்டப்படும்.

* * * *

பிறவி முதல்

அதி பால்யத்திலேயே நடிப்புத் தொழிலில் சேர்ந்தவர் மைக் கேல் ரெட்க்ரேவ் தான். இந்த விஷயத்தில் இவருடன் யாரும் போட்டியிட முடியாது: தற்சமயம் சினிமா அபிமானிகளால் பெரிதும் கொண்டாடப்படும் மைக் கேல் ரெட்க்ரேவ் தமது இரண்டாம் பிராயத்திலேயே நடிக்க வாரம்பித்து விட்டாராம்.

இவரது தாயாரும் தகப்பனாரும் நடிகர்கள்: பாட்டனார் சிறந்த நாடகங்களை எழுதுவதில் நிபுணர். கேம்பிரிட்ஜில் சேர்ந்து வித்யாப்யாஸம் ஏற்ற பின் மைக்கேல் நடிப்புத் தொழிலில் அவ்வளவாக நாட்டம் கொள்ளவில்லை. வேறு உத்யோகம் ஏற்பதையே அவர் எதிர் பார்த்தார். க்ரான்லியில் இருக்கும் பிரசித்தி பெற்ற பள்ளிக்கூடத்தில் அவர் போதகாசிரியராக அமர்ந்தார். இங்கு இருக்கும்போது நாடகக் கலையையும் இயன்றவளவுக்கு வளர்த்து வந்தார்: காலக்ரமத்தில் நாடகத்திலேயே இவரது புத்தியும் மனமும் லயித்து விட்டன: உபாத்தியாயர் தொழிலில் இருந்த மோஹம் மறையலாயிற்று. "லிவர்பூல் ரிபர்டரி கம்பெனி" யில் இவர்சேர்ந்துகொண்டார்.

பல ஆண்டுகள் பல நாடகங்களில் நடித்த பின்பு வெஸ்ட் எண்டில் இருக்கும் ஜான் ஜில்கட் ஸ்டாக் கம்பெனியாரிடமிருந்து இவருக்கு அழைப்பு கிடைத்தது. இந்தக் கம்பெனியாருக்காக நடிக்கும்போதுதான் சில சினிமா கம்பெனிக்காரர்கள் இவரது நடிப்புத் திறமையைக் கண்டு இவரை சினிமாவில் சேர்த்துக் கொள்ள முன் வந்தனர், பிறகு "ஸ்டோலன்லைப்" "தி லேடி வானிஷஸ்," "தி ஸ்டார்ஸ் லுக் டவுன்" என்ற படங்களில் காட்டியதற்கு அதிகமான திறமையை அவர் "கிப்ஸ்" படத்தில் காட்டியிருக்கிறார்.

* * * *

ஆஸ்திரேலிய ஸினிமாக்கள்

இந்திய ஸினிமோடாக்ராப் ரெண்டர்ஸ் சொஸைடியார் பின் கண்டபடி அறிவிக்கின்றனர்.

'சமீபத்தில் அகில இந்தியா ரேடியோ மூலமாகவும் சில பத்திரிகைகள் வாயிலாகவும் ஆஸ்திரேலியாவில் ஸினிமாக்கள் மூடப்பட்டதாக அறிவிக்கப் பட்டது.

சென்னை மாஜி சுகாதார மந்திரி டாக்டர் ராஜனுடைய சகோதரி பேத்தி பேபி மாலதி சமீபத்தில் ஸ்ரீரங்கத்தில் பரதநாட்டியக் கச்சேரி யொன்றை நன்கு நடத்தினாள்.

ஆஸ்திரேலிய பிரதம மந்திரி மிஸ்டர் ஜான் கர்டினுடைய பிரசங்கத்திலிருந்தே மேற்படி கூற்று ஊஹிக்கப்பட்டிருக்கிறது. பிலிம் தொழிலின் நன்மையை உத்தேசித்து கினிமோடாக்ராப் ரெண்டர்ஸ்சொஸைடியார் ஆஸ்திரேலியாவுக்கு அனுப்பிய தந்திக்குப் பின் கண்ட பதில் கிடைத்திருக்கிறது.

"சினிமாக்கள் மூடப்படவில்லை. இது விஷயமாக நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு தற்சமயம் அவசியமும் இல்லை எனத் தெரிகிறது—மோஷன் பிக்சர்ஸ் அஸோஸியேஷன்—ஸிட்னி"

இதிலிருந்து ஆஸ்திரேலியாவில் சினிமாக்கள் மூடப்படாதது ஸ்பஷ்டமாகும்.

யுத்தம் ஆரம்பமானதும் இங்கிலாந்தில் ஸினிமாக்கள் மூடப்பட்டு, பிறகு சீக்கிரத்திலேயே அவை மறுபடியும் திறந்து விடப்பட்டதும் யாவரும் அறிந்ததே. தற்சமயம் யுத்த நெருக்கடியால் ஜனங்களுக்கு ஏற்பட்டிருக்கும் கவலையை அகற்றவல்லது சினிமா தான் என்பதை அனைவரும் ஒப்புக்கொள்வர்.

* * * *

தமிழறியும் பெருமாள்

பாடலீபுரத்திற் கரசனான பத்ரகிரிமான் தன் குமாரன் சந்தணன் கல்வியறிவில்லாதவனாக இருக்கவே அவனை நாட்டைவிட்டுத் துரத்துகிறார். துரத்தப்பட்ட ராஜகுமாரனோ பல கஷ்டங்களை அநுபவித்து முடிவில் அளகாபுரியை அடைகிறான். அவ்வூர் வீதிகளைச் சுற்றி வருகையில் உப்பரிகையில் தன் தோழிகளுடன் விளையாடிக்கொண்டிருந்த அவ்வூர் ராஜகுமாரி ஏலங்குழலியை அவன் கண்டு தயங்க, அவளும் அவனைக் கண்டு மயங்குகிறாள். ராஜகுமாரி உடனே தன்னை அன்றிரவு அவ்வூர் சாவடியில் சந்திக்குமாறு ஒரு ஓலையில், எழுதி அவனிடம் அதை வீசியெறிகிறாள். ராஜகுமாரன் அதை எடுத்துக் கொண்டு போகிறான். பின்னர் ராஜகுமாரன் ஒரு குஷ்டரோகியிடம் அந்த ஓலையைக் காட்டி, அதிலெழுதியிருப்பதைப் படித்துக் கூறுமாறு கேட்கிறான், அந்த ரோகியும் துர்ப்புத்தியுடன் "ராஜன் மகள் அவனைக் கொன்றுபோடக் கூறியிருப்பதாக" எழுதியிருக்கிறாள் என்று கூறவே, சந்தனகுமாரன் பயந்து ஓடிவிடுகிறான். பிறகு குஷ்டரோகி ராஜமாரி குறித்த நேரத்தில் அந்த சாவடிக்குச் சென்று ராஜகுமாரனைப்போல் நடிக்க, அவனைச் சந்திக்கவந்த ஏலங்குழலி உண்மையைஅறிந்து உயிரை விடுகிறாள். இந்த விவரத்தை எப்படியோ யூகித்துணர்ந்த ராஜகுமாரனும் அதே சாவடிக்கு வந்து தனது ஜீவனையும் விடுகிறான். அகால மரணமடைந்ததன் காரணமாக, இருவரும் பிசாசாக மாறிவிடுகின்றனர்.

சில தினங்களுக்குப் பின் ஒளவையார் அந்த சாவடியில் தங்க, இந்த இரு பைசாசங்களும் அவரை மிரட்டின. ஒளவையார் அவற்றிற்கு உண்மையைக்கூறி மறு பிறவியில் அவர்களிருவரும் தம்பதிகளாகும் பாக்யம் கிட்டும் என்று கூறிச்செல்கிறார்... ஆகவே ஏலங்குழலி, சோழநாட்டரசன் கரிகாலனின் அபிமான தாசியாகிய மரகதவடிவின் மகளாகப் பிறக்கிறாள். சண்பக வடிவு என்ற பெயரும் அவளுக்கு இடப்படுகிறது.சந்தனகுமாரனோ, மரகதவடிவின் தோட்டக்காரன் முருகனுடைய தம்பி மகனாகப்பிறக்கிறான். இவனுக்கு முனியன் என்று பெயரிடப்படுகிறது.

சண்பகவடிவும், முனியனும் இணைபிரியாதிருப்பதைக் கண்ட மரகதவடிவு கோபங்கொண்டு தோட்டக்கார முருகனை அவன் குடும்பத்துடன் வெளியே துரத்திவிடுகிறாள். இதனால் முனியன்—சண்பகவடிவு சிநேகம் சமாப்தி யடைகிறது. பிறகு சண்பகவடிவு கல்வியில் மிகுந்த பாண்டித்யமுடையவளாகிறாள்.

ஒரு நாள் சோழன் சமஸ்தானத்தில் சண்பகவடிவின் பாண்டித்யம் பரீக்ஷிக்கப்பட்டு, அப்பரீக்ஷையில் அவள் வெற்றி பெறுவதுடன் அரசனிடம் "தமிழறியும் பெருமாள்" என்ற பட்டத்தையும் பெறுகிறாள். மேலும் தன்னை வாதத்தில் ஜயிப்பவனே தனக்கு கணவனாவானென்றும், வாதத்தில் தோற்பவர்களைத் தன்னிஷ்டப்படி தண்டிக்கத் தனக்கு உரிமையளிக்கவேண்டுமென்றும் கோருகிறாள் சண்பகம். அரசனும் இதற்கு சம்மதித்து அவளுக்கு இதற்கென பிரத்தியேக அரண்மனையொன்றையும் கட்டித் தருகிறான். பல வித்வான்களும், ராஜகுமாரர்களும் சண்பகத்தை மணக்க வந்து, வாதத்தில் தோற்று அவமான மடைகிறார்கள்.

இது நிற்க, வாலிப பருவமடைந்த முனியன் விறகு வெட்டி தனது ஜீவனத்தை நடத்துகிறான்......

மற்றொரு நாள், மேதாவி யென மமதைகொண்ட தமிழறியும் பெருமாள் தன் தோழியருடன் கோயிலுக்குப் போகும்போது, வழியில் விறகுடன் வரும் முனியனைக் காணகிறாள்: அவனை வெறுத்து, காரியும் உமிழ்கிறாள். இதனால் ஆத்திரங்கொண்டு முனியன் தமிழறியும் பெருமாளைத் தான் எப்படியாவது மணப்பதாக மன உறுதி கொள்கிறான். அவளிடம் அவமானமடைந்தவர்களும், அவளிடம் அசூயைகொண்டவர்களுமாகச் சேர்ந்து, முனியனை அவளிடம் அனுப்புகின்றனர்: கல்வியறிவில்லாத அவனை அவள் அவமானப்படுத்தித் துரத்துகிறாள். அதுமுதல் முனியன் கல்விச் செல்வத்தை சம்பாதிக்க சிரமப்படுகிறான். ஆனால் பூர்வ ஜென்ம வினை அம்முயற்சி பலனடைவதைத் தடுக்கிறது. இதற்கப்புறம் ஒரு வித்வானின் ஆலோசனைப் பிரகாரம் தன் அபீஷ்டத்தை நிறைவேற்ற வேண்டி, மதுரைத் தமிழ் சங்கத் தலைவரான நக்கீரதேவரைச் சந்தித்து, தன் ஆவலைப் பூர்த்தி செய்விக்குமாறு அவரிடம் கெஞ்ச, அவரும் அதற்கிரங்கி, முனியனுடன் புறப்பட்டு உறையூரில் தமிழறிவாளின் அரண்மனையை அடைகிறார். முனியனை வாயிலில் நிற்க வைத்து விட்டு நக்கீரர் விறகு தலையன் வேஷத்தில் உள்ளே போய், தமிழறியும் பெருமாளை வாதத்தில் வெல்கிறார். இவ்விதம் தோல்வியுற்ற தமிழறிவாள் அவமானம் பொறுக்காது தற்கொலை புரிந்து கொள்கிறாள்.

(பின்பக்கம் பார்க்க)

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் ஒரு ஜாதகம் கணிக்க ரூ.2. நேரில் ஒரு ஜாதகம் பார்க்க ரூ.5. மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ.5. ஆரூடம் 3கேள்விகளுக்கு ரூ. 1 மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை. பண்டித காழியூர் ம. ஸ்ரீனிவாஸாச்சாரியார், 58, லஸ் சர்ச் ரோடு, மைலாப்பூர், மதராஸ்.

உண்மை உறுதிக்கும் உத்திரவாதம்.

—:—

"ஷண்முகம் பிராண்டு" ஸ்டீல் டிரங்கு & சூட்கேஸ்கள்

தேவைக்கு வேண்டிய புது மாதிரி தினுசுகளில் கிடைக்கும்.

ஷண்முகம்பிராண்டு ஸ்டீல்டிரங்குஒர்க்ஸ்

தயாரிப்பவர்:- சி. ஞானசுந்திர நாயகர், P. 3094, 341. எஸ்பிளநேட், மதராஸ்

'ஹரிஜன்' கட்டுரை

சுதந்திர இந்தியாவில்

மஹாத்மா காந்தி கருத்து

சுதந்திர இந்தியாவில் பிரிட்டிஷாருக்கும் வெளி நாட்டினருக்கும் இடமுண்டா?" என்று கேட்டு வான்கூவரிலிருந்து (கானடா) ஒரு நிருபர் எழுதியுள்ள கடிதத்துக்கு மகாத்மாஜி "ஹரிஜன்" பத்திரிகையில் பதில் தந்திருக்கிருர். அவர் கூறியிருப்பதாவது:—

என்னுடைய பாரமார்த்திகத்துக்கும்—இது வாஸ்தவமாகவே என்னிடமிருந்தாலும் சரி அல்லது இருப்பதாக எண்ணப்பட்டாலும் சரி—மேற்படி பிரச்னைக்கும் எவ்விதச் சம்பந்தமுமில்லை. சுதந்திர அமெரிக்காவிலோ அல்லது சுதந்திர பிரிட்டினிலோ இப்பிரச்னை ஏற்படவில்லை. ஆகவே இந்தியா உண்மையில் சுதந்திரம் பெறுகையிலும் இப்பிரச்னை எழாது. ஏனெனில் அப்பொழுது இந்தியா தன்னிஷ்டப்படி நடந்து கொள்ளலாம். இதில் யாரும் குறுக்கிடமாட்டார்கள். ஆனல் சீக்கிரத்திலேயோ அல்லது சிறிது காலம் கழித்தோ இந்தியா சுதந்திரம் அடைந்துவிட வேண்டுமாதலால் மேற்படி பிரச்னையைப்பற்றி விசாரணை செய்வது நல்லதே. இந்தியக் கொள்கைகளை வகுப்பதில் எனக்கு ஏதாவது அதிகாரமிருந்தால் அன்னியரை நான் தாராளமாக வரவேற்பேன்; ஆனல் இதில் ஒரு நிபந்தனை; அவர்கள் இதுவரையில் செய்திருப்பது போல் நாட்டைச் சுரண்டவோ அல்லது தரித்திரமாக்கவோ அனுமதிக்கப்பட மாட்டார்கள்.

சுதந்திர இந்தியா வேறு என்ன விதமாக நடந்து கொள்ளுமோ, அதைப் பொறுத்துத்தான் பார்க்க வேண்டும். அஹிம்ஸையையே இந்தியா மேலும் பின்பற்றிவந்தால் ஐரோப்பாவிலுள்ள சிறிய நாடுகள் திக்கற்ற நிலைமையில் தவிப்பது கண்டு பயப்பட வேண்டிய அவசியமில்லை. ஏனெனில் அஹிம்ஸா தர்மத்தை அனுஷ்டிக்கும் ராஜாங்கம் தன்னுடைய பரந்த விஸ்தீரணம் கண்டும், வெளிநாட்டு ஆக்ரமிப்பு ஏற்பட்டால் அதை எவ்வாறு சமாளிப்பதென்பது குறித்தும் கவலைப்பட வேண்டியதில்லை. இத்தகைய ராஜாங்கம் வெளியாரின் தாக்குதலிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்காகப் பணம் செலவழிக்க வேண்டியதில்லை. இத்தகைய ராஜாங்கம் ஏற்படுமா என்பது நியாயமான கேள்வி. தனிப்பட்டவர்கள் மனதினல் சிந்திக்க முடியாத காரியங்களையெல்லாம் செய்வதில்லையா? அதே மாதிரி தேசங்களுக்கும் முடியும்.

ஏது எப்படியிருந்த போதிலும் இந்தியர் போதியளவுக்கு ஆதரவளிக்கவில்லையே என்பதற்காக நான் என்னுடைய நம்பிக்கையையும், முயற்சியையும் விட்டு விடப் போவதில்லை. இவற்றை விட்டு விடுவதாயின் இந்திய சுதந்திரத்தைப் பெறும் முயற்சியையே விட்டுவிடலாமே. ஏனெனில் இந்தியா பூராவும் ராணுவமயமாகப் பலநூற்றுண்டுகளாகுமென்று பலர் சொல்லுகின்றனர். இத்தகைய இயக்கத்துக்கு நான் இடம் கொடுக்க மாட்டேன். "சுதந்திரம் இந்தியாவின் பிறப்புரிமை; அதை அடைந்தே தீருவோம்" என்று லோகமான்யர் கர்ஜித்ததை நாம் மறக்க முடியாது. லக்ஷியத்தை அடையும் முயற்சிதான் முக்கியம், லக்ஷியத்தை அடைவது முக்கியமல்ல; சுத்த அஹிம்ஸையைப் பின்பற்றுவதன் மூலம் லக்ஷியத்தை அடைய முடியுமென்பதே எனது ஆழ்ந்த நம்பிக்கை. அஹிம்ஸையின் மஹத்தான சக்தியை யாரும் இன்னும் கண்டறியவில்லை. அந்தத் தர்மத்தை நாம் பற்றியிருக்கிறோம்! அவ்வளவுதான். விடா முயற்சியைக் கைகொண்டால் நித்தியானந்தமளிக்கக்கூடிய பல அற்புதங்களைக் காணலாம். உழைப்புக்குத் தகுந்த பலனே கிட்டும்; நன்ருக உழைத்தால் பயனும் நன்ருகவே இருக்கும்.

* * * *

'நால்வர் கருத்தும் ஒன்றே'

'காங்கிரஸ் தலைவர்களின் அபிப்பிராயங்களில் ஏகப்பட்ட பேதங்கள் காண்கின்றன. ஸர்தார் படேல் ஒன்று சொல்கிருர்; ராஜாஜி ஒரு விதமாகப் பேசுகிருர்; மௌலானு ஆஸாத் கூறுவது வேருென்ருயிருக்கிறது; ஜவஹரோ இவையெல்லாவற்றிற்கும் வித்தியாசமானதைச் சொல்லுகிருர். இவர்களைத் தவிர சிறிய தலைவர்களைப்பற்றிக் கேட்கவே வேண்டியதில்லை. யார் சொல்வதைப் பின்பற்றுவது? காங்கிரஸின் கருத்தைச் சரியாக எடுத்துரைப்பவர் யார்?" என்று காந்திஜியை ஒரு நிருபர் கேட்டிருந்தார்.

அக்கேள்விக்கு மகாத்மாஜி 'ஹரிஜனில்' பதில் எழுதியதாவது:—

சட்டப்படித் தலைவர் வார்த்தையே அதிகாரமுள்ளது. காரியக் கமிட்டி அங்கத்தினர்களில் பெரும்பாலோருக்கும் தலைவருக்கும் அபிப்பிராயபேதமேற்பட்டால் அப்பெரும்பான்மை அங்கத்தினர்களின் கருத்தே செல்லும். இம்மாதிரி முன்னெரு தடவை நடந்திருக்கிறது.

ஆனல் நெருக்கடியான சமயங்களில் அதிகாரம் பெற்றுப் பேசுவோர் வார்த்தை ஏறுவதில்லை. சிற்சில ஜனங்களுக்குச் சிற்சில தலைவர்களிடம் அபாரமோஹம். அத்தலைவர்களையே கண்ணை மூடிக்கொண்டு அந்த ஜனங்கள் பின்பற்றுவர்.

அஹிம்ஸை சம்பந்தமான சிக்கலான பிரச்னை பற்றி என் புத்திமதி என்னவெனில் ஒவ்வொருவரும் அவரவர் அந்தரங்க சுத்தியான கருத்துப்படி நடக்க வேண்டும். மேற்கூறிய நான்கு பிரபல தலைவர்களும் கலந்து பேசினல் நால்வரும் ஒரே அபிப்பிராயத்தைத் தான் தெரிவிப்பார்கள். ஆனல் அவர்கள் செய்யும் பிரசங்கத்தில் மட்டும் சிற்சில அம்சங்கள் அவரவருடைய மனேபாவப்படி விசேஷமாக வற்புறுத்தப்படும்.

(முன் பக்கத் தொடர்ச்சி)

ஆனல், அரசன் கரிகாற் சோழன் வேண்டுதலின் பேரிலும், தன் வாக்கை பூர்த்தி செய்யவும், 'புலவர் நக்கீரர், தமது சக்தியால், தமிழறிவாளை மறுபடியும் உயிர்ப்பிக்கிருர். பிறகு அவளுடைய பூர்வ ஜன்மத்தின் வரலாற்றை அவர் அரசன் முதலானேருக்குத் தெரிவிக்கவே யாவரும் ஆச்சரியப்படுகிருர்கள். கடைசியில் சந்தன குமாரனுக்கும் (முனியன்) ஏலங்குழலிக்கும் (தமிழறியும் பெருமாள்) நக்கீரர் விவாகத்தை நடத்திவைக்கிருர். இந்தக்கதை இப்போது படம் பிடிக்கப்பட்டிருக்கிறது.

எம். ஆர். சந்தானலக்ஷ்மி, வி. எ. செல்லப்பா, டி. எஸ். துரைராஜ். காளி என். ரத்னம் முதலியோர் நடிக்கும் இப்படம் உமா பிக்சர்ஸார் தயாரித்தது. திருச்சி ஸ்ரீ தியாகராஜ பிலிம்ஸார் இதன் பூரண உரிமையைப்பெற்றுள்ளார்.



தென்னிந்திய வர்த்தக சங்கத்தாரால் சென்னை போர்ட் ட்ரஸ்ட் போர்ட் மெம்பராக ஸ்ரீ மணியன் நடேசன் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிருர். இவர் ராவ் பகதூர் ஜீ. ஏ. நடேசனின் குமாரர்.

அரிய தமிழ் நூல்கள்

ரூ. 6—0—0
திருப்புகழ் விருத்தியுரை
(கிளேஸ் பதிப்பு)

ரூ. 5—0—0
கதைக் கோவை — தொகுதி II
(பெதர் வெயிட் பதிப்பு)

ரூ. 4—0—0
கதைக் கோவை — தொகுதி II
(கிளேஸ் பதிப்பு)

ரூ. 4—8—0
கதைக் கோவை — தொகுதி I
(பெதர் வெயிட் பதிப்பு)

ரூ. 3—8—0
கதைக் கோவை — தொகுதி I
(கிளேஸ் பதிப்பு)
திராவிட வேதத் திரட்டு
(கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் பி. ஏ., 3000 பாடல்கள்)

ரூ. 3—4—0
மாதவீ கங்கணம்
(தொகுதி 1 & 2)

ரூ. 3—0—0
ஸ்ரீமத் பகவத் கீதை

ரூ. 2—8—0
உல்லாஸ வேளை
(எஸ். வி. வி. எழுதியது)
போஜ சரித்திரம்

ரூ. 2—4—0
மால்கோஷ்
(15 வங்காளச் சிறு கதைகள்)

ரூ. 2—0—0
ஷண்முகசுந்தரம்
விஜயபாஸ்கரன்
த்வாதச உபநிஷத்
முப்பெரு வீரர்
அரங்கசாமி ஐயங்கார்
திவ்ய ப்ரபந்த ஸாரம்

ரூ. 1—8—0
ஆனந்தமடம், விஷ விருக்ஷம்
தேவி சௌதுராணி
கிருஷ்ணகாந்தன் உயில்
விஜயா, குமுதினி
மாயா விநோதினி, பைரவி
வெறும் கோயில், மண்ணசை
திக்கற்ற இரு குழந்தைகள்
கோனஷ்டையின் கதைகள்

ரூ. 1—4—0
இளைஞன் கனவு
வாழ்க்கையே வாழ்க்கை
கங்கைகொண்ட சோழன்
பல்லவ மகேந்திர வர்மன்

ரூ. 1—2—0
மங்கையர்க்கரசியின் காதல்
ராஜாஜி குட்டிக் கதைகள்
கன்யா குமாரி, சந்தனக்காவடி
சக்ரவாகம், கனகாம்பரம்
தோட்டியைமணந்த அரச குமாரி
பவழமாலை, வெண்தாமரை
ஸ்ரீமத் பாகவத ஸாரம்

ரூ. 1—0—0
கவி ரவீந்த்ரநாத் டாகூர்

மேற்கண்ட நூல்கள் சென்னை விலைக்கே கிடைக்கும். எங்களிடம் வேறு பல நூல்களும் கிடைக்கும். வேண்டுவோர்க்கு புத்தக விலைப்பட்டி உடனே அனுப்பப்படும்.

அல்லயன்ஸ் கம்பெனி,
(கிளை ஆபீசு)
நியூ டவுன் → காரைக்குடி

மஹா வீர ஜயந்தி

★

தியாகராய நகரில் ஜைனர் சங்க ஆதரவில் மஹா வீர ஜயந்தி ஜஸ்டிஸ் ஸ்ரீ என். சந்திரசேகர அய்யர் தலைமையில் கொண்டாடப்பட்டது.

(என். என். பி. எஸ்.)

★

போட்டோ படக் காட்சி

★

நகரில் ஒய். எம். ஸி. எ. கட்டிடத்தில் போட்டோ படக் காட்சியை பித்தாபுரம் யுவராஜா திறந்து வைத்தபோது எடுக்கப்பட்ட படம்.

★



பிரிவு உபசாரம்

★

வில்லிவாக்கம் ஸ்டேஷன் மாஸ்டர் ஸ்ரீ கே. விஸ்வநாதய்யர் வெளியூர் மாற்றப்பட்டதை முன்னிட்டு அவருக்கு சமீபத்தில் பிரிவு உபசாரம் நடத்தப்பட்டது.

★